# சிரிக்க வைக்கிறார்

## கி.வா.ஜ





அல்லயன்ஸ்

# சிரிக்க வைக்கிறார்

கி.வா.ஜ.

அல்லயன்ஸ்
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

# சிரிக்க வைக்கிறார்

## கி.வா.ஜ.

**அல்லயன்ஸ்**

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

உரிமை பதிப்பு
முதற் பதிப்பு – 1994
இரண்டாம் பதிப்பு – 1998
மூன்றாம் பதிப்பு – 2002

© ஆசிரியருக்கு

விலை : ரூ. 35-00

**அல்லயன்ஸ் கம்பெனி**
244, ராமகிருஷ்ணா மடம் சாலை
தபால் பெட்டி எண் 617
மயிலாப்பூர், சென்னை - 600 004
தொலைபேசி : 494 1314

Laser Typesetting at:
DBS Systems, Chennai - 18.

Printed at:
Jai Ganesh Offset Printers, Chennai - 4.

# முன்னுரை

அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சியிலிருந்து அரசியல் வரை இன்று ஏராளமான வேடிக்கைகள் நிகழ்கின்றன. காலையில் ஆபீசுக்கு பஸ்ஸை பிடிக்க அவசரமாக ஒருவர் ஓடி வருகிறார். ஆனால் அவர் வருவதற்குள் பஸ் சென்று விடுகிறது. ஓடி வந்தவருக்கு மன வேதனை; ஆனால் அதை பார்ப்பவர்களுக்கு வேடிக்கை. இதை நேரடியாக இப்படிச் சொன்னால் இதில் ஹாஸ்யம் இல்லை. ஆனால் அதையே, ஒருவர் மூச்சு இறைக்க இறைக்க கையில் பையுடன் ஓடி வந்தார். வரும் போது அவர் மதியம் உணவிற்காக பையில் வைத்திருந்த டிபன் பாக்ஸ் சாய்ந்து விட்டது. அதையும் அவர் கவனிக்க வில்லை. அவர் சட்டைப் பையில் வைத்திருந்த சில்லறைகள் எல்லாம் சிதறுகின்றது. பஸ்ஸில் சில்லரை கொடுக்காவிட்டால் கீழே இறக்கி விடுவானோ? ஆபிஸுக்கு நேரத்தில் செல்ல வேண்டுமே! சிதறிய சில்லறையை கையில் எடுத்துக் கொண்டு அவசரமாக ஓடி வருகிறார். ஒரு கையில் சில்லரை, மறு கையில் பை! அந்த நேரத்திலும் பஸ்ஸில் ஏற வேண்டும் என்ற அவரது அவசரம்! ஆனால் அவர் அருகில் ஓடி வரும் போது கண்டக்டர் விஸில் கொடுத்து விடுகிறார். வந்தவருக்கு ஏமாற்றம்! இப்படி பல வருணனைகளுடன் சொல்லும் போது அதில் ஒரு ஹாஸ்யம் இருக்கிறது. இப்படித் தான் எஸ்.வி.வி., தேவன் போன்ற ஹாஸ்ய எழுத்தாளர்கள் எழுதினார்கள்.

கி.வா.ஜ. அவர்கள் எப்போதும் நண்பர்களுடனோ, மேடையிலோ பேசும் போது இப்படிப்பட்ட ஏராளமான, சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற் போல் இரு பொருள்பட பல துணுக்குகளைச் சொல்லியதுண்டு.

இவை பெரும்பாலும் பல பத்திரிகைகளிலும் வெளி வந்ததுண்டு. இவற்றை சிலேடை என்பார்கள். ஆனால் எந்தப் பெயர் சொல்லி அழைத்தாலும் இவை சிரிப்பை வரவழைக்கக் கூடியவை தான். இந்த ஆற்றல் கி.வா.ஜ. அவர்களிடம் நிரம்பி இருந்தது. அவர் ஒரு ஆசு கவி.

இவற்றை பெரும்பாலும் கி.வா.ஜ. அவர்களின் மருமகன் **திரு. இராம சுப்ரமணியம்** அவர்கள் தொகுத்தார்கள். பின்பு **அல்லயன்ஸ் சீனிவாசன்,** கி.வா.ஜ. வின் விசிறிகளை சந்தித்த போது சிலவற்றை தொகுத்தார். மேலும் **திரு.சங்கரிபுத்திரன்** அவர்கள் தொகுத்ததையும் சேர்த்துக் கொண்டு உங்களுக்கு இதை ஒரு புத்தக வடிவில் கொடுப்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்.

சில துணுக்குகளுக்கு, உடல்நிலை சரியாக இல்லாத நேரத்திலும், கி.வா.ஜ.வுக்கு செய்யும் தொண்டு என்று, சித்திரம் வரைந்து கொடுத்த **ஓவியர் சாரதி** அவர்களுக்கும் நன்றி!

வாசகர்களை என்றென்றும் சிரிப்பில் ஆழ்த்த வேண்டும் என்று கி.வா.ஜ. அவர்களின் துணுக்குகளை தொகுத்த இராம சப்ரமணியம், சங்கரிபுத்திரன் ஆகியோருக்கும் எங்களுடைய நன்றி.

**- பதிப்பகத்தார்.**

இந்தப் புத்தகத்தைப் படிக்கும் அன்பர்கள் இதில் வராத இவரது துணுக்குகள் இருந்தால் எங்களுக்கு அனுப்புங்கள். அவற்றையும் அடுத்த பதிப்பில் சேர்த்துக் கொள்கிறோம். இது ஒரு தாழ்மையான வேண்டுகோள்.



# சிரிக்க வைக்கிறார் கி.வா.ஜ.



## மாசம்பத்து

மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்களிடம் தமிழ் பயில்வதற்கு, கி.வா.ஜ. 1927-ஆம் ஆண்டு வந்து சேர்ந்தார். 1928-ஆம் ஆண்டு முதல் முதலாக ஐயரவர்களுடன் திருப்பனந்தாளுக்குப் போயிருந்தார். அங்குள்ள காசி மடாலயத்துத் தலைவரிடம் ஐயரவர்கள் இவரை அறிமுகப்படுத்தி, "இவர் ஆசு கவி; சமஸ்யை கொடுத்தால் உடனே பாடி முடிப்பார்" என்றார்கள். அப்போது அங்கே மடாதிபதியாக இருந்தவர் ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்கத்தம்பிரான் சுவாமிகள். அவர் ஐயரவர்களிடம் தமிழ் பயின்றவர். அவர் கி.வா.ஜ.வுக்கு ஓர் ஈற்றடி கொடுத்து வெண்பா பாடச் சொன்னார். உடனே இவர் வெண்பாவை இயற்றிச் சொன்னார்.

அதைக் கேட்டு மகிழ்ந்த மடாதிபதியவர்கள், "என்ன என்ன படிக்கிறாய்?" என்று விசாரித்தார். பிறகு மடத்துக் காரியஸ்தரிடம் சொல்லி ரூ.120 கொண்டு வரச் சொன்னார். அதை இவரிடம் கொடுத்து, "மாதம் பத்து ரூபாய் வீதம் வைத்துக் கொள்க. ஒவ்வோராண்டும் இத்தொகை கிடைக்கும்" என்றார்.

அதை வாங்கிக் கொண்ட இவர்,"மாசம் பத்தா? மா சம்பத்து அல்லவா?" என்றார். (மா சம்பத்து – பெரிய செல்வம்)

## தையற் யந்திரம்

உஷா தையல் யந்திரத்தின் விளம்பரத்தை எங்கும் ஒட்டியிருந்தார்கள். ஒரு பெண் அந்த யந்திரத்தின் முன் அமர்ந்து தைப்பது போலப் பெரிய வண்ணப் படம் போட்ட சுவரொட்டி கள் எங்கும் காணப்பட்டன. ஒரு நண்பர், "அந்தச் சுரொட்டி யைப் பார்த்தீர்களா?



எவ்வளவு அழகாக இருக்கிறது!" என்று இவரிடம் சொன்னார். தையல் யந்திரம் என்பதற்கு ஏற்ற பொருளை அறிந்து படம் எழுதியிருக்கிறார்கள்!" என்றார் இவர்.

(தையல்- தைத்தல், பெண்).

## தை, தை

பையன் சைக்கிள் வாங்கித் தர வேண்டும் என்று தந்தையை நச்சரித்துக் கொண்டிருந்தான். "தை பிறக்கட்டும்; வாங்கித் தருகிறேன்" என்று தகப்பனார் சொல்லியிருந்தார். தை மாதம் பிறந்து விட்டது. அவரைப் பார்க்க இவர் போயிருந்தபோது பையன் தந்தையிடம், "தை மாதம் பிறந்து விட்டதே!" என்று முனகினான். "என்னடா குதிக்கிறாய்? பணம் கண்டு பிடித்தல்லவா வாங்க வேண்டும்?" என்றார் தந்தை.

"என்ன சமாசாரம்?" என்று இவர் கேட்கத் தந்தை செய்தியை விளக்கி, "கஷ்டம் தெரியாமல் குதிக்கிறான்" என்று சொன்னார். "ஆமாம்; அவன் தை தை என்றுதான் குதிக்கிறான்" என்றார் இவர்.

## கயிறு விடுதல்

சீர்காழியிலிருந்து காரில் மாயூரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார் இவர். அப்போது இரண்டு மாடுகளைக் கட்டிப் பிடித்தபடி ஒருவன் சாலையோரத்தில் வந்தான். மாடுகள் எந்தச் சமயத்தில் குறுக்கே வந்து விடுமோ என்று டிரைவரும் பிறரும் பயந்தார்கள். கார் மெதுவாகப் போயிற்று. அப்போது மாட்டுக்காரன் கயிற்றை விடவே, மாடுகள் வேகமாக எதிர்ப்பக்கத்தில் ஓடி விட்டன. அதுகண்டு காரில் இருந்த அன்பர் "அப்பாடி! கயிற்றை விட்டானே!" என்று ஆறுதல் பெருமூச்சு விட்டார். "உங்கள் ஊர்க்காரர்களுக்குக் கயிறு விடக் கற்றுத் தர வேண்டுமா?" என்ற கேள்வியை எழுப்பினார் இவர்.

(கயிறு விடுதல் – பொய் கூறுதல்; கயிற்றை விட்டு விடுதல்.)

## பாயசமும் கொல்லுமோ?




பம்பாயில் பேசப் போயிருந்தபோது ஒரு வீட்டில் உண்ண அழைத்திருந்தார்கள். இவர் போயிருந்தார். அங்கே மிகவும் அருமையாகப் பால் பாயசம் பண்ணியிருந்தார்கள். ஒரு கரண்டி, இரண்டு கரண்டி

விட்டார்கள்; மூன்றாவது கரண்டியும் விட்டு விட்டார்கள்; இவருக்குத் திணறியது. மேலும் விட வந்தார்கள். இவரால் பொறுக்க முடியவில்லை, "பாய்சன் தான் கொல்லும்; பாயசமும் கொல்லுமோ?" என்று கேட்டார்; உடனே நிறுத்தி விட்டார்கள்.

(பாய்சன்; Poison - விஷம்)

## குமரன் அகத்தியர் ஆனான்

தூத்துக்குடியில் இவர் பேராசிரியர் சிவராம கிருஷ்ணன் வீட்டில் தங்கியிருந்தார். அப்போது திருநெல்வேலியிலிருந்து சில அன்பர்கள் இவரைக் காண வந்தார்கள். பேசிக் கொண்டிருந்தார்கள் அப்போது சிவராமகிருஷ்ணனுடைய இரண்டாம் பிள்ளை குமார் எதையோ தின்று கொண்டிருந்தான். வந்த அன்பர்களில் ஒருவர், "என்ன தம்பி தின்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு இவர், "அகத்தியர் ஆகிக் கொண்டிருக்கிறான்" என்றார். " என்ன?" என்று கேட்ட அன்பருக்கு விளக்கம் வந்தது; "அகத்தியர் கடலை உண்டார்; இவனும் கடலை உண்கிறான்."

(கடலை _ கடலினை, கடலையை.)

## முதல் தரம்



ஒரு கூட்டத்தில் இவர் தலைமை தாங்கினார். அந்தச் சபையில் ஓர் அன்பர் பேசினார். அவர் பேசி முடிந்தவுடன் இவர் அவரைப் பார்த்து, "நீங்கள் இந்தச் சபைக்கு வந்ததுண்டோ?"

என்று கேட்டார். "இது மூன்றாந்தரம்" என்றார். இவர், "ஆனாலும் பேச்சு மட்டும் முதல்தரம்" என்று கூறி அவரைக் கிளு கிளுக்க வைத்தார்.

## பருத்தித் துறை

யாழ்ப்பாணத்தில் பருத்தித் துறை என்ற ஊர் ஒன்று இருக்கிறது. அங்கே ஒரு பள்ளிக்கூடத்தில் இவர் பேசப் போயிருந்தார். கூட்டத்துக்கு வந்திருந்த புலவர் ஒருவர் தாம் இயற்றிய நூல் ஒன்றை இவரிடம் அளித்தார். உடனே இவர், "இடத்துக்கு ஏற்ற கொடை இது" என்றார். "எப்படி?" என்று புலவர் கேட்க, "இது பருத்தித் துறை அல்லவா? இங்கே நூல் கிடைப்பது பொருத் தந்தானே?" என்றார் இவர்.

## தையலும் நூலும்

யாழ்ப்பாணத்தில் முன்பு ஈழகேசரி என்ற பத்திரிகையைப் பொன்னையா என்பவர் நடத்தி வந்தார். அவர் தம் அலுவலகத்துக்கு வர வேண்டுமென்று இவரை அழைத்திருந்தார். இவர் போனார். பண்டித கணேசையர் அவர்கள் வெளியிட்டிருந்த தொல்காப்பியப் பொருளதிகார உரையைப் பொன்னையா தம்முடைய திருமகள் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டிருந்தார். இரண்டு தொகுதிகளாக வெளியாயிற்று. இவர் வந்தபோது அந்தத் தொகுதிகளைத் தம் பெண் புவனேசுவரியைக் கொடுக்கச் சொல்லிப் படம் எடுக்கச் செய்தார். அந்தப் பெண்ணிடம் புத்தகத்தை வாங்கிக் கொண்ட இவர், "தையல் வழங்கும் நூலை பெற்றேன். பொருத்த மானதுதானே?" என்றார்.

## கருடர்

திருப்பூரில் பேசப் போயிருந்தபோது திருப்பணி நடந்து கொண்டிருந்த பெருமாள் கோவிலுக்கு அன்பர்கள் அழைத்துச் சென்றார்கள். சுவர்கள் எழும்பியிருந்தன. மேல் தளம் போடவில்லை, "ஏன் இன்னும் மேலே கட்டவில்லை" என்று கேட்டார் இவர். "கருடர் கிடைக்கவில்லை" என்றார் அன்பர். இவர் கேட்ட கேள்வி, பெருமாளுக்குக் கருடர் கிடைக்க வில்லையா? ஆச்சரியந்தான்!" (கருடர் - உத்தரம், கருட பகவான்.)

## பல்கலைக் கழகமும் டிகிரியும்

தூத்துக்குடியில் இருபது நாள் கந்தபுராணச் சொற்பொழிவு ஆற்றினார் இவர். வ.உ.சி. கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் திருச்சி, மதுரை ஆகிய ஊர்களுக்குப் போய்விட்டு வந்திருந்தார். அங்கெல்லாம் வெயில் எப்படி இருக்கிறது?" என்று கேட்டார் இவர்.

"திருச்சியைவிட மதுரையில் வெயில் அதிகம். இரண்டு டிகிரி கூடவே இருக்கிறது."

"பல்கலைக் கழகம் இருக்கிறதல்லவா?"

(டிகிரி – வெப்ப அளவு, பட்டம்.)

## முன்னவர்

ஒரு கூட்டத்துக்கு இவருடைய அன்பர் திரு ச.கு. கணபதி ஐயர் வந்திருந்தார். கூட்டம் முடிந்தவுடன் சிற்றுண்டி தந்தார்கள். முதலில் "இவரிடம் கொடுத்

தார்கள். இவர் உடனே, "இதோ முன்னவர் கணபதி; அவருக்குக் கொடுங்கள்" என்றார். அவர், "முன் அவர்; இப்போது இவர்தாம்" என்று இவரைச் சுட்டிக் காட்டினார். "முன் பின் தெரியாமல் சொல்லிவிட்டேனே!" என்று வருந்துவது போலச் சொல்லிச் சிரிக்க வைத்தார் இவர்.

## காலையும் மாலையும்

ஒருருக்குப் பேசப் போனபோது ரெயில் வண்டியில் சென்று காலையில் இவர் அங்கே இறங்கினார். இவருக்குச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மாலையிட்டு வரவேற்றார்கள். இவர், "ஏது? காலையிலே மாலை வந்துவிட்டதே!" என்றார்.

## பூபாரம்

பேசிவிட்டு வெளியில் வரும்போது இவருக்குப் போட்ட பெரிய பூமாலையை இவருடைய அன்பர் பேராசிரியர் சிவராமகிருஷ்ணன் தூக்கி வந்தார். அதை தூக்கி வரும்போது சிறிதே சிரமப்படுவது போல இருந்தார். "ஏன் கஷ்டப்படுகிறீர்கள்? பூபாரம் தாங்கவில்லையோ?" என்ற கேள்வி இவரிடமிருந்து எழுந்தது.

## பிரம்படி

ஒரு வீட்டில் பிரம்பு நாற்காலியும் வேறு நாற்காலிகளும் போட்டிருந்தார்கள். இவர் அங்கே போனபோது பிரம்பு நாற்காலியில் உட்காரச் சொன்னார்கள். அதில் மோட்டுப் பூச்சி இருக்குமோ என்ற பயம் இவருக்கு. ஆனால் அதைச் சொல்லாமல், "பிரம்படி என்றால் எனக்குப் பயம்" என்றார். "அப்படி என்றால்?" என்று அன்பர் கேட்டபோது, "உட்காரும்

இடத்தில் அடியில் பிரம்புதானே இருக்கிறது?" என்று தெளிவித்தார் இவர்.

## பிட்டும் அடியும்



நாகர்கோயிலில் ஒரு சமயம் இந்துக் கல்லூரியில் பேசப் போயிருந்தார் இவர். கூட்டம் முடிந்த பிறகு சிறு விருந்தளித்தனர். தமிழ் ஆசிரியர்கள் எல்லாரும் வந்திருந் தார்கள். மற்றச் சிற்றுண்டிகளுடன் ஆளுக்கு ஒரு நேந்திரம் பழமும் வைத்தார்கள். அப்போது ஓராசிரியர் தமக்கு வைத்த பழத்தைப் பாதியாக ஒடித்து ஒரு பாதியை மகாலிங்கம் என்ற தமிழ் விரிவுரையாளருக்குக் கொடுத்தார். இவர், "சொக்கலிங்கத்துக்குப் பிட்டுக் கொடுப்பார்கள். நீங்கள் மகாலிங்கத்துக்குப் பிட்டு கொடுக்கிறீர்களே!" என்றார். அதை வாங்கிக் கொண்ட மகாலிங்கம், "எது கொடுத்தாலும் சரி; அடி கொடுக்காமல் இருந்தால் சரி" என்றார். காம்பு உள்ள பகுதியைத்தான் அவருக்குக் கொடுத்திருந்தார். ஆகையால் உடனே இவர், "அடியுந்தானே கொடுத்திருக்கிறார்?" என்றார். (பிட்டு- விண்டு, பிட்டமுது. அடி-அடிப்பாகம், அடிக்கும் அடி.)

## கூடப் படித்தவர்

விவேகானந்தர் கல்லூரியில் அமரர் டி.என். சேஷாத்திரி முதல்வராக இருந்தார். அவரும் இவரும் உயர்நிலைப் பள்ளியில் ஒன்றாகப் படித்தவர்கள்.

விவேகானந்தர் கல்லூரிக்குப் பேசப் போயிருந்தார் இவர். இவரை அறிமுகம் செய்து வைக்கும்போது திரு.சேஷாத்திரி, "இவரும் நானும் கூடப் படித்தோம்" என்றார். இவர் பேசும்போது, "இவர்கூடப் படித்தார்; நான் குறையப் படித்தேன்" என்றார்.

## முன்னேற்றம்

அன்பர்கள் ஒரு கூட்டத்துக்கு அழைத்துச் செல்லக் காருடன் வந்திருந்தார்கள். ஒருவர்,

"ஐயா, நீங்கள் முன்னேறுங்கள்" என்று சிலேடையாகச் சொன்னார். இவர் உடனே, "தெரியும். தெரியும், உங்கள் திருட்டுத்தனம்! நான் உங்களுக்குப் புறங்காட்ட வேண்டும் என்பது உங்கள் ஆசை" என்று கூறிச் சிரிக்க வைத்தார்.

## கனியும் காயும்

டில்லி மாநகரில் தமிழ் விழா நடைபெற்றது. அதில் கி.வா.ஜ. ஒரு பரிசு பெற்றார். அப்போது இவருடன் சில நண்பர்களும் இருந்தார்கள். தமிழிசை மணி ஆதிசேஷையர் என்னும் சாகித்தியர் கர்த்தா அவர்களில் ஒருவர். அவரும் இவரும் ஓர் அன்பர் வீட்டுக்குப் போனார்கள். அங்கே முற்றத்தில் தேங்காய்த் துண்டுகளைத் தனியாகவும் அதற்கு அருகில் மிளகாய் ப் பழத்தைத் தனியாகவும் உலர்த்தியிருந்தார்கள். ஆதிசேஷையர் தேங்காயை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். கண்ட இவர், "பழம் இருக்கக் காயை தின்கிறீர்களே; கனியிருப்பக் காய் கவர்ந்தற்று என்று குறளின்படி யிருக்கிறீர்களே!" என்றார்.

## ரசமும் பதமும்


ஒரு வைணவர் இவரைத் தம் வீட்டுக்கு விருந்துண்ண அழைத்தார். வைணவர்கள் ரசத்தைச் சாற்றமுது என்று தான் சொல்வார்கள். ஆகவே இவர், "உங்கள் வீட்டில் ரசம் இல்லாத சாப்பாடல்லவா?" என்றார். "என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? சாற்றமுது உண்டே!" என்றார் அன்பர்.

"சாற்றமுதுதானே? ரசம் இல்லையே?"

"பதந்தானே இல்லை?"

"ரசமும் இல்லை; பதமும் இல்லை. எதற்காக அந்தச் சாப்பாடு?"

## நாலுக



'தினமணி' அலுவலகத்தில். நவீனன் எழுதிய 'அண்ணாவின் வரலாறு' என்ற நூலை வெளியிட்டார்கள். அதற்கு மாண்புமிகு கலைஞர் கருணாநிதி தலைமை தாங்கினார். இவரைப் பேசச் சொல்லியிருந்தார்கள். இவர் பேசியதில் ஒரு பகுதி: "அண்ணா மூன்று க அளித்தார் என்று அவருடைய தம்பிமார்கள் சொல்வார்ர்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்றையும் அவர் கட்சிக்கு

அளித்தார் என்று பாராட்டுவார்கள். நாலாவது க வையும் வழங்கியிருக்கிறார். அவர்தாம் கருணாநிதி."

## சின்னப்பா தேவர்

கலைவாணர் அரங்கில் கலைஞர் கருணாநிதிக்கு ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. சின்னப்பா தேவர் பொன்னாடை போர்த்தினார். வேறு பலரும் பேசினார்கள். கி.வா.ஜ.வும் பேசினார். "சின்னப்பா தேவர் சொல்கிறார்" என்று தொடங்கினார். எல்லாரும் ஆவலாக என்ன சொல்கிறார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். "மிகவும் சின்னப்பா, குறள். அதைப் பாடியவர் திருவள்ளுவ தேவர். அந்தச் சின்னப்பா பாடிய தேவராகிய சின்னப்பா தேவர் கருணாநிதியைப் பற்றிச் சொல்கிறார். கருணாநிதி என்பதற்குச் சரியான தமிழ், அருட்செல்வம். 'அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்' என்று சொல்கிறார். நாம் பெறும் செல்வங்களிலெல்லாம் கருணாநிதிதான் பெரிய செல்வம் என்கிறார்" என்று இவர் விளக்கினார்.

## சவுக்கடி

காட்டுப்பள்ளியில் ஆசாரிய சுவாமிகள் எழுந்தருளி யிருந்தார்கள். சென்னையிலிருந்து பக்கிங்ஹாம் கால்வாயில் போட்டில் அந்த ஊருக்குப் போக வேண்டும். கடற்கரையில் இருக்கிறது அந்த ஊர். தனியே சாலை இல்லை. மணலில் ஜீப்பில் போகலாம். மணற்பரப்பில் சவுக்குச் செடிகள் இருக்கின்றன.

இவர் போட்டுக்காரனிடம் போக வரப் பேசிக் கொண்டு காட்டுப் பள்ளி சென்றார். சுவாமிகள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆகையால் சிறிது

நேரம் தங்க வேண்டியிருந்தது. அப்போது இரண்டு ஜீப்புகளில் மின்சார வாரியத்தைச் சேர்ந்த மேலாளர் திரு. திருநாவுக்கரசும், உயர்நீதி மன்ற நடுவர் திரு. கைலாசமும் அவர் மனைவி ஸ்ரீமதி சௌந்தரம் கைலாசமும் வேறு சிலரும் சுவாமிகளைத் தரிசனம் செய்ய வந்தார்கள். திரு. திருநாவுக்கரசு இவரிடம், "திரும்புகாலில் எங்களுடன் ஜீப்பில் வந்துவிடுங்கள். பேசிக் கொண்டே போகலாம்" என்றார். ஒப்புக் கொண்டார். சுவாமிகளைத் தரிசித்துக் கொண்டு புறப்பட்டார்கள். இடப் பக்கத்தில் இருந்து ஓட்டும் ஜீப் அது. அதில் பின்னே இவரும் இஞ்சினீயரும் அமர்ந்தார்கள். முன் பக்கத்தில் டிரைவரும் அவருக்கு அடுத்தபடி ஜட்ஜும் அவரை அடுத்து ஸ்ரீமதி சௌந்தரம் கைலாசமும் அமர்ந்திருந்தார்கள். வண்டி போகும்போது சவுக்குக் செடியின் வளார்கள் வண்டிக்குள்ளே புகுந்து வந்தன. அப்போதெல்லாம் சௌந்தரம் தம் கணவர் பக்கமாகச் சாய்ந்தார். அப்போது இவர், "ஏன்? சவுக்கடிக்குப் பயப்படுகிறீர்களோ? ஆனாலும் ஜட்ஜ் சாய்க்கால் உங்களுக்கு இருக்கிறது!" என்றார்.

### பழம்பால்



ஓர் அன்பர் வீட்டுக்கு இவர் சென்றிருந்தார். "என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டார் அன்பர். "நான் காபி சாப்பிடுவதில்லை; பால் தாருங்கள்" என்றார் இவர்.

"பழமும் கொஞ்சம் சாப்பிடுங்கள்" என்றார் அன்பர்.

"முதலில் பால் தாருங்கள்; பிறகு பழம் கொடுங்கள்" என்கிறார் கி.வா.ஜ.

"ஏன்?" என்று அன்பர் கேட்டதற்கு வந்த பதில், "அடுத்தபடி ஒரு நண்பர் வீட்டுக்குப் போகப்போகிறேன். அங்கே ஏதாவது சாப்பிடக் கொடுப்பார்கள். இங்கே சாப்பிட்டாய் விட்டது, வேண்டாம் என்பேன். 'என்ன சாப்பிட்டீர்கள்?' என்று கேட்பார்கள். நீங்கள் முதலில் பழமும் பிறகு பாலும் தந்தால் 'பழம்பால் சாப்பிட்டேன்' என்பேன். அவர்கள், 'ஏன், அங்கே புதுப்பால் கிடைக்கவில்லையா?' என்று கேட்பார்கள். அப்படிக் கேட்க வகையின்றி, 'பால் பழம் கொடுத்தார்கள்' என்று சொல்லலாம் அல்லவா?"

## நீடாமங்கலம்

நீடாமங்கலத்துக்கு இவர் போயிருந்தார். ஊர்களின் பெயர்களுக்கு என்ன காரணம் என்று அங்கங்கே விசாரித்துத் தெரிந்து கொள்வது இவர் வழக்கம். ஓர் அன்பரை, "இந்த ஊருக்கு நீடாமங்கலம் என்ற பெயர் ஏன் வந்தது?" என்று கேட்டார். அவர், "தெரியாது; ஆனால் ஓர் ஆசாமி சொன்னதைக் கேட்டுக் கோபமாக வந்தது" என்றார்.

"அவர் என்ன சொன்னார்?"

"அவர் அயலூர்க்காரர். இந்த ஊரில் யாரோ அவருக்கு வேண்டாதவர் இருக்கிறார்போல் இருக்கிறது. இந்த ஊரில் மங்கலம் நீடாது, நீடாத மங்கலம் இது என்று சொல்லி விட்டுப் போனார். அதுமுதல் இந்தப்

பெயருக்கு நல்ல அர்த்தம் சொல்ல முடியாதா என்று நான் ஏங்குகிறேன்."

"இன்று சொற்பொழிவில் விளக்குகிறேன்" என்றார் இவர். அப்படியே சொற்பொழிவைத் தொடங்கும் போது, "இந்த ஊரில் எப்போதும் மங்கலம் நீண்டு வாழும், நீடு ஆம் மங்கலம் உடைய ஊர் இது", என்று விளக்ினார்.

## என் கால்




அந்தப் பையன் ணகரத்தை னகரமாகவும், னகரத்தை ணகரமாகவும் உச்சரிப்பான். மன்னனை மண்ணன் என்பான்; விண்ணவரை வின்னவர் என்பான். அவன் கால் வாய்பாடு, அரை வாய்பாடு சொல்லிக் கொண்டிருந்தான். "எண் கால் இரண்டு" என்று சொல்ல வேண்டியவன், "என் கால் ரெண்டு" என்று தவறாக உச்சரித்துச் சொன்னான். அவன் தந்தை, "முட்டாள்! சரியாகச் சொல்லடா!" என்றார்.

"ஏன் கோபிக்கிறீர்கள்? அவன் சரியாகத்தானே சொல்கிறான்?" என்று அருகில் இருந்த இவர் கேட்டார்.

"ணவுக்கும் னவுக்கும் வித்தியாசம் தெரியாமல் சொல்கிறானே!" என்றார் தந்தை. அவன் கால் இரண்டு;

அதைத்தான் என் கால் ரெண்டு என்று சொல்கிறான். அதில் என்ன தவறு?" என்று திருப்பிக் கேட்டார் இவர்.

### மானம் கெட்ட தயிர்




சிவகாசிக்குச் சென்றிருந்த போது வழக்கமாகத் தங்கும் இடத்தில் இவருக்கு விருந்துணவு வழங்கினார்கள். இவர் வருவதை அறிந்து நன்றாகக் காய்ச்சிய பாலில் பிரை குத்தி வைத்திருந்தார்கள். தயிர் ஒரே கட்டியாக இருந்தது. கால் அங்குலம் ஆடையுடன் இருந்தது. பிசைந்தவுடனே கையில் வெண்ணெய்ப் பிசுக்கு உண்டாயிற்று. அதை உண்ட இவர் எப்படிப் பாராட்டுவது என்று தெரியாமல் சில கணம் இருந்தார். பிறகு, "நானும் சென்னையிலும் தயிர் உண்ணுகிறேன். ஆனால், அது மானங்கெட்ட தயிர்" என்றார்.

அன்பர்கள் சற்றே யோசித்தபோது, "ஆடை இல்லாத மனிதன் மானங்கெட்டவன். எங்கள் வீட்டுத் தயிரும் அத்தகையதுதான்" என்று விளக்கினார்.

### காலி வீடு

அந்த வீதியில் ஒரு வீட்டில் குடியிருந்தவர் வேறு வீட்டுக்குப் போய் விட்டார். அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர் ஒரு பெரிய மனிதர்; சிவபக்தர். எதிர் வீட்டில் இருந்த அன்பரைப் பார்க்கச் சென்றிருந்த இவர், "அந்த வீட்டில் யார் இருக்கிறார்கள்?" என்று

கேட்டார். அன்பர், "அது இப்போது காலி வீடு" என்றார். "என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? பெரிய சிவபக்தர் வீட்டைக் காலி வீடு என்கிறீர்களே! நியாயமா?" என்று இவர் கேட்டார்.

## இடம் கொடுக்க வேண்டாம்

ஒரு பெரியவர் இவர் வீட்டிற்கு வந்திருந்தார். அப்போது அவரை இவரும் மனைவியும் பணிய வந்தார்கள். இவருடைய மனைவி இவருடைய இடப் பக்கத்திலிருந்து நமஸ்காரம் பண்ண வந்தாள். பெரியவர், "இடம் வேண்டாம்; வலப் பக்கம் வந்து வணங்குங்கள்" என்றார். உடனே இவர், "ஆமாம், பெண்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது; சிவபெருமான் ஒருவன்தான் கொடுக்கலாம்" என்றார். (இடம் – சலுகை, இடப் பக்கம்).

## கண்டு கொண்டு

யாழ்ப்பாணத்தில் பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை என்ற பெரிய புலவர் ஒருவர் இருக்கிறார். ஆழ்ந்த புலமை உடையவர். அவருக்கும் இவருக்கும் நட்புறவு உண்டு. யாழ்ப்பாணத்தைச் சார்ந்த திருநெல்வேலி என்ற இடத்தில் அவர் இருந்து வருகிறார். அவர் கந்த புராணம் தட்ச காண்டத்திற்கு உரை எழுதி வெளியிட்டிருக்கிறார்.

ஒருமுறை இலங்கைக்கு இவர் சென்றிருந்தபோது, பண்டிதமணியைப் பார்த்து விட்டு வரலாம் என்று அவர் வீட்டுக்குப் போனார். அப்போதுதான் அவர் தட்சகாண்ட உரையை எழுதி முடித்திருந்தார். இருவரும் க்ஷேம விசாரணை செய்து கொண்டார்கள். "நான்

தட்சகாண்டத்துக்கு உரை எழுதி முடித்திருக்கிறேன். உங்கள் கையால் தொட்டுக் கொடுங்கள்" என்று பண்டிதமணி சொன்னார். அப்படியே இவர் அதைத் தொட்டு வாழ்த்தினார். பண்டிதமணி கற்கண்டைக் கொண்டு வந்து இவருக்கும் உடன் வந்தவர்களுக்கும் கொடுத்தார். "உங்களைக் கண்டு கொண்டு போகலாம் என்று வந்தேன். இதோ கண்டு கொண்டு போகிறேன்" என்று சொல்லி விடை பெற்றார். (கண்டு – பார்த்து, கற்கண்டு.)

## துவக்கமும் தவக்கமும்




சென்னையில் விக்டோரியா மாணவர் இல்லத்தில் இலக்கிய மன்றத்தின் துவக்க விழா நடைபெற்றது. அதில் இவர் தலைமை தாங்கினார். போட்டி விளையாட்டு ஒன்று நடந்தமையால் விழாச் சற்றுத் தாமதமாகத் தொடங்கியது. வரவேற்ற செயலாளர், "இந்த மன்றத்தின் துவக்க விழாவுக்குத் தலைமை தாங்கும்படி கி.வா.ஜ. அவர்களை அழைத்தோம். அன்புடன் ஒப்புக் கொண்டார். எழுத்துலகின் முடிசூடா மன்னர் இவர்." என்று சொல்லி வரவேற்புக் கூறினார். இவர் முன்னுரையைத் தொடங்கினார். "இன்று இந்த மன்றத்தின் துவக்க விழா; தவக்க விழா ஆகிவிட்டது. என்னை முடிசூடா மன்னன் என்றார். இதோ முடியிருக்கிறதே!" என்று தம் தலையைச் சுட்டிக் காட்டியவுடன் கொல்லென்று கூட்டத்தில் சிரிப்பொலி எழுந்தது.

## ஏடு

ஒரு கல்யாணத்துக்குப் போயிருந்த இவரைச் சாப்பிட்டு விட்டுப் போகும்படி வற்புறுத்தினார்கள். இவர் பந்தியில் அமர்ந்தார். இலை போட்டபொழுது இவருக்கு ஏட்டை ஒருவர் போட்டார். கல்யாணத்தில் முக்கிய உறவினராக இருந்த ஒருவர், "அவருக்கு ஏடு வேண்டாம். நுனியிலை போடுங்கள்" என்றார். "வேண்டாம். ஏட்டுக்கும் தமிழுக்கும் உறவு அதிகம். எங்கள் ஆசிரியருக்கு ஏடு என்றால் மிகவும் பிரியம், இதுவே இருக்கட்டும்" என்று சொல்லி இவர் அதிலே உணவு கொண்டார். (ஏடு – பனையோலை, வாழையிலை).

## அமைச்சரும் நிருபரும்

அமைச்சர் ஒருவர் பேச வந்திருந்தார். அந்தக் கூட்டத்தில் அமைச்சர் வந்ததனால் பல பத்திரிகை நிருபர்கள் வந்திருந்தார்கள். முக்கியமான செய்திகளை அவர் சொல்வார் என்று எண்ணி வந்து உரிய இடத்தில் அமர்ந்திருந்தார்கள். அமைச்சர் பேசத் தொடங்குவதற்கு முன், "நிருபர் வந்திருக்கிறாரா?" என்று கேட்டார். கூட்டத்தில் இருந்த இவர், "அமைச்சருக்குத்தான் அரசரின்மேல் எவ்வளவு அக்க றை?" என்றார். அருகில் இருந்த நண்பர், அரசரா? இங்கே அரசர் யார்!" என்று கேட்டார். "ஆமாம், அவர் நிருபர் வந்திருக்கிறாரா என்று கேட்கவில்லையா? நிருபர் என்பது அரசர் அல்லவா?" என்று இவர் விளக்கினார்.

## முகமதியர்



"அந்த ஊரில் கூட்டம் எப்படி இருந்தது?" என்று இவரை அன்பர் கேட்டார். "கோயிலில் கூட்டம். சைவர்கள் ஏராளமாகக் கூடியிருந்தார்கள். முகமதியர்களும் வந்து கேட்டார்கள்" என்றார் இவர். "முகம்மதியர்களா? சிவன் கோயில் அல்லவா?" என்று வியப்புடன் கேட்டார் அன்பர்.

"ஆமாம்; அவர்களுக்குத் தனியிடமே ஒதுக்கியிருந்தார்கள்."

"ஆச்சரியமாக இருக்கிறதே!"

"ஆச்சரியம் என்ன? முகமதியர் என்றால் யாரென்று நினைத்தீர்கள்? முகமாகிய மதியை உடைய பெண்களையல்லவா சொல்கிறேன்?" என்று விளக்கினார் இவர்.

## ஆடையும் பாலும்

ஓர் அன்பர் வீட்டுக்கு வேறு ஒரு நண்பருடன் இவர் சென்றிருந்தார். அப்போது அங்கே ஒரு குழந்தை நின்று கொண்டிருந்தது. தலைக் கோலம், ஆடை வகை ஆகியவற்றைக் கண்டு அது ஆணா, பெண்ணா என்று தெரியாமல் இருந்தது. உடன் வந்த நண்பர், "இந்தக் குழந்தை ஆணா, பெண்ணா என்று தெரியவில்லையே!"

என்றார். உடனே இவர், "ஆடையை விலக்கினால் பால் தெரியும்" என்றார். (பால் - ஆண்பால், பெண்பால்.)

### பாலும் ஆடையும்

திருக்காட்டுப்பள்ளியை அடுத்த ரங்கநாதபுரத்தில் ஒரு திருமணம். அதில் பேசச் சென்றிருந்தார் இவர். பேசும்போது இடையிடையே தொண்டை வற்றாமல் இருக்கப் பால் தந்தார்கள். பேச்சு முடிந்தவுடன் கல்யாணப் பெண்ணின் தந்தை இவருக்கு ஆடை பரிசளித்தார். இவர், "முன்பு பால் கிடைத்தது; இப்போது ஆடை கிடைக்கிறது" என்றார்.

### உள்ளத்தை

இவர் பேசுகையில் சொன்னது :


அந்தப் பெண் தன்னுடைய அன்பை எடுத்துச் சொன்னாள். காதலனுக்கும் தனக்கும் உள்ள ஒட்டுறவைச் சொன்னாள். அவள் தந்தை அவள் அந்த இளைஞனைக் காதலிப்பதை அறிந்து அவளை மிரட்டிக் கேட்டார்; "உள்ளத்தைச் சொல்; என்ன நடந்தது?" என்றார். "என் உள்ளத்தைத் தான் சொல்கிறேன். உள்ளத்தைத்தான் சொல்கிறேன்; இல்லாததைச் சொல்லவில்லை" என்றாள்.

### மேனாவோடு

இவர் தேவகோட்டையில் சேக்கிழார் திருநாளில் பேசப் போயிருந்தார். அமரர் தமிழ் வள்ளல் மெய்யப்பச் செட்டியார் வீட்டில் தங்கியிருந்தார். அவரை மேனா என்று சொல்வார்கள். செட்டியார் திருவாடானையைப்

பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். "நான் அந்தத் தலத்தைப் பார்த்ததில்லை" என்று இவர் சொல்ல, "இன்றே போய் வரலாம்" என்று தம் காரில் அழைத்துக் கொண்டு அந்தத் தலத்துக்குப் போய் வந்தார் செட்டியார். இவர் தாம் திருவாடானை போய் வந்ததை ஓர் அன்பரிடன் சொன்னார். "எப்படிப் போய் வந்தீர்கள்?" என்று அவர் கேட்டார். "ஜாம் ஜாமென்று மேனாவுடன் போய் வந்தேன். மடாதிபதிதான் மேனாவோடு போக வேண்டுமா?" என்றார் இவர். (மேனா – பல்லக்கு வகை, மெய்யப்பச் செட்டியார்.)

## கையைப் பிடியுங்கள்



இவர் சொல்லும் கதைகளில் ஒன்று:

ஒரு வீட்டில் ஒருவர் விருந்துண்ணப் போனார். ஒரு பெண்மணி பரிமாறினாள். ரசம் பரிமாறியபோது அவர் சாதத்தைக் குழித்துக் கொண்டார். அவருக்கு ரசத்தில் பிரியம் இருப்பதை அறிந்து, பரிமாறிய பெண்மணி "கையைப் பிடியுங்கள்" என்றாள். அவர் உடனே அந்தப் பெண்ணின் கையைப் பிடித்துவிட்டார்!

## வரா, வரா


மிகவும் ஆவலுடன் ஒரு பெண்மணியை எல்லாரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தில்

இவரும் இருந்தார். அப்போது தூரத்தில் அந்தப் பெண்மணி வருவதையறிந்த அவள் குழந்தை மகிழ்ச்சி தாங்காமல், 'வரா வரா' என்று கூவினாள். இவர், "ஏன் வரா வரா என்று கத்துகிறாய்?" என்று சிரித்தபடியே கேட்டார்.

## கண்ணைக் காட்ட

"இவளுக்குக் கண்ணைச் சோதனை செய்து கண்ணாடி போட வேண்டும். டாக்டரிடம் போக வேண்டும்" என்று ஒரு நண்பர் தம் பெண்ணைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். "யார் டாக்டர்?" என்று இவர் கேட்டார். ஆடவராகிய டாக்டர் ஒருவர் பெயரை அன்பர் சொன்னார். "அவரிடம் பல பெண்கள் வந்து கண்ணைக் காட்டுகிறார்கள்" என்று மேலும் சொன்னார். "பெண்கள் கண்ணைக் காட்ட அவர் அவ்வளவு அழகரா?" என்று கேட்டுச் சிரித்தார் இவர்.

## கட்டை வண்டி



ஒரு லாரி நிறையச் சவுக்குக் கட்டைகளை ஏற்றிக் கொண்டு முன்னாலே போய்க் கொண்டிருந்தது. பின்னாலே ஒரு காரில் இவரும் இவர் நண்பர்களும் வந்து கொண்டிருந்தார்கள். லாரிக்காரன் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தான். கார் டிரைவர், "இடம் கொடுக்க மாட்டேன் என்கிறான். எவ்வளவு மெதுவாகப்

போகிறான்!" என்றார். "கட்டை வண்டிதானே? மெதுவாகத்தான் போகும்?" என்றார் இவர்.

## மேல் நாட்டார்

சத்தியாக்கிரகப் போர் நடந்து கொண்டிருந்த காலம். வெள்ளைக்காரர்களைத் தொண்டர்கள் மதிக்காமல் பேசினார்கள். ஒரு தொண்டர் இவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது, "நம்மை அடிமைப்படுத்தி ஆளுகிறார்களே! போயும் போயும் நமக்குக் குமாஸ்தா வேலைதானே கொடுக்கிறார்கள்? கலெக்டரா? வெள்ளைக்காரனுக்குத்தான் அந்த வேலை. இஞ்சினியரா? வெள்ளைக்காரன்தான். மேல் உத்தியோகத்துக்கு இந்தியர்களை நியமிக்கிறார்களா?" என்று காரசாரமாகச் சொன்னார். "ஆம் ஐயா! அவர்கள் மேல் நாட்டார். யாரையும் தமக்கு மேல் நாட்டார்" என்றார் இவர்.

## பால் காகிதம்

இவர் சொற்பொழிவில் சொன்னது:

சென்னையில் மாடுகள் நல்ல புல்லையே தின்கிறதில்லை. காகிதம் முதலியவற்றைத் தின்கின்றன. அதனால் பாலுக்கு நல்ல மணமும் சுவையும் இருப்பதில்லை. ஒரு பையனை, "பால் ஏன் வெளுப்பாயிருக்கிறது?" என்று கேட்டேன். "மாடு காகிதத்தைதத் திண்கிறதனால்!" என்று பதில் சொன்னானன். "காகிதத்தைத் தின்றால் பால் வருமா?" என்று கேட்டேன். "ஆமாம்! அதனால் தானே நாம் எழுதும் காகிதத்துக்குப் பால் காகிதம் என்று பெயர்

வந்தது?" என்றான் அவன். (பால் காகிதம், கரடாக் காகிதம் என்று இரண்டு வகை உண்டு. சுத்த வெள்ளையாக இருப்பது பால் காகிதம்.)

## தேதியூர்

தேதியூர்ச் சுப்பிரமணிய சாஸ்திரிகள் மகா மேதை. வட மொழியில் வல்லவர். புராண இதிகாசப் பிரசங்கங்கள் செய்கிறவர். கடைசிக் காலத்தில் அவர் அதிகமாக வெளியூர்களுக்குப் போகவில்லை. கோபம் உள்ளவராகையால் அவரை வைத்துச் சமாளிப்பது அரிது என்று பலர் அவரை அழைப்பதில்லை.

மயிலை பக்த ஜனசபை என்ற ஒரு சபையை ஏற்படுத்தி அதற்குத் தலைவராக இருந்தார், கி.வா.ஜ. வாரந்தோறும் பஜனை நடைபெறும். ஆண்டுக்கு மூன்று கல்யாண உற்சவம் நடைபெறும். ராதா கல்யாணம், சீதா கல்யாணம், வள்ளி கல்யாணம் என்ற மூன்று. பஜனைகள், கச்சேரிகள், உபந்நியாசங்கள் அந்தக் காலங்களில் நடைபெறும்.

ஒரு முறை தேதியூர்ச் சுப்பிரமணிய சாஸ்திரிகளைப் பேசுவதற்கு அழைத்திருந்தார். அவர் வந்து பேசினார். பேச்சின் முடிவில், "நான் இப்போது காலிதான். எப்போது அழைத்தாலும் வருகிறேன்" என்றார். இவர் நன்றியுரை கூறினார். அப்போது சொன்னது: "ஆண்டவனுடைய புகழைப் பரப்பும் உத்தியோகத்தைச் செய்யும்படி பகவான் இந்தப் பெரியவர்களுக்கு உத்தரவு போட்டிருக்கிறான். இன்ன தேதி, இன்ன ஊர் என்ற வரையறையில்லை. எல்லாத் தேதியும் எல்லா ஊரும் அவன் புகழ் பாடும் உரிமை இந்தத் தேதியூர்ச் சாஸ்திரிகளுக்கு உண்டு. இவர் தம்மைக் காலி என்று சொல்லிக் கொண்டார்; காலி என்றால் பசு. இது மந்தைவெளி; பசுக்கள் உள்ள கோகுலம். கண்ணன்

பஜனை செய்வதால் அவன் இருக்கும் கோகுலம் இது, ஆகையால் இந்தக் காலி அடிக்கடி வரலாம்."

## கோடி வீடு

வெளியூர் ஒன்றில் பேசப் போயிருந்தார். இவரைப் பார்க்க வந்த நண்பர் ஒருவரோடு பேசிக் கொண்டிருந்தார். அவர் புதியதாக அறிமுகமானவர். ஆகையால் அவரைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார். அவருடைய வேலை, குடும்பம் முதலியவற்றைப் பற்றி விசாரித்தார். "வீடு கட்டிக் கொண்டிருக்கிறீர்களா?" என்று கேட்டார். "ஏதோ ஒரு சிறிய வீடு கட்டியிருக்கிறேன். நீங்கள் வந்து ஆசீர்வாதம் செய்ய வேண்டும்" என்றார். "உங்கள் வீடு எங்கே இருக்கிறது?" என்று இவர் கேட்டார். "இந்தத் தெருவின் கோடியில் இருக்கிறது" என்றார் நண்பர். "அப்படியா! ஒரு வீடு என்று சொன்னீர்களே! கோடி வீடு என்று சொல்லுங்கள்" என்று இவர் சொன்னதைக் கேட்ட அவருக்கு வாயெல்லாம் பல்லாயிற்று.

## நடுத்தெரு




எழுத்தாளர் ஒருவர் மயிலாப்பூரில் உள்ள நடுத்தெரு என்ற பெயருள்ள தெருவில் குடியிருந்தார். அவர் பிறகு ஒரு வீடு கட்டிக்கொண்டு போனார். தாம் வீடு கட்டிக் கொண்டு போன செய்தியை இவரிடம் சொல்லிக் கொண்டிருந்தார். இவர், "நல்லவேளை! இதுவரையில் நடுத் தெருவில்

இருந்தீர்கள். இப்போது வீடு கட்டிக் கொண்டீர்கள்" என்றார்.

## கட்டி வருமா?

இவருடைய நண்பர் ஒருவருக்குக் குழந்தைகள் அதிகம். ஒரு நாள் அவர் வீட்டுக்குப் போயிருந்தார். குழந்தைகள் இருவருக்கும் முகத்திலும் உடம்பிலும் உஷ்ணத்தால் கட்டி வந்திருந்தது. "பையன்களுக்குப் பாலும் கீரையும் பழமும் வாங்கிக் கொடுங்கள்; உஷ்ணம் தணியும்" என்றார் இவர். "அதற்கெல்லாம் எங்கே போவது? எனக்குக் கிடைக்கும் சம்பளத்துக்குப் பால் வாங்கிக் கொடுத்தால் கட்டி வருமா?" என்று அவர் குறைந்து கொண்டார். இவர் உடனே "நானும் அதைத்தான் சொல்கிறேன்; பால் வாங்கிக் கொடுத்தால் இப்படிக் கட்டி வருமா என்கிறேன்" என்றார்.

## முந்திரிப் பழம்

வேலூரில் பேசப் போயிருந்தபோது இவருக்கு அன்பர் ஒருவர் திராட்சைப் பழம் வாங்கி வந்து கொடுத்தார். "உங்களுக்குப் பலாப்பழம் பிடிக்கும் என்று சொன்னார்கள். ஒரு பழம் வாங்கிக் கொண்டு வரலாம் என்று எண்ணி வந்தேன். கிடைக்கவில்லை" என்றார். "பரவாயில்லை. அந்த முழுப்பழம் வேண்டாம். இந்த முந்திரிப் பழமே போதும்" என்று இவர் சொன்னவுடன் அவர் புன்னகை பூத்தார்.

## மலைப்பழம்

ஓர் அன்பர் வீட்டுக்கு இவர் சென்றிருந்தார். அப்போது இவருக்கு ஏதாவது தரவேண்டுமென்று எண்ணிய வீட்டுக்காரர், உள்ளே என்ன

இருக்கிறதென்று தேடினார். ஒரே ஒரு மலைப்பழம் இருந்தது. அதையும் சர்க்கரையையும் ஒரு தட்டில் கொண்டு வந்து வைத்து, "தங்களுக்குக் கொடுக்க ஒன்றும் இல்லை. இதை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார். இவர் கூறியது: "அடேயப்பா! இது போதாதா? ஒரு பழமானாலும் மலைப் பழம் அல்லவா?"

## பையன்

திருமணம் ஒன்றை விசாரிக்க இவர் போயிருந்தார். விசாரித்து விட்டு அன்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். புறப்படும்போது தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு இவற்றோடு ஒரு பட்சணப் பொட்டலமும் கல்யாண வீட்டுக்காரர் இவரிடம் தர வந்தார். எல்லாவற்றையும் கையில் எடுத்துச் செல்வது சங்கடமாக இருக்குமென்று எண்ணி ஒரு பையில் அவற்றையெல்லாம் போட்டுக் கொடுத்தார். "பெரியவர்களுக்கு எல்லாவற்றையும் கையில் கொண்டு போவது சிரமமாக இருக்கும் அல்லவா? இப்போது எளிதில் கொண்டு போகலாம். பை உங்களிடமே இருக்கட்டும்" என்று சொல்லிக் கொடுத்தார். வாங்கிக் கொண்ட இவர், "ஆம், நான் பெரியவனாகத்தான் வந்தேன்; இப்போது பையனாகப் போகிறேன்" என்றார்.

## நொடியில்

அன்பர் ஒருவருடன் ஓர் ஊருக்கு இவர் போனார். ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து இரண்டு மைல் வண்டியில் போக வேண்டும். ஒரு குதிரை வண்டியில் போக ஏற்பாடு செய்தார்கள். "குதிரை வேகமாகப் போகுமா?" என்று இவர் கேட்டார். "நொடியில்


கொண்டுபோய் விடுகிறேன்" என்றான் வண்டிக்காரன். வண்டியில் ஏறிப் போனார்கள். வழிநெடுகக் குண்டும் குழியுமாக இருந்தது. "என்னப்பா இது? ரோடு மோசமாக இருக்கிறதே!" என்று உடன் வந்த நண்பர் கேட்டார். "அவன்தான் 'நொடியில் விடுகிறேன்' என்று சொன்னானே; சொன்னபடி செய்கிறான்" என்று இவர் பதில் சொன்னார்.

## சத்தம் அதிகம்

ஒரு சமயம் டில்லிக்கு இவர் போய்க் கொண்டிருந்தார். எக்ஸ்பிரஸ் வண்டி வேகமாகப் போய்க் கொண்டிருந்தது, அதிகமாக இரைச்சலாக இருந்தது. உடன் இருந்த நண்பர், "பேசவே முடியவில்லை. சத்தம் அதிகமாக இருக்கிறது" என்றார். "ஆமாம், இந்த வண்டிக்குச் சத்தம் அதிகந்தானே?" என்றார் இவர்.

(சத்தம் - ஒலி, வண்டிக் கூலி.)

## ஒரு பையன்



காஞ்சிபுரத்துக்கு ஒரு காரில் சில நண்பர்களுடன் இவர் பயணமானார். ஆசாரியசுவாமிகளைத் தரிசிப்பதற்காகப் போனார்கள். காருக்குடையவர், "அதிகமாகச் சாமான்களைக் கொண்டு வராதீர்கள்; வண்டியில் ஜனத்தொகை அதிகம்" என்று

எச்சரித்தார். இவர் ஒரு சிறிய பை மாத்திரம் வைத்திருந்தார். "நான் ஒரு பையன்; இடம் இருக்கும் அல்லவா?" என்று கேட்டார்.

(ஒரு பையன் ஒரு சிறுவன், ஒரு பையை உடையவன்.)

## தங்க வீடு

எந்த ஊருக்குப் போனாலும் குறிப்பிட்ட ஒரு வீட்டில்தான் இவர் தங்குவார். காலையில் எழுந்து நீராடி ஜபம், தியானம் செய்வதற்கும், பல நண்பர்கள் வந்து பார்த்துப் போவதற்கும் வசதியாக இருப்பதற்காக, வெவ்வேறு இடமாக இருந்தால் சங்கடமாக இருக்குமென்று, ஒரே இடத்தில் தங்குவார். ஈரோட்டில் அட்வகேட் சேஷையர் வீட்டில் தங்கியிருந்தார். இவரைப் பார்க்க அயலூரிலிருந்து ஒரு நண்பர் வந்தார். அவரோடு பேசிக் கொண்டிருந்தார். "மறுபடியும் அடுத்த மாதம் இங்கே வருவேன், அப்போதும் பார்க்கலாம்" என்று இவர் சொன்னார். "அப்போது எங்கே தங்குவீர்கள்?" என்று வந்தவர் கேட்டார். இவர் சொன்ன விடை: "நான் எப்போதும் இங்கேதான் தங்குவேன். மற்ற வீடுகளெல்லாம் செங்கல் வீடு. இது எனக்கு எப்போதும் தங்க வீடு."

## தொண்டை அடைத்தது

ஓரூருக்குப் பேசச் சென்றபோது இவருடைய தொண்டை கட்டியிருந்தது. பேச வரவில்லை. பிறகு ஒரு முறை வந்து பேசினார். அப்போது முன்முறை வந்தும் பேச முடியாமல் போனதை இவர் குறிப்பிட்ட விதம்: "சென்ற முறை இங்கே வந்தபோது தொண்டை

அடைத்தது; என் தொண்டை நடக்கவிடாமல் அடைத்தது."

## உரித்து

தம் வீட்டுக்கு வந்த பெரியவரை உபசரித்துக் கொண்டிருந்தார் இவர். ஆரஞ்சுப் பழத்தைச் சுளையிலிருந்து விதையை நீக்கி அளித்தார். "நானே உரித்துக் கொள்கிறேன். நீங்கள் ஏன் சிரமப்பட வேண்டும்?" என்று அந்தப் பெரியவர் கேட்டார். "உங்களுக்கு உரித்து அளிக்கிறேன்; உரித்தளிக்கிறேன்" என்று பதில் சொன்னார். (உரித்து - உரியது, தோலை உரித்து.)

## கொம்பு முளைத்திருக்கிறது




தம்முடைய பெயரைப் பலர் பல் வேறு வகையில் எழுதி வருவதைக் கண்டு இவர் வருந்துவார். ஜகந்நாதன் என்று எழுதுவதுதான் முறை. ஒருவர் ஏதோ நிகழ்ச்சிக்கு அழைத்தார். பேசும் பொருளையும் இவர் பெயரையும் எழுதிக் காட்டி, "இப்படிப் போடலாம் அல்லவா?" என்றார். "எனக்குக் கொம்பு முளைத்திருக்கிறதே!" என்றார் இவர். அன்பர் ஜெகந்நாதன் என்று இவர் பெயரை எழுதியிருந்தார்.

## நடைப் பிசகு

ஒரு கோயிலுக்கு அன்பர்களுடன் புறப்பட்டார் இவர். "டாக்ஸியில் போவோம்; இல்லாவிட்டால் ரிக்ஷாவில் போவோம்" என்றார்கள் அன்பர்கள். "வேண்டாம்; நடந்தே போகலாம்" என்றார் இவர். "நாங்கள் நடப்போம். உங்களால் நடக்க முடியுமா?" என்று அன்பர்கள் கேட்டார்கள். "உங்களுக்கு நடைப்பலம் உண்டு. எனக்கு நடைப்பலம் இல்லையா? நடைப்பிசகு என்னிடம் இல்லையே!" என்று இவர் சொன்னவுடன் யாவருமே நடக்கலானார்கள்.

## பழ நண்பர்

புதியதாக ஊரிலிருந்து ஒரு நண்பர் இவரைப் பார்க்க வந்தார். நிறையப் பழங்களை வாங்கி வந்தார். "நீங்கள் புதிய நண்பர். ஆனாலும் இவற்றைப் பார்க்கும்போது பழ நண்பர் என்று தோன்றுகிறது" என்றார் இவர்.

## கீச்சுக் கீச்சு

அரியக்குடி இராமாநுஜையங்கார் சென்னையில் ஓரிடத்தில் திருப்பாவைப் பாசுரங்களைப் பாடிக் கச்சேரி செய்தார். அதைக் கேட்க இவருடைய நண்பர் ஒருவர் போய் வந்தார். "பாட்டு மிகவும் நன்றாக இருந்தது" என்றார். "கீசு கீசென்று பாடியிருப்பாரே" என்றார் இவர். "என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? எவ்வளவு அற்புதமான சாரீரம்!" என்று நண்பர் கூறினார். "கீசுசீசென்னும் ஆனைச் சாத்தன் என்ற பாட்டை அவர் பாடவில்லையா? அதைத்தான் நான் சொன்னேன்" என்றார் இவர்.

## மாதுளங்கனி

ஈரோட்டில் இவருடைய அன்பர் திரு.சேஷையர் ஒரு வக்கீல். அவருக்குக் கீதா என்ற பெண் இருந்தாள். அவளை இவர் தம் பெண்ணாகவே பாவித்து அன்பு வைத்திருந்தார். அவள் ஒரு நாய் வளர்த்து வந்தாள். பிறகு அதை வேறு ஊருக்கு அனுப்பிவிட்டார்கள். "இவளுக்கு நாய் மேலும் பிரியம். என்னிடமும் பிரியம். இப்போது நாயின்மேல் உள்ள பிரியத்தையும் சேர்த்து என்மேல் வைத்திருக்கிறாள்" என்று வேடிக்கையாகச் சொல்வார் இவர்.

அவர்கள் வீட்டில் மாதுள மரம் உண்டு. மாதுளம் பழத்தை உதிர்த்துக் கொடுத்தால் அதை உண்ணாமல் அழகு பார்த்துக்கொண்டே இருப்பார் இவர். கீதா ஒரு நாள் மாதுளங்கனி கொடுத்தாள். "இது கீதா என்ற மாது உளங்கனிந்து கொடுத்த மாதுளங்கனி; ஆகையால் அதிகச் சுவையுடையது" என்று சொல்லி உண்டார். அப்படிச் சொன்னதை அவள் குமுதம் பத்திரிகைக்கு அனுப்பி வெளியிடச் செய்தாள். அவள் இப்போது இல்லை.

## பெருங்குடி மக்கள்



அன்பர்கள் சிலரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் குடிப் பழக்கம் உள்ளவர்களாம். "உயர்ந்த குடும்பத்தில் பிறந்தும் இந்தக் கெட்ட பழக்கம் உடையவர்களாக இருக்கிறார்கள்" என்று

அங்கலாய்த்தார்கள். "பெருங்குடிமக்கள் அல்லவா?" என்று கேட்டார் இவர்.

## இன்னுமா பெருக்க வேண்டும்?



இவர் திருவேட்டீசுவரன் பேட்டையில் குடியிருந்தபோது இவர் வீட்டில் விசாலம் என்ற வேலைக்காரி இருந்தாள். அவள் கொஞ்சம் பருமனாக இருந்தாள். "உனக்குச் சரியாகத் தான் பெயர் வைத்திருக் கிறார்கள்" என்று இவர் பரிகாசம் செய்வார். ஒரு நாள் ஓர் அன்பருடன் இவர் சுவாரசியமாகக் கீழே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். அப்போது அந்த இடத்தைப் பெருக்குவதற்காக விசாலம் நின்றுகொண்டிருந்தாள். பேச்சுச் சுவாரசியத்தில் இவர் அதைக் கவனிக்கவில்லை. "என்ன இது? விசாலம் பெருக்க வேண்டும். நீங்கள் இப்படி உட்கார்ந்திருக்கிறீர்களே!" என்று இவர் மனைவி சொன்னாள். இவர், "விசாலம் இன்னுமா பெருக்க வேண்டும்?" என்பதைக் கேட்டு, அந்த விசாலமே பக்கென்று சிரித்துவிட்டாள்.

## அடடா!

எதிர்பாராத விதமாக வேறு ஊரில் இருந்த அந்த அன்பர் வீட்டுக்கு இவர் போனார். அவர் மிகவும் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்து, "அடடா! எப்போது வந்தது? பார்த்துப் பல காலம் ஆயிற்றே" என்றார்.

"அதனால்தான் மரியாதை இல்லாமல் வரவேற்கிறீர்களோ?" என்று இவர் கூறக் கேட்டு அன்பர் விழித்தார். "அட போட்டுப் பேசுகிறீர்களே! நியாயமா?" என்றபோதுதான் சிலேடை புரிந்தது.

## டாக்டர்

மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயரவர்களுக்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் கொடுத்தார்கள். ஒரு நாள் ஐயரவர்கள் அதைப்பற்றிப் பேசும்போது, "எனக்கு வைத்தியம் தெரியுமா? மருந்து தெரியுமா? எனக்குப் போய் டாக்டர் பட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள்" என்று வேடிக்கையாகச் சொன்னார்கள். அருகில் இருந்த இவர், "நீங்கள் பெரிய பண்டிதர் அல்லவா?" என்று கேட்டார். (பண்டிதர் – வைத்தியர், புலவர்.)


## சருவமுமா?

ஓர் ஊரில் இவருக்கு அன்பர் ஒரு சருவத்தில் வெந்நீர் வைத்துக் கொடுத்து நீராடச் சொன்னார். வெந்நீர்ப் பாத்திரத்தை இறக்கி வைத்து, "குளியுங்கள்" என்றார் அன்பர்; "இந்த வெந்நீர் முழுவதும் உங்களுக்கே" என்றார்.

"சருவமும் எனக்கா?" என்று இவர் கேட்டவுடன் அன்பருக்கு நயம் புலப்படவில்லை. ஒரு நிமிஷம் கழித்து, "சருவத்தை வைத்துவிடுங்கள்" என்றார் அன்பர்.

(சருவம் - எல்லாம், சிறிய தவலை.)

## வழுக்கை



ஒரு நாள் நண்பர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது இவர், "தென்ன மரத்துக்கும் மனிதனுக்கும் நேர் விரோதம்" என்றார். "எப்படி?" என்று ஒருவர் கேட்டார். "தென்ன மரத்தில் தேங்காயில் இளமையில் வழுக்கை இருக்கிறது. மனிதனுக்கு முதுமையில்தான் வழுக்கை வருகிறது" என்று அதை எடுத்துக் காட்டினார்.

(வழுக்கை - இளந்தேங்காய், தலையில் விழும் வழுக்கை.)

## பலவின் பழம்

ஓர் அன்பர் இவரைப் பேச அழைத்திருந்தார். "பிற்பகலில் நல்ல பழங்கள் இருந்தால் உண்ணலாம்" என்று இவர் சொன்னார். அப்போது அங்கே வேறு பழங்கள் கிடைக்கவில்லை. பலாச்சுளை மட்டும் கிடைத்தது. அதை அன்பர் வாங்கிக் கொண்டு வந்து தந்தார். "மலைப்பழம், ஆப்பிள், ஆரஞ்சு ஒன்றும் இந்த அத்துவான ஊரிலே கிடைப்பதில்லை. இதுதான் கிடைத்தது" என்று மிகவும் வருத்தத்தோடு தந்தார் அவர். இவர் சிரித்துக்கொண்டே, "இது ஒரு பழமா? பலவின் பழம் அல்லவா?" என்றார். உண்மையில் பலாப்பழம் இவருக்குப் பிடித்த பழம்.


(பலவின் பழம் - பல இன் பழம், பலாப் பழம்.)

## பால் நாடார்

தூத்துக்குடியில் பால் நாடார் என்ற வக்கீல் ஒருவர் இருந்தார். அவர் கம்பராமாயணத்தை ஆழ்ந்து பயின்றவர். மேல் நாட்டுக் கவிஞர்களுடன் கம்பரை ஒப்பிட்டுப் பேசுவார். ஒவ்வோர் ஆண்டும் காரைக்குடியில் நடைபெறும் கம்பன் திருநாளுக்குத் தவறாமல் வருவார். இவரும் அதற்குப் போவதுண்டு.

ஒரு முறை காலையில் எல்லாருக்கும் காபி வழங்கினார்கள். பால் நாடார் காபி அருந்துவதில்லை. ஆகவே, "எனக்குப் பால் கொடுங்கள்" என்றார். அருகில் இருந்த இவர், "உங்களைப் பால் நாடார் என்று சொல்கிறார்கள். இப்போது பாலை நாடுகிறீர்களே!" என்று வேடிக்கையாகக் கேட்டார்.

## கூட்டலும் பெருக்கலும்




ஓர் ஆசிரியர் மாணவனுக்குக் கணக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். "பலமுறை கூட்டுவதையே ஒரு முறை பெருக்கலால் தெரிந்து கொள்ளலாம். கூட்டலும் பெருக்கலும் ஒரு வகையில் ஒன்றே!" என்று சொன்னார். பையன், "புரியவில்லையே!" என்றான். அருகில் இருந்த இவர், "கூட்டலும் பெருக்கலும் ஒன்று என்று நம் வீட்டு வேலைக்காரிக்குக்கூடத் தெரியுமே?" என்றார்.

## இலையில் உட்கார்தல்

காங்கேயநல்லூரில் முருகன் திருக்கோயிலுக்கு மிகச் சிறப்பாகக் கும்பாபிஷேகம் செய்தார் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள். அவருடைய சொந்த ஊர் அது. பெரிய கூட்டம் வந்திருந்தது. இவரைச் சொற்பொழிவாற்ற அழைத்திருந்தார். திறந்த வெளியில் கொட்டகை போட்டு அங்கே உணவு வழங்க ஏற்பாடு செய்திருந்தார். பூமியை நிரவித் தண்ணீர் தெளித்துத் திமிசுக் கட்டை போட்டிருந்தார்கள். அங்கே இலை போட்டார்கள். கீழே ஈரமாக இருந்தது. அத்தனை பேருக்கும் பலகையோ, பாயோ போட முடியுமா? இலை மலையாக வந்து குவிந்திருந்தது. "இலையையே ஆசனமாகப் போடுங்கள். உட்கார்ந்து சாப்பிடட்டும்" என்றார் வாரியார். அப்படியே போட்டார்கள்.

இவரை உண்ண அழைத்தார்கள். "எவ்வளவோ இடங்களில் என்னைச் சாப்பிட அழைத்ததுண்டு. அங்கெல்லாம் அழைத்தவர்கள் சொன்னபடி கேட்கவில்லை. இப்போதுதான் நீங்கள் சொன்னபடி கேட்கப் போகிறேன்" என்றார் இவர். "என்ன அது?" என்று ஓர் அன்பர் கேட்டார். "எங்கே என்னைச் சாப்பிட அழைத்தாலும் 'இலையில் உட்காரலாம், வாருங்கள்' என்று அழைப்பார்கள். நான் இலைக்குப் பக்கத்தில்தான் உட்காருவேன். ஆனால் இங்கே நீங்கள் சொன்னபடி இலையிலேயே உட்காரப் போகிறேன்" என்றார் இவர்.

## ஆண்டு நிறைவு

நண்பர் ஒருவருடைய குழந்தைக்கு ஆண்டு நிறைவு நடக்க இருந்தது. குழந்தை அவருடைய ஊரில் இருந்தது. அங்கேயே ஆண்டு நிறைவு நடக்க ஏற்பாடாகி இருந்தது. அதற்குத் தம் தம்பியையும் அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்று எண்ணினார். தம்பிக்கு லீவு கிடைக்க வில்லை. இந்தச் செய்தியை அந்த நண்பர் இவரிடம் சொல்லிக் கொண்டிருந்தார். "தம்பிக்கு, என் பையன் ஆண்டு நிறைவுக்கு வர வேண்டுமென்று எவ்வளவோ ஆசை. ஆனால் வரமுடியவில்லை. லீவு கிடைக்கவில்லை" என்றார். "உங்கள் பையனுக்கு ஆண்டு நிறைவு. உங்கள் தம்பிக்கு ஈண்டுக் குறைவு" என்றார் இவர்.

(ஆண்டு - வருடம், அங்கே)

## முந்திரிப் பருப்பு

பண்ணுருட்டியில் இவர் நண்பர் ஒருவர் உத்தியோகமாக இருந்தார். அந்தப் பக்கங்களில் நல்ல முந்திரிப் பருப்பாகக் கிடைக்கும். நண்பர் இவரிடம், "இங்கிருந்து முந்திரிப்பருப்பு அமெரிக்காவுக்கு ஏற்றுமதி ஆகிறது. முழு முழுப் பருப்பாக அனுப்புவார்கள். அவ்வளவும் பணம். கடைகளில் முழுப் பருப்புக் கிடைப்பது அருமை" என்றார். "அது முந்திரிப் பருப்பு தானே? முழுப்பருப்பாகுமோ?" என்றார் இவர்.

## வாயில் போட்டு

இவருடைய மகள் சௌ. உமாவின் கல்யாணத்தின் போது காஞ்சிபுரத்துக்கு ஜவுளி எடுக்க ஒரு காரில் போனார்கள். இவருடைய மனைவி, இவர், சம்பந்தியம்மாள், அவருடைய பெண், இவர் புதல்வர் சாமிநாதன் எல்லாரும் போனார்கள். புடைவை முதலியவற்றை வாங்கிக் கொண்டு திரும்புகையில் செங்கற்பட்டு வழியே வர வேண்டியிருந்தது. செங்கற்பட்டுக்கு வந்தபோது காரில் ஏதோ கோளாறு உண்டாகவே, ஓரிடத்தில் அதை நிறுத்தி டிரைவர் சரிபார்த்துக் கொண்டிருந்தார். அப்போது சாமிநாதன் தாகம் போக்கிக் கொள்ளச் சில பப்பர்மிட்டுகளை வாங்கி வந்து ஆளுக்கு ஒன்றாகக் கொடுத்தான். இவருக்குக் கொடுக்கவில்லை. வாங்கினது போதவில்லை. மறுபடியும் வாங்கக் கடைக்குப் போனான். அப்போது இவருடைய மனைவி தன் கையில் இருந்ததை இவரிடம் கொடுத்தாள். அதைக் கண்ட சம்பந்தி அம்மாள், "மாமி வாயில் போட்டுக் கொள்ளாமல் மாமாவுக்குக் கொடுக்கிறார்" என்றார். உடனே இவர், "நீங்களெல்லாம் வாயில் போட்டுக் கொண்டுதான் கொடுப்பது வழக்கமோ?" என்றவுடன் அந்த அம்மாள் நாணத்தால் தலை குனிந்தாள்.

## நெருங்கிப் பழகுதல்

ஒரு பெரிய மனிதர் இவரைத் தம் ஊருக்குப் பேச அழைத்திருந்தார். அவர் இவரைச் சில இடங்களுக்கு அழைத்துச் சென்றார். உடன் வேறு சிலரும் வந்தனர். காரில் சற்றே நெருக்கமாக இருந்தது. இவரையடுத்து

அந்தப் பெரிய மனிதர் உட்கார்ந்திருந்தார். "உங்களுக்கு அசௌகரியமாக இருக்கும்" என்றார் அவர். இவர் உடனே, "உங்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அதை விடலாமா?" என்றார்.

## வாசித்தால்

திருமண விருந்து ஆனபிறகு எல்லாரும் கூடத்தில் அமர்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார்கள். சந்தனக் கிண்ணத்தில் நிறையச் சந்தனம் இருந்தது. அது நல்ல சந்தனமாக இல்லை. மணமும் இல்லை. "சந்தனம் பூசிக் கொள்ளாமல் இருக்கிறீர்களே! பூசுங்கள்" என்று இவரைப் பார்த்து ஒருவர் சொன்னார். "வாசித்தால் பூசிக்கலாம்" என்று இவர் சொன்ன குறிப்பை அறிந்து கொண்டு அவர் பேசாமல் இருந்து விட்டார். (வாசித்தால்-வாசனை வீசினால், படித்தால்; பூசிக்கலாம்-பூசிக்கொள்ளலாம், பூசை செய்து மதிக்கலாம்).

## விழுவது இலை

ஒரு சொற்பொழிவில் இவர் சொன்னது: அந்தக் காலத்தில் பணக்காரருக்கும் மற்றவர்களுக்கும் தோற்றத்தில் வேறுபாடு இராது. இப்பொழுதெல்லாம் பணக்காரருக்கு அடையாளம் கார், பங்களா, பாங்கில் பணம். அந்தக் காலத்தில் பணத்தைக் காட்டும் அடையாளம் வேறு உண்டு. "அவர் பணக்காரர்" என்று அந்தக் காலத்தில் சொல்வார்கள். "எப்படி?" என்று கேட்டால், "அவர் வீட்டில் வேளைக்கு ஐம்பது இலை

விழும்" என்பார்கள். அதாவது வேளைக்கு ஐம்பது விருந்தாளிகள் அவர் வீட்டில் உண்பார்களாம். விருந்தோம்புதலால் அவர்கள் பணம் சிறப்படையும். இப்போது என்ன விழுகிறது? விழுகிறது இலை. (இலை - இல்லை.)

## குற்றம் குறை




பேசும்பொருட்டு ஒருருக்குப் போய்விட்டுத் திரும்பினார் இவர். இவருக்கு விடை கொடுத்தபோது அந்த ஊரில் இவரை உபசரித்த அன்பர், "உங்களுக்கு எவ்வளவோ உபசாரம் செய்ய வேண்டும். என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. குற்றம் குறை இருந்தால் மன்னிக்க வேண்டும்" என்றார்.

"குற்றம் குறைதான்" என்று பதில் வந்தது. (குற்றம் இல்லாத குறை.)

## சொன்னத்தைக் கேள்

ஒரு நண்பர் ஏதோ ஒரு வேலையை ஒரு தொழிலாளியை அழைத்துச் செய்யச் சொன்னார். அவன் சொன்ன கூலி அதிகமாக இருந்தது. "என்ன அப்பா! இந்த வேலைக்கு இவ்வளவு கொடுப்பார் களா?"




என்று கேட்டார் நண்பர். அவன், "ஐந்து ரூபாய் பெரிசா?" என்றான். "இந்தா, உன்னை எனக்குப் பலகாலமாகத் தெரியும். உனக்கு அடிக்கடி வேலை கொடுத்து வருகிறேன். இனியும் கொடுப்பேன். இப்போது மூன்று ரூபாய் கொடுக்கிறேன். இதை முடி. சொன்னத்தைக் கேள்" என்றார் அவர்.

அருகில் இருந்த இவர் சிரித்தார். "என்ன சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டார் நண்பர். "அவன் வெள்ளி ரூபாய் வேண்டுமென்று கேட்கிறான். நீங்கள் சொன்னத்தையே கேட்கச் சொல்கிறீர்களே!" என்றார் இவர். (சொன்னத்தை சொன்ன காரியத்தை, சொர்ணத்தை.)

### வேணுங்கிறவர்

வேணுகோபால் என்பவர் இவருடன் பயின்ற நண்பர். அவர் இவரைப் பார்க்க வந்தார். அவரை யாவரும் 'வேணு, வேணு' என்று அழைப்பார்கள். தம் வீட்டுக்கு வந்த அவரை இவர் மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். "இவர் எனக்கு இனிய நண்பர். எல்லாரும் வேணுங்கிறவர்" என்றார். (வேணுங்கிறவர் வேணு என்கிறவர், வேணும் என்கிறவர்.)

## கடையும் முதலும்

புலவர் ஒருவர் சபைக்குப் பேச வந்திருந்தார். அவரைக் கடைசியில் போட்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்திற்கு இவர் தலைமை தாங்கினார். புலவர் பேசுகையில், "நேரம் ஆகிவிட்டது. நான் கடைசியில் வந்திருக்கிறேன். கடையேன். சற்றுப் பொறுமையாக இருங்கள்" என்றார். பேசி முடிந்தவுடன் இவர் பின்னுரை ஆற்றினார். "புலவர் தாம் கடையில் இருப்பதாகக் குறைப்பட்டுக் கொண்டார். கடையில் இருந்தால்தான் முதல் எடுக்கலாம் என்பது அவருக்குத் தெரியாதா?" என்றார். (கடை – கடைசி, வியாபாரக் கடை; முதல் – முதன்மை, பொருள்.)

## வெளுத்துக் கட்டுதல்




சென்னையில் வண்ணாரப் பேட்டையில் ஒரு சங்கம் இருக்கிறது. அதன் செயலாளர் இவரைப் பேச அழைப்பதற்கு வந்திருந்தார். தம் சங்கத்தில் நடைபெறும் தமிழ்த் தொண்டுகளை விரிவாகச் சொல்லி வந்தார். எல்லாவற்றையும் கேட்ட இவர், "உங்கள் சங்கம் வண்ணாரப் பேட்டையில் இருக்கிறதல்லவா?" அதனால் தான் வெளுத்துக் கட்டுகிறீர்கள்!" என்று சொல்லிப் பாராட்டினார்.

## காயம்

இவர் சொற்பொழிவில் கூறியது:

நாமும் பிறக்கிறோம்; இறைவனும் அவதாரம் செய்கிறான். இருவர் பிறப்பும் ஒன்றாகா. நாம் நம் கர்ம வசத்தினால் பிறக்கிறோம். நம் விருப்பப்படி பிறக்க இயலாது. இறைவன் கருணையினால் அவதாரம் செய்கிறான். எங்கே எப்படித் தோன்ற வேண்டுமோ, அப்படித் தோன்றுகிறான். மலையிலிருந்து உருட்டியதனால் ஒருவன் கீழே வருகிறான். மற்றொருவன் படிப்படியாக இறங்கி வருகிறான். முன்னவனைப்போல் நாம் பிறக்கிறோம். பின்னவனைப்போல இறைவன் வருகிறான். மேலேயிருந்து உருட்டி விட்டால் காயம் உண்டாகும் அல்லவா? நமக்கு இந்தக் காயம் ஊழ்வினை உருட்டி விட்டதால் வந்தது. (காயம் – உடம்பு, புண்).

## முன்வந்தேன்



ஓர் ஆண்டு விழாவில் பலர் பேச இருந்தார்கள். இவருடைய சொற்பொழிவை இறுதியில் அமைத்திருந்தார்கள். அவசரமாகப் போக வேண்டியிருந்தமையால் முதலிலேயே பேசிவிட்டுப் போகிறேன் என்று சொன்னார் இவர். அப்படியே பேசினார். "நான் இங்கே பேச முன் வந்திருக்கிறேன். எல்லாரும் பேச முன் வந்தவர்களே. ஆனாலும் நான் வேறிடத்துக்குப் போக வேண்டியிருப்பதால்

எல்லாருக்கும் முன் வந்து பேசுகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சொற்பொழிவைத் தொடர்ந்தார்.

## தலை சிறந்தவர்

ஒரு கூட்டத்தில் இவர் சமயச் சொற்பொழிவு ஆற்றினார். முருகனைப்பற்றி உருக்கமாகப் பேசினார். கடைசியில் ஒருவர் நன்றி சொன்னார். "கி.வா.ஜ. முருகனைப் பற்றிப் பேசுவதில் தலைசிறந்தவர்" என்றார். அப்போது இவர், அருகில் அமர்ந்திருந்த மற்றொரு பேச்சாளரிடம் மெதுவாக, "ஆம்; நான் தலை சிறந்தவன் தான்; சந்தேகமே இல்லை" என்று சொல்லித் தம் குடுமியைச் சுட்டிக் காட்டினார்.

## தாயின் மடி

தம்முடைய நண்பர் ஒருவர் வீட்டுக்கு இவர் சென்றார். போய்த் தரையில் உட்கார்ந்தார். "கீழே உட்காராதீர்கள். விரிப்பு விரிக்கச் சொல்கிறேன்" என்றார் வீட்டுக்காரர். "வேண்டாம், வேண்டாம்; தரையே நன்றாக இருக்கிறது. இது தாய் மடியல்லவா?" என்றார். "என்ன?" என்று நண்பர் கேட்டார். "பூமி தேவி நம் தாய்தானே?" என்று இவரிடமிருந்து விளக்கம் வந்தது.

## ஆற்றமாட்டாதவன்

நண்பர் சுடச் சுடச் பால் கொண்டு வந்து தந்தார். இவர் எடுத்துப் பார்த்தார். சுடுவது தெரிந்து கீழே வைத்து விட்டார். நண்பர் அதை ஆற்றலானார். "நானே ஆற்றிக் கொள்கிறேன்" என்றார். இவர் "உங்களுக்கு

அந்தச் சிரமம் எதற்கு?" என்று சொல்லி நண்பரே ஆற்றினார். "நான் ஆற்றமாட்டாதவன் என்று உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது!" என்றபோது யாவரும் புன்னகை பூத்தனர்.

## கவியும் மாலையும்




கவியரங்கம் ஒன்று நடைபெற்றது. அதற்கு இவர் தலைமை தாங்கினார். அப்போது கவி பாடிய கவிஞர்களுக்கு மாலை அணியாமல் மேலாடை போட்டார்கள்? சபையில் இருந்த ஒருவர் "மாலை போடவில்லையா?" என்று கேட்டார். "கவிக்கு மாலை போட்டால் என்ன ஆகும் என்று உங்களுக்குத் தெரியாதா? பழமொழியைக் கேட்டதில்லையா?" என்றார் இவர்.

(குரங்கு கையில் பூமாலை கொடுத்தது போல என்பது பழமொழி. கவி – கவிஞர், குரங்கு.)

## காசாலேசா

'இலக்கிய இன்பம்' என்பது பற்றி, ஒரு பள்ளிக் கூடத்தில் பேசியபோது இவர் சொன்னது:

ஒருவர் ஏழை. தட்டெடுத்து வியாபாரம் செய்தார். ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய்க்கு வியாபாரம் செய்வார், இருபது பைசா வுக்குக் கடலை வாங்கிச்




சாப்பிடுவார். இரண்டு நாளைக்கு ஒரு முறைதான் சோறு சாப்பிடுவார். இப்படியே பணம் சேர்த்தார். அதைக் கண்டு ஒருவர் "பொருள்தனைப் போற்றி வாழ் என்று ஔவையார் சொன்னபடி நடக்கிறார்" என்று வியப்பார். மற்றொருவர் "வயிற்றுக்கு உண்ணாமல் அந்தக் காசு எதற்கு?" என்பார்.

அந்த வியாபாரி மெல்ல மெல்லச் சேர்த்து 2000 ரூபாய் வைத்திருந்தார். வேறு ஏதாவது பெரிய வியாபாரம் செய்யலாம் என்று எண்ணினார். சென்னைக்குப் போய்ப் பார்த்துச் சாமான்களை வாங்கி வரலாம் என்று தோன்றியது. சென்னைக்கு வந்தார். மூர்மார்க்கெட்டுக்குப் போய்ச் சுற்றிப் பார்த்தார். அங்கே எல்லா வகையான பண்டங்களும் கிடைக்கும். நம் பையில் இருப்பதை நம்மை அறியாமலே எடுத்துக்கொள்ளும் கத்தரிக்கோற் கலைஞர்கள் அங்கே இருப்பார்கள். அந்த வியாபாரி, பிறகு சாமான்கள் வாங்கலாம் என்று தீர்மானித்து மார்க்கெட்டுக்கு வெளியே வந்தார். இடுப்பில் கச்சையில் கட்டி வைத்திருந்த பணத்தைத் தடவிப் பார்த்தார். கச்சையே இல்லை: யாரோ கத்தரித்துக் கொண்டார்கள். "ஹா!" என்று அதிர்ச்சி தாங்காமல் கூவினார். அங்கேயே உயிர் போய்விட்டது.

இந்தச் செய்தி அவருடைய ஊருக்குப் போயிற்று. அவரைப் பாராட்டிப் பேசியவர், "எப்படியெல்லாம்

வாயைக் கட்டி வயிற்றைக் கட்டிச் சேர்த்தார்! சும்மாவா பணம் வரும்? காசா? லேசா?" என்றார். அவரைப் பரிகாசம் செய்கிறவர், "அப்பொழுதே சொன்னேன்: வயிற்றுக்கு வஞ்சம் பண்ணிப் பணம் சம்பாதிக்க வேண்டுமா என்று கேட்டேன். அந்த மனிதன் கேட்கவில்லை. இப்போது என்ன ஆயிற்று? அந்தப் பணமே அவன் உயிரை வாங்கி விட்டது. காசாலேசா! இதுதான் அவன் விதி" என்றார். காசாலே சா என்ற நான்கு எழுத்துக்களில் முதல் இரண்டை ஒன்றாகவும் பின் இரண்டை ஒன்றாகவும் சேர்த்துச் சொன்னால் (காசா லேசா) புகழ்ச்சியாக இருக்கிறது. முன் மூன்றையும் சேர்த்தும் நாலாவதைத் தனித்தும் வைத்துச் சொன்னால் (காசாலே சா) இகழ்ச்சியாக மாறுகிறது. இது ஒருவகைச் சொல் இன்பம்.

## வரம்பு இல்லை

இவருக்கு ஒரன்பர் ஒரு கப் பால் கொண்டு வந்து கொடுத்தார். இவர் சீப்பிச் சாப்பிடுவதை விரும்புவதில்லை. தூக்கிச் சாப்பிட்டால் பால் மேலே சிந்தும். "பரவாயில்லை; உறிஞ்சிக் குடியுங்கள். தூக்கிக் குடித்தால் சிந்தும். தம்ளராக இருந்தால் விளிம்பு இருக்கும்; இதற்கு இல்லை" என்றார் அன்பர்.

"விளிம்பு என்று சொல்லாதீர்கள்; வரம்பு என்று சொல்லுங்கள். வரம்பு இல்லாவிட்டால் எப்போதும் தொல்லைதான்" என்றார் இவர்.

## வறட்டுமா?

நெடு நேரம் பேசிக்கொண்டிருந்த நண்பர் ஒருவர் புறப்பட்டபோது, "வறட்டுமா?" என்று ரகரத்தை

அழுத்திக் கேட்டார். "கொஞ்சம் தண்ணீர் குடியுங்கள்" என்றார் இவர்.

"ஏன்?"

"நீங்கள் வறட்டு மா என்றீர்களே! தொண்டையில் அடைத்துக் கொள்ளும். தண்ணீர் குடியுங்கள் என்றேன்."

## வழி, வழி

1968ஆம் ஆண்டு தஞ்சாவூர்ப் பெரிய கோயிலில் இராஜராஜ மன்னனுடைய சதய விழாவைக் கொண்டாடத் தொடங்கினார்கள். அந்த ஆண்டு மிகச் சிறப்பாக விழாவை நடத்தினார்கள். இப்போதும் ஆண்டுதோறும் விழா நடைபெறுகிறது அந்த ஆண்டில் பெருவுடையாருக்கு மிகப் பெரிய அபிஷேகம் நடந்தது. ஆயிரக்கணக்கான குடம் பால் வந்தது; பஞ்சாமிர்த அபிஷேகம் அப்படித்தான்; சந்தனாபிஷேகமே அரை மணி; நடைபெற்றது.

அந்த விழாவில் பேசுவதற்கு இவர் சென்றிருந்தார். காலையில் அபிஷேகம் நடந்தபோது முக்கியமானவர்கள் சந்நிதியில் கர்ப்பக்கிருகத்தை ஒட்டியுள்ள அர்த்த மண்டபத்தில் உட்கார்ந்து தரிசனம் செய்து கொண்டிருந்தார்கள். இவரும் அங்கே அமர்ந்திருந்தார். சந்தனாபிஷேகம் ஆனவுடன் அபிஷேகமான சந்தனத்தைப் பெரிய கொப்பரைகளில் சேகரித்து இருவர் எடுத்துக்கொண்டு வெளியில் போனார்கள். ஒருவர் தோள்மேல் ஒருவர் கையை வைத்துக் கொண்டு தூக்க முடியாமல் தூக்கிச் சென்றார்கள். வழியில் அன்பர்கள் நெருங்கி உட்கார்ந்து கொண்டிருக்கவே,

அவர்களை விலகச் செய்வதற்காக, "வழி, வழி" என்று சத்தம் போட்டுக்கொண்டு போனார்கள். அப்போது இவர் கொப்பரையின் வெளியே படிந்திருந்த சந்தனத்தை வழித்துக் கொண்டார். "ஏன் இப்படிச் செய்கிறீர்?" என்று ஒருவர் கேட்டார். "அவர் வழி, வழி என்றாரே!" என்றார் இவர்.

## உப்பு மா



ஒரு நாள் இவர் உப்புமா உண்டு கொண்டிருந்தார். இவருடன் சில நண்பர்களும் உண்டார்கள். அப்போது இவர், "இதற்கு உப்புமா என்று ஏன் பெயர் வந்தது?" என்று ஒரு கேள்வி கேட்டார். பரிமாறிய பெண்மணி, உப்புமாவில் உப்பு அதிகமாகிவிட்டதோ? என்று எண்ணத்தோடு மலங்க மலங்க விழித்தாள். உப்புச் சரியாகவே இருந்தது. ஓர் அன்பர் "உப்புப் போட்டுச் செய்வதால் அந்தப் பெயர் வந்திருக்கலாம் என்றார்." "இட்டிலிகூட உப்புப் போட்டுச் செய்வது தான். தோசை, அடை முதலிய பலவும் உப்புப் போட்டுச் செய்கிறவை. இதற்கு மட்டும் உப்புமா என்று பெயர் வருவானேன்?" என்று மறுபடியும் இவர் கேட்டார். பிறகு இவரே விளக்கம் கூறினார். "இதைச் சாப்பிட்டு விட்டுத் தண்ணீர் குடிக்கக் குடிக்க வயிற்றில் உப்பிக் கொண்டே வரும்; உப்பும் மா இது. அதனால் இந்தப் பேர் வந்தது."

## பல் வலி

ஒருவருக்குப் பல் வலி வந்து மிகவும் துன்புற்றார். இவர் அவரைக் காணச் சென்றார். முகத்தை அடிக்கடி சுளித்துக் கொண்டே அவர் பேசினார். "என்ன உடம்பு ?" என்று கேட்டார் இவர். "பல் வலி" என்றார். "ஒருவலி வந்தாலே சங்கடம். பல்வலி வந்தால் சொல்ல வேண்டுமா ?" என்றார் இவர். (பல்வலி – பல்லில் வலி, பலவகை வலிகள்.)

## ஊசியும் தொண்டையும்




குழந்தைக்கு அதன் தாய் உப்புமாவை உண்ணும்படி அளித்தாள். அது முதல் நாள் செய்தது. குழந்தைக்கு அது பிடிக்கவில்லை. ஒக்காளித்தது. அருகில் இவர் இருந்தார். அந்தப் பெண்மணி, "உப்பு மாவைத் தின்ன முடியவில்லை யா ? அது தொண்டையில் குத்துகிறதோ ?" என்று கோபித்துக் கொண்டாள். இவர் அந்தப் பழைய உப்புமாவில் சிறிது வாங்கி வாயில் போட்டுப் பார்த்தார். "ஆமாம், தொண்டையில் குத்தத்தான் குத்தும்" என்றார். "ஏன் ?" என்று தாய் கேட்டாள். "ஊசி யிருக்கிறது" என்று சொல்லிச் சிரித்தார் இவர். பழைய உப்புமா அல்லவா ?

## வழுக்கெடுக்கும்

ஒரு தலத்துக்கு இவரும் இவர் குடும்பத்தினரும் போயிருந்தார்கள். சில நண்பர்களும்-உடன் வந்தார்கள்.

கோயிலில் இருந்த திருக்குளத்தில் இறங்கிக் கால் கழுவிக் கொண்டு வரலாம் என்று சென்றார்கள். "இந்தத் தீர்த்தம் மிகவும் புனிதமானது. பாபங்களைப் போக்குவது" என்று ஓர் அன்பர் சொன்னார். படிக்கட்டில் பாசியாக இருந்தது. கால் வைத்தால் வழுக்கி விடும் என்று தோன்றியது. அதைப் பார்த்த இவர், "நீங்கள் இதை வழுக்கெடுக்கும் என்று சொல்கிறீர்கள். அது இருகாலும் உண்மை" என்றார். "இரு காலா? முக்கால் என்று சொன்னால்தானே உறுதியாகும்?" என்று அன்பர் கேட்டார். "வழுவைக் கெடுக்கும் என்று நீங்கள் சொன்னீர்கள் அது ஒன்று. இது வழுக்கு எடுக்கும் என்று சொல்கிறேன். அதுவும் பொருந்துமல்லவா? இருகாலும் உண்மை" என்று விளக்கினார் இவர்.

## தலையெழுத்து

மயிலம் தமிழ்க் கல்லூரியில் பேராசிரியராக இருக்கும் வித்துவான் வே. சிவசுப்பிரமணியன் இவருடைய நண்பர். இவருடைய வீட்டிலுள்ளவர் களைப் போலவே பழகுவார். அவர் மயிலத்திலிருந்து பிற்பகலில் புறப்பட்டு இரவு சென்னையில் உள்ள இவர் வீடாகிய காந்தமலைக்கு வருவார். வே. சிவசுப்பிரமணியன் என்று முழுப் பெயரையும் சொல்லாமல், 'வேசி' என்று இவர் சொல்வார். "இரவில் வேசி வருவது இயல்புதான்" என்று பரிகாசம் செய்வார். ஒரு நாள் வேறு ஒரு நண்பருடன் அப்புலவர் இவர் வீட்டுக்கு வந்தார். இவர் பிள்ளைகள், 'வேசி வந்தாயிற்று" என்று கூவினார்கள். உடன் வந்த நண்பர், "என்ன? வேசியா? யாரைச் சொல்கிறீர்?" என்று கேட்டார். "இவரைத்தான்" என்று இவர் புலவரை

சுட்டிக் காட்டினார். "ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று அந்த நண்பர் கேட்டார். "இவர் தலையெழுத்து அது. அதை மாற்ற முடியுமா?" என்று விடை வந்தது.

(தலையெழுத்து - பெயரின் முதல் எழுத்துக்கள், விதி.)

## ஆனி இல்லை

ஒருவர் தம் பெண்ணுக்குத் திருமணம் செய்ய எண்ணினார். தை மாதமே செய்ய முயன்றார். முடியவில்லை. பல காரணங்களால் தள்ளிப் போயிற்று. இறுதியில் ஆனி மாதக் கடைசித் தேதியில் முகூர்த்தம் வைத்தார். அதைப்பற்றி இவரிடம் சொல்லி, "என்ன செய்வது? கல்யாண மண்டபம் கிடைக்கவில்லை; ஆனிக் கடைசியில்தான் கிடைத்தது. முகூர்த்தம் வைத்தேன்" என்றார். இவர், "அதனால் என்ன? ஆனியில் செய்தால் ஆனி இல்லை" என்றார். (ஆனி - ஆனி மாதம், ஹானி.)

## அச்சில் இட்டார்

ஒரு புத்தக வெளியீட்டின்போது இவர் பேசினார்:

அருமையான கருத்துக்களை இனிமையான நடையில் எழுதியிருக்கிறார் இந்த ஆசிரியர். பாகு போல் இனிக்கும் அவற்றை எல்லாரும் ஏற்றுப் பயன் அடையும்படி அச்சிட்டிருக்கிறார். பாகை அச்சாக்கினால் தானே எல்லாரும் பெற்றுப் பயனடையலாம்? (அச்சு - வெல்ல அச்சு, புத்தக அச்சு.)

## பலகை வேண்டாம்

நண்பர் வீட்டில் விருந்துண்ணச் சென்றபோது இவருக்கு மாத்திரம் ஒரு பலகையைக் கொண்டுவந்து

போட்டார்கள். மற்றவர்களுக்குப் பலகை இல்லாதது கண்டு இவர், "வேண்டாம்" என்றார். "பரவாயில்லை; உட்காருங்கள்" என்று நண்பர் சொன்னார். "இரண்டு கை இருந்தும், சாப்பிடும்போது ஒரு கைதானே உபயோகப்படுகிறது? பலகை எதற்கு?" என்றார் இவர். (பலகை – அமரும் பலகை, பல கைகள்.)

### நாற்காலி மனிதர்

கூட்டத்துக்குத் தலைமை தாங்க இருந்தவர் வரவில்லை. இவரைத் தலைமைத் தாங்கச் சொன்னார்கள். இவர் மறுத்தார். "நீங்களே தலைவராக அமரவேண்டும்" என்றார்கள் அன்பர்கள். "இரண்டு கால் மனிதனை நாற்காலி மனிதன் ஆக்க உங்களுக்கு ஏன் அவ்வளவு ஆசை?" என்று கேட்டார் இவர்.

### காலடி

காஞ்சி காமகோடி பீடாதிபதிகளைப் பற்றிய பேச்சு வந்தது. அவர்கள் காலால் நடந்தே இந்தியா முழுவதையும் சுற்றி வந்தார்கள் என்பதை ஓரன்பர் சொன்னார். "ஆதி சங்கரர் அப்படிச் செய்தார். இவர்களும் அவரைப்போல் செய்கிறார்கள்" என்று மற்றோர் அன்பர் சொன்னார். இவர் அப்போது, "ஆம், அவர் பிறந்ததும் காலடியில்; பாரத பூமி முழுவதும் சென்று சிறந்ததும் காலடியிலேயே" என்றார்.

### நாடாக் கட்டில்

இரவில் வெளியூரில் தங்கியிருந்தார் இவர். ஒரு நண்பர் வீட்டில் இவர் உண்டு உறங்கினார். படுப்பதற்கு அந்த வீட்டுக்காரர் கட்டில் கொடுப்பதாகச் சொன்னார். அது நாடாக் கட்டில். அதில் ஒருகால்

மோட்டுப் பூச்சி இருக்குமோ என்று இவர் பயந்தார். "கட்டில் வேண்டாம். மோட்டுப் பூச்சியிருக்கலாம்" என்றார்."இல்லை: இது நாடாக் கட்டில்: இராது" என்று நண்பர் சொன்னார். "நானும் அதைத்தான் சொல்கிறேன். நான் நாடாக்கட்டில் என்று சொல்கிறேன்" என்றார் இவர்; (நாடா – கட்டியிருக்கும் நாடா, நாடாத: விரும்பாத.)

## தந்தி வந்தது

விநாயகர் அகவலைப் பற்றிய சொற்பொழிவு நடைபெறுகிறது. இவர் பேசிக் கொண்டிருக்கிறார்.

அப்போது சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவஞ்சைக் களம் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கினார். சேரமான் பெருமாள் நாயனார் அரண்மனையில் இருந்தார். ஔவையார் வழக்கம் போல விநாயகரைப் பூசிக்கத் தொடங்கினார்.

சுந்தரமூர்த்தி நாயனார் இவ்வுலகில் அவதரித்துச் செய்த தொண்டுகள் போதுமென்று எண்ணிய இறைவன் கைலாசத்திலிருந்து வெள்ளை யானையை அனுப்பினான். அது கோயிலுக்குச் சென்று நின்றது. அதைக் கண்டவுடன் சுந்தரர் யார்க்கும் சொல்லாமல் புறப்பட்டு விட்டார். தந்தி வந்தால் உடனே புறப்பட வேண்டியதுதானே? (தந்தி – செய்தித் தந்தி, யானை.)

## அருகர் அல்ல

நல்ல சைவராகிய புலவர் ஒருவர் சபையில் பேசத் தொடங்கினார். இவர் தலைமை தாங்கினார். அந்தப் புலவர் அவையடக்கமாகப் பேசுகையில், "இவ்வளவு பெரிய புலவர்கள் பேசும் அவையில் நான் பேச அருகன் அல்ல. இருந்தாலும் அழைத்தார்கள்" என்று சொல்லி

விட்டுச் சொற்பொழிவாற்றினார். பின்னுரையில் இவர், "இந்தப் புலவர் தம்மை அருகர் அல்லர் என்று சொன்னார். அது சரி, சைவரை அருகர் என்று சொல்லலாமா?" என்றார். (அருகர் – தகுதியுடையார், சைனர்.)

## குவளையும் தண்ணீரும்

எழுத்தாளர் திரு. அகிலனுடைய மகள் ஒருத்திக்குத் திருச்சிராப்பள்ளியில் திருமணம் நிகழ்ந்தது. அதற்கு இவர் போயிருந்தார். திருமண நிகழ்ச்சிக்குப் பின் யாவருக்கும் விருந்து வழங்கினர். எல்லாரும் சாப்பிட்ட பிறகு கை அலம்பப் போயினர். தொட்டியில் தண்ணீர் நிரப்பியிருந்தனர். தகரக் குவளையில் தண்ணீர் எடுத்துக் கொடுத்தார்கள். இவர் ஒரு குவளையில் தண்ணீர் வாங்கிக் கை கழுவிக்கொண்டே சொன்னார். "தண்ணீரில்தான் குவளை இருக்கும். இங்கே குவளையில் தண்ணீர் இருக்கிறது," (குவளை– தகரக் குவளை, குவளை என்ற மலர்".

## கேசரியும் வாரணமும்




மன்னார்குடியில் ஒரு சபையில் சொற்பொழி வாற்றப் போயிருந்தார் இவர். வேறு புலவர்களும் வந்திருந்தார்கள். அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தி லிருந்து திரு. க. வெள்ளை வாரணனாரும் வந்திருந்தார். பிற்பகலில் எல்லாருக்கும் சிற்றுண்டி வழங்கினார்கள். இனிப்பும் காரமும் தந்தார் கள். கேசரி பரிமாறி

னார்கள். திரு வெள்ளைவாரணனார், - " எனக்குத் தடிமனாக இருக்கிறது. கேசரி வேண்டாம் " என்றார். அன்பர்கள் வற்புறுத்தினார்கள். அவர் மறுத்தார். இவர், "கேசரியைக் கண்டு வாரணம் அஞ்சுகிறது இயல்புதானே? இது உங்களுக்குத் தெரியவில்லையே!" என்றார். (கேசரி – ரவா – கேசரி, சிங்கம்; வாரணம்- வெள்ளை வாரணார், யானை).

## கோட்டையை விட்டார்

திருச்சியை, அந்தப் பக்கத்திலுள்ளவர்கள் கோட்டை என்று சொல்வார்கள். "கோட்டைக்குப் போய் வந்தேன். என் பையன் கோட்டையில் வேலையாக இருக்கிறான்" என்பார்கள். இவருடைய உறவினர்கள் பலர் அங்கே இருக்கிறார்கள். ஒரு நாள் உறவினர்களில் ஒருவர், "நான் இப்போது திருச்சியில் இல்லை. ஊருக்கே வந்துவிட்டேன். இங்கே அங்கிருந்த வசதி இல்லை" என்றார். "ஆமாம், கோட்டையை விட்டு விட்டால் சங்கடந்தான்" என்றார் இவர்.

## கும்பத்தில் பிறந்தவன்

மிகச் சிறிய பிராயத்தில், 12ஆம் வயசிலே இவர் கவி பாடுவார். வகுப்பில் இவர்தாம் மிகச் சிறியவர். உடற் பயிற்சி வகுப்பில் கடைசி மாணவர் இவர். இவருடன் படித்த மாணாக்கன் ஒருவன், "நீ குள்ளமாக இருக்கிறாய். தமிழில் கெட்டிக்காரனாக இருக்கிறாய். உன்னை அக்த்தியன் என்று சொல்லத் தோன்றுகிறது" என்றான். உடனே இவர், "நானும் கும்பத்தில் உதித்தவன்தான்" என்றார். (கும்பம் – கலசம், கும்ப லக்கினம்.

எழுத்தாளரான பிறகு 'கும்பன்' என்ற புனைபெயரோடு சிறுகதைகளை எழுதியிருக்கிறார்.)

## கண்ணும் மையும்



கலைமகள் காரியாலயத்தில் அச்சுக் கோப்பவர் 'புரூஃப்' கொண்டு வந்தார். அதில் அவர் கையிலிருந்த மை பல இடங்களில் பட்டிருந்தது. அருகில் இருந்த துணையாசிரியர், "என்னப்பா, இப்படி மையைத் தடவிக் கொண்டு வருகிறாய்?" என்று கேட்டார். கலைமகள் ஆசிரியர், "கண்ணைப் போல எண்ணிச் செய்திருக்கிறார். இதனிடம் எவ்வளவு மதிப்பு!" என்றார்.

## காலாடி

இவருடைய நண்பர் ஒருவர் எதையாவது சுவாரசியமாக எழுதினாலும் படித்தாலும் தம் கால்களை ஆட்டிக் கொண்டே இருப்பார். அதைக் கவனித்த இவர் அவரிடம், "நான் சொல்வதைக் கேட்டு கோபம் அடையாமல் இருந்தால் ஒரு விஷயம் சொல்கிறேன்" என்றார். அவர் "என்ன?" என்று கேட்டார். ."ஒரு நண்பர் உங்களைப் பற்றிச் சொன்னார். உங்களைக் காலாடி என்றார். அதைக் கேட்டு எனக்குக் கோபம் வந்தது. ஆனால் இப்போது அவர் சொன்னது உண்மை என்று தெரிகிறது" என்றார். "என்ன சொல்கிறீர்கள்?" என்று நிமிர்ந்து கேட்டார் அந்த நண்பர். "நீங்கள் சதா காலை ஆட்டுவதைக் கண்டேன். அவர் சொல்வது சரிதான் என்று பட்டது" என்றார் இவர்.

## துதிக்கையிலே



விநாயகர் அகவலைப் பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார் இவர். அப்போது சொன்னது:

விநாயகர் அகவல் பாடி முடித்தவுடன் விநாயகப் பெருமான் ஔவைப் பாட்டியைத் தம் துதிக்கையால் தாங்கிக் கைலாசத்தில் சேர்த்து விட்டார். அங்கே திருவாயிலில் ஔவை உட்கார்ந் திருந்தாள். சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனைக் காணும் வேகத்தில், போகிறவர் பாட்டியைக் கவனிக்கவில்லை. பின் வந்த சேரமான் பெருமாள் நாயனார் கண்டார். "எப்படி நீங்கள் இங்கே வந்து சேர்ந்தீர்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார். "விநாயகப் பெருமானைப் பூசை பண்ணினேன். அவரைத் துதிக்கையிலே, அவர் துதிக்கையிலே வந்து சேர்ந்தேன்" என்றார்.

## கொப்பரை

குன்றக்குடியில் திருமுறை விழா நடந்தது. இவர் போயிருந்தார். நண்பகல் உணவு முடிந்தது. எல்லாரும் கையலம்பப் போனார்கள். இவருடன் சென்னியப்ப முதலியார் என்ற அன்பரும் போனார். கை கழுவ ஒரு கொப்பரையில் தண்ணீர் வைத்திருந்தார்கள். முன்னே போனவர்கள் கையலம்பியதனால் கொப்பரையில் தண்ணீர் ஆகிவிட்டது. சென்னியப்ப முதலியார் கை கழுவப் போனவர், "கொப்பரையில் தண்ணீர் இல்லையே!" என்றார், உடனே இவர், "ஆம்: அது தன் பெயரைக் காப்பாற்றிக் கொண்டது. தண்ணீர்

இல்லாவிட்டால் தானே கொப்பரை என்ற பெயர் நிலைக்கும்?" என்றார்.

(கொப்பரை - ஒரு பாத்திரம், தேங்காய்க் கொப்பரை.)

## திருமுகம்

தமக்கு வரும் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் எழுதும் வழக்கத்தை உடையவர் இவர். தம் நண்பர்களிடமும் அப்படிச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்துவார். ஒரு நாள் தம் நண்பர் ஒருவரிடம் அதைப் பற்றிச் சொல்லும்போது கூறினார்: "ஒருவர் நம் வீட்டுக்கு வருகிறார். அவர் முகத்தைக் கண்டவுடன் வரவேற்றுப் பேசுகிறோம். கேட்டதற்கு விடை சொல்கிறோம். முகம் கண்டால் செய்யும் மரியாதை அது. அதுவே பண்பாடு. அவர் திருமுகமாகிய கடிதத்தைக் கண்டாலும் உடனே பதில் எழுத வேண்டும். அதுதான் முறை. முகமானாலும் கடிதமானாலும் இரண்டும் திருமுகங்களே. இரண்டையும் ஒரு மாதிரியே பார்த்து மரியாதை செய்ய வேண்டும்."

## பொங்கி வரும்


அந்த வீட்டிற்கு இவர் போகும்போது வீட்டுக்காரர் கடுகடுவென்றிருந்தார். உள்ளே அவர் மனைவி ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தாள். இவர், "என்ன ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?" என்று கேட்டார். "அவளையே கேளுங்கள்" என்றார், அந்த நண்பர். அந்தப் பெண்மணியைக் கேட்டார். "ஆமாம், இவருக்கு முணுக்கென்றால் மூக்கின்மேல் கோபம். 9 மணிக்கு எங்கேயோ போக வேண்டுமாம். அதை முன்னாலே

சொல்லக் கூடாது? சிறிது நேரத்துக்கு முன்தான் சொன்னார். இப்போதுதான் அடுப்பில் உலை வைத்தேன். சாதம் பொங்கித்தானே ஆக வேண்டும்?" என்றாள். "ஓகோ! சாதம் பொங்கி வரவில்லை. அதனால் இவருக்குக் கோபம் பொங்கி வருகிறதாக்கும்" என்று இவர் கூறவே, கணவன் மனைவி இருவரும் பக்கென்று சிரித்து விட்டனர்.

## நெருக்கமும் உருக்கமும்

நண்பர்களோடு உரையாடிக் கொண்டிருந்தபோது இவர் சொன்னது: காரில் நாம் நெருங்கி உட்காருகிறோம். மனம் பொருந்தியவர்கள் நெருங்கினால் நெருக்கம்; அல்லாதவர்கள் நெருங்கினால் நெருக்கடி. உருக்கம், புழுக்கம் இரண்டும் ஒன்றே; வெப்பத்தால் உண்டாகும். ஆனால் கோயிலில் இருக்கும் போது வெப்பம் மிகுந்தால் உருக்கமாக இருக்கும்; வேண்டாதவரிடையில் அப்படி இருந்தால் புழுக்கமாக இருக்கும்.

## பின்பற்றுகிறவள்



அவர் ஸ்கூட்டர் வாங்கியிருந்தார். வெளியில் போகும் போது தம் பின்னாலே தம் மனைவியையும் அமரச் செய்து அழைத்துக் கொண்டு போவார். ஒரு நாள் அவர் வீட்டுக்கு இவர்

போயிருந்தார். "உங்கள் வீட்டில் உங்கள் கருத்து மேலோங்கி நிற்குமா? அல்லது உங்கள் மனைவி கை ஓங்குமா? இல்லை, சமமாக இருக்குமா?" என்று கேட்டார். அவர், "என் விருப்பப்படியே இவள் செய்வாள்" என்றார். "அப்படியா! உங்கள் மனைவி அகத்தும் புறத்தும் உங்களைப் பின்பற்றுகிறவள்!" என்றார். "எப்படி?" என்று கேட்டார் நண்பர். "ஸ்கூட்டரில் போகும்போது பார்த்திருக்கிறேன்" என்று விளக்கம் தந்தார் இவர்.

## வெற்றிலை

குழந்தைகளுடன் விளையாட்டாகப் பேசிக் கொண்டிருப்பார், இவர். அவர்களுக்குக் கதை சொல்வார். புதிர் போடுவார். வேடிக்கைக் கணக்குப் போடுவார். விசித்திரமான கேள்விகளைக் கேட்பார். ஒரு முறை சில குழந்தைகளிடம் இவர், "வெற்றிலையை எப்போது போடுவார்கள்?" என்று கேட்டார். "சாப்பிட்ட பிறகு" என்றார்கள் குழந்தைகள். "எங்கே?" என்று இவர் கேட்டார். "வாயில்" என்றார்கள். "வாயிலும் போடுவார்கள்; வாயிலிலும் போடுவார்கள். தாம்பூலத்தில் உள்ள வெற்றிலையை வாயில் போடுவார்கள். சாப்பிட்டு மிஞ்சிய வெற்று இலையை வாசலில் போடுவார்கள்; அதைத்தான் வாயிலில் போடுவார்கள்" என்று இவர் விளக்கியபோது, குழந்தைகள் ஒரே குரலில், "கரெக்ட்" என்று கூவினார்கள்.

## தான், ரசம்




இவர் சொற்பொழிவில் சொன்னது:

அகந்தை இருக்கும் வரையில் ஞானம் உண்டாகாது. இரவில் எங்கேயோ போய்விட்டு வந்து கதவை இடிக்கிறோம். நேரமாகி விட்ட படியால், உள்ளே உள்ளவர்கள, "யார்?" என்று கேட்கிறார்கள். "நான்" என்கிறோம். தூக்க மயக்கத்தில் இருந்தவர்கள். மறுபடியும், "யாரு?" என்று இழுத்தபடி கேட்கிறார்கள். நாம், "நான்தான்" என்று அழுத்தமாகச் சொல்கிறோம். அந்த நானும் தானும் அகந்தையைக் காட்டுகின்றன.

நாம் சாப்பாட்டில் உண்ணுகிற குழம்புக்கும் ரசத்துக்கும் என்ன வேறுபாடு? குழம்பு குழம்பியிருக்கும்; தான் இருக்கும். ரசம் தெளிவாக இருக்கும். வாழ்க்கையிலும் தான்• என்ற அகந்தையிருந்தால் குழம்பியிருக்கும். அது இல்லாமல் இருந்தால் ரசமாக இருக்கும்; தெளிவு ஏற்படும்.

## தையல் பிரிந்தால்

ஒருவருடைய மனைவி இறந்து போனாள். அவளிடம் மிகவும் அன்புடன் இருந்த அவள் கணவர் அடிக்கடி மாமனார் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார். மனைவி இறந்த பிறகு அந்தப்

போக்குவரத்துக் குறைந்தது. அவர் அவ்வாறு இருப்பதைப் பற்றி மாமனார் இவரிடம் சொல்லிக் கொண்டிருந்தார். "முன்பு எப்படி இருந்தார்! இப்போது அந்த ஒட்டுறவே போய்விட்டது" என்றார். "ஆமாம், தையல் பிரிந்தால் ஒட்டு ஏது?" என்று கேட்டார் இவர்.

(தையல் – பெண், தைத்தது.)

### வாயை மூடிக்கொண்டு

குழந்தைகளெல்லாம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சளசளவென்று பேசிக்கொண்டே மெதுவாகச் சாப்பிட்டார்கள். வீட்டில் ஏதோ விசேஷம். வீட்டுக்காரர் குழந்தைகளைப் பார்த்து, "வாயை மூடிக்கொண்டு சீக்கிரம் சாப்பிட்டுப் போக மாட்டீர்களா?" என்று கேட்டார். அருகில் இருந்த இவர், "நடவாத காரியத்தைச் சொல்கிறீர்களே!" என்றார். வீட்டுக்காரர், "ஏன்; பேசாமல் சாப்பிடத் தெரியாதா?" என்று கேட்டார். "நீங்கள் வாயை மூடிக்கொண்டு சாப்பிடச் சொன்னீர்களே! வாயைத் திறவாமல் எப்படிச் சாப்பிடுவது?" என்று கேட்டபோது குழந்தைகளே சிரித்து விட்டார்கள்.

### கன்னங்கரேறலென்று

ஒருவர் வீட்டுக்குப் போயிருந்தபோது அந்த வீட்டு நண்பர் தம் குடும்பத்தினரை அறிமுகப்படுத்தி இவரை வணங்கச் சொன்னார். அவருடைய புதல்வன் வணங்கிய போது, "இவருக்குக் கல்யாணம் ஆயிற்றா?" என்று இவர் கேட்டார். "இனிமேல்தான் ஆக வேண்டும். நீங்கள் ஆசீர்வாதம் செய்யுங்கள்" என்றார் பையனின் தந்தை.

இவர், "கன்னங்கறேலென்று...." என்று சொல்லிச் சிறிது நிறுத்தினார். பையன் முகத்தில் அசடு வழிந்தது. "....கூந்தலையுடைய அழகிய பெண் உனக்குக் கிடைக்கட்டும்" என்று வாக்கியத்தை முடித்தார்.


## அப்பால்

ஒரு கல்லூரியில் பேச அழைத்திருந்தார்கள். பேசுவதற்கு முன் காபி அளித்தனர். இவர் காபி பருகுவதில்லை. "காபி வேண்டாம்; பால் கொடுங்கள்" என்றார். அங்கே பால் இல்லை. "சற்று இருங்கள்; பால் வாங்கிவரச் சொல்கிறேன்" என்றார் கல்லூரி முதல்வர். "அதற்காகக் காத்திருக்க வேண்டாம். பேசப் போகலாம். அப்ப பால் வரட்டும்; அப்பால் உண்ணலாம்" என்று சொல்லி இவர் எழுந்தார்.

## இப்படி

மேடையின் மேல் ஏறிப் பேச வேண்டும். மேடை சற்றே உயரமாக இருந்தது. அதன் மறுபக்கத்தில் படி இருந்தது. இந்தப் பக்கத்தில் இவர் இருந்தபடியால் படி கண்ணுக்குத் தெரியவில்லை. எப்படி மேடைமேல் ஏறுவது என்று யோசித்துக் கொண்டிருந்தார் இவர். அதை உணர்ந்த செயலாளர், "இப்படி வந்து ஏறுங்கள்" என்று படியைக் காட்டினார். "இப்படி என்று தெரியவில்லை. இப்போது இப்படி ஏறுகிறேன்" என்று சொல்லிப் படி ஏறி மேடைக்குப் போனார்.

## வாயைத் திறக்க



வெளியூருக்குப் பேசப் போயிருந்தார் இவர். சில நாள்கள் தங்கினார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டில் விருந்துணவு வழங்கினார்கள். அதனால் இவர் சிறிது சாப்பிட்டார். "இந்த மாதிரி ஊர்களுக்கு வந்தால் இரண்டு வகையில் வாயைத் திறக்க வேண்டியிருக்கிறது. பேசவும் வாயைத் திறக்கிறேன்; சாப்பிடவும் வாயைத் திறக்கிறேன். இரண்டாவது வகையில் திறப்பதுதான் சங்கடமாக இருக்கிறது" என்று சொல்லி இங்கிலீஷில் சொன்னார்: "I can do justice to any number of meetings but not to such eatings."

## கவலை இல்லை





சேலத்தில் இப்போது மிகவும் புகழ் பெற்ற சாரதா கல்லூரி இருக்கிறது. முன்பு அது உயர்நிலைப் பள்ளியாக இருந்தது. ஊருக்குப் புறம்பே புன்செய் நிலங்களுக்கிடையே இருந்தது. பள்ளி நிர்வாகிகள் இவரைப் பேச அழைத்திருந்தார்கள். அங்குள்ள அமைப்பெல்லாம் காட்டினார்கள்., கிணற்றைக் காட்டி, "இது வரைக்கும் கவலை ஏற்றம்

போட்டுத் தண்ணீர் இறைத்தோம். இப்போது பம்பு வைத்து விட்டோம்" என்றார்கள். உடனே இவர், "அப்படியானால் இனிமேல் தண்ணீருக்குக் கவலையே இல்லை" என்றார். (கவலை – கவலை ஏற்றம், மனக்கவலை.)

## எடுப்பது இலை

ஒரு வீட்டில் சாப்பிட்ட இவர் இலையை எடுக்கலாம் என்று எண்ணிச் சற்றே எடுத்தார். "அப்படியே வைத்து விடுங்கள். நீங்கள் எடுத்தால் சாப்பாடு போட்ட புண்ணியம் போய்விடும். சாப்பிட்டவர்கள் எடுப்பதில்லை" என்று வீட்டுக்காரர் சொன்னார். "நீங்கள், எடுப்பதிலை என்கிறீர்களா? நான் எடுப்பது இலைதானே?" என்று கேட்டுப் புன்னகை பூத்தார் இவர்.

## தள்ளாதவன்




இவரும் இவர் நண்பர்களும் ஒரு காரில் போய்க் கொண்டிருந்தார்கள். இடை வழியில் கார் நின்று விட்டது. டிரைவர் என்ன என்னவோ செய்தார்; வண்டி நகரவில்லை. "சரி, இறங்கி ஒரு கை தள்ளுங்கள்" என்றார். எல்லாரும் இறங்கித் தள்ளலானார்கள். இவரும் தள்ளப் போனபோது, "நீங்கள் சும்மா இருங்கள்" என்று காருக்கு

உடையவர் சொன்னார். ஏன்? நான் தள்ளாதவன் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டார் இவர்.

(தள்ளாதவன் தள்ளுவதைச் செய்யாதவன், தளர்ந்தவன்).

## பிஞ்சு விட்டது

இவரைப் பார்க்கச் சில நண்பர்கள் வந்தார்கள். இவர் அறையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந் தார்கள். அப்போது ஒரு நண்பர் அங்கே போட்டிருந்த சோபாவைப் பார்த்தார். அது பிய்ந்திருந்தது. அதை அவர் கவனிப்பதை அறிந்த இவர், "என்ன பார்க்கிறீாகள்? உயிருள்ள மரம் நாளானால் பழம் தருகிறது. இந்தப் சோபா நாளானால் பிஞ்சு விடுகிறது" என்றார். (பிஞ்சு – இளங்காய், பிய்ந்து).

## தபாலாபீஸ்

இவர் தம் இளமைக் காலத்தில் சேந்தமங்கலத்தில் இரண்டு ஆண்டுகள் இருந்தார். அப்போது திம்மப்பையர் என்பவர் போஸ்ட் மாஸ்டராக இருந்தார். அவர் ஐயர் என்று பெயர் வைத்துக் கொண்டிருந்தாலும் மாத்துவராயர். இவருடைய நண்பர் ஒருவர் இவரைப் பார்க்க வந்தார். தபாலாபீஸ் போய்விட்டு வந்தார்கள் இருவரும். "இவர் பெயர் திம்மப்பையர் நல்ல ரசிகர்" என்று இவர் அறிமுகப்படுத்தினார். அங்கிருந்து வந்தவுடன் நண்பர்,"இவரை ஐயர் என்கிறாய், முத்திரை போட்டுக்கொள்கிறாரே! ராயரா?" என்றார். "ஆமாம்;

தபாலாபீஸில் இருப்பவர் முத்திரை போடுவது பொருத்தந்தானே?" என்றார் இவர்.

## மெல்ல - மென்று

இவருடைய வீட்டுக்கு வெளியூர் நண்பர் ஒருவர் வந்திருந்தார். தம்முடன் அவரைச் சாப்பிடச் சொன்னார். அவர் அப்படியே சாப்பிட உட்கார்ந்தார். "அவசரம் இல்லை. நிதானமாகச் சாப்பிடுங்கள். நீங்கள் தமிழ்ப் புலவர். மெல்லச் சாப்பிடுங்கள்; மென்று சாப்பிடுங்கள்" என்று இவர் உபசரித்தார்.

## பார்த்தசாரதி

யாழ்ப்பாணத்தில் நீர்வேலி என்னும் இடத்தில் உள்ள இராசேந்திர குருக்கள் என்பவர் வீட்டில் இவர் தங்குவார். முப்பது மைல் தூரமானாலும் அங்கிருந்தே காரில் போய்ப் பேசி வருவார். அரசாங்க உத்தியோகத்தில் இருந்த முத்துவேல் என்பவர் தம் காரில் அழைத்துக் கொண்டு செல்வார். அவரே காரை ஓட்டிச் செல்வார். "உங்களுக்குக் கார் ஓட்டும் சாரதியாக நான் இருக்கிறது என் பாக்கியம்" என்று மகிழ்ச்சியுடன் அவர் சொல்வார். "கார் ஓட்டுகிறவர் பெரியவராகவும் இருக்கலாம். நீங்கள் கார் ஓட்டுவது என் பாக்கியம் என்று நான் சொல்கிறேன்" என்றார் இவர். "அது எப்படி?" என்று அவர் கேட்டார். "பார்த்தனாகிய அர்ச்சுனனுக்குக் கண்ணன் காரை ஓட்டினான். அவன் பெரியவன் அல்லவா? பார்த்தசாரதி என்று அவனுக்குப் பெயர் இருக்கிறதே!" என்றார் இவர். "நான் கண்ணன் ஆவேனா?" என்று கேட்டார் முத்துவேல். "அந்தப்

பார்த்தசாரதி நான் பாராதசாரதி. நீங்கள்தாம் நான் பார்த்த சாரதி" என்றார் இவர். அது முதல் அவரை யாவரும் பார்த்தசாரதி என்றே அழைக்கலாயினர்.

### சக்கரபாணி




நீர்வேலியில் முத்துவேல் பிள்ளைக்குப் பார்த்தசாரதி என்று நாமம் சூட்டினார் இவர். அவர் வர முடியாதபோது ஒரு டாக்ஸிக்காரர் இவரைத் தம் டாக்ஸியில் அழைத்துச் செல்வார். முத்துவேலுக்கு இவர் பெயர் சூட்டியதை அறிந்து டாக்ஸிக்காரர், "எனக்கும் ஒரு பெயர் சூட்டுங்கள்" என்றார். உடனே, "நீர் ஸ்டீயரிங் சக்கரத்தைக் கையில் பற்றியிருக்கிறீர்; உமக்குச் சக்கரபாணி என்று பெயர் சூட்டுகிறேன்" என்றார் இவர்.

### உப்பிட்டவர்

வெளியூர் ஒன்றில் நண்பர் வீட்டில் இவரும் பிறரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். குழம்பில் உப்புக் குறைவாக இருந்தது. "கொஞ்சம் கலத்தில் உப்புப் பரிமாறுங்கள்" என்று வீட்டுக்காரர் சொன்னார். ஒரு பெண் உப்பைப் பரிமாறினாள். அவளைப் பார்த்து

இவர், "உன் பெயர் என்ன அம்மா?" என்று கேட்டார். அவள் தன் பெயரைச் சொல்லிவிட்டு, "ஏன் கேட்கிறீர்கள்?" என்றாள். "உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்று சொல்லியிருக்கிறது. உன்னை நினைக்க வேண்டுமே! அதற்காகக் கேட்டேன்" என்று சமாதானம் சொன்னார்.

## ஒரு குறை

அன்பர் ஒருவர் வீட்டில் விருந்து நடந்தது. சிறப்பான முறையில் உணவுப் பண்டங்கள் இருந்தன. சாப்பிட்டு முடிந்தபிறகு வீட்டுக்காரர்,"எல்லாம் எப்படி இருந்தது? ஏதாவது குறை உண்டா?" என்றார். எல்லாரும், "பிரமாதமான விருந்து" என்றார்கள். இவர் "எல்லாம் பண்ணினீர்கள்? இன்னும் ஒன்று பண்ணியிருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்" என்றார். வீட்டுக்காரர் சற்றே திகைப்புடன், "என்ன இல்லை? என்ன செய்திருக்க வேண்டும்?" என்று கேட்டார். "ஆளுக்கு இன்னும் ஒரு வயிறு பண்ணிக் கொடுத்திருந்தால் திருப்தியாகச் சாப்பிட்டிருப்போம்!" என்று இவர் சொன்னபோது வீட்டுக்காரர் முகம் வாட்டம் நீங்கிப் பிரகாசம் அடைந்தது.

## இலையை

ஓரன்பர் வீட்டில் இவர் சாப்பிட்டார். சாப்பிட்ட பிறகு இலையை எடுப்பவர்களுக்கு எளிதாக இருக்கட்டும் என்று, கீழே சிந்தியிருந்தவற்றை எடுத்து இலையில் போட்டார். வீட்டுக்காரர் இலையை இவர் எடுக்கப் போகிறாரோ என்று அஞ்சி,"இலையை வைத்து

விடுங்கள்" என்றார்."நான் அதைச் சாப்பிடுவது இல்லை" என்று இவர் சொன்னபோது மற்றவர்கள் குபீர் என்று சிரித்து விட்டார்கள்.

### பாடும் பாட்டு

அருணகிரிநாதர் விழாவில் பேசியபோது இவர் சொன்னது:

அருணகிரிநாதரைப் போன்றவர்களும் பாடியிருக்கிறார்கள், என்னைப் போன்றவர்களும் பாடுகிறார்கள். அவர்கள் பாடுவது புளியேப்பம் போன்றது. நாங்கள் பாடுவது பசி ஏப்பம் போன்றது. அவர்கள் எல்லாரும் பாடும் பாட்டைப் பாடுகிறார்கள். நாங்களோ நாங்கள் படும் பாட்டைப் பாடுகின்றோம். இரண்டும் ஒன்றாகுமா?

### தேவ சேனாபதி

தெய்வயானை திருமணத்தைப்பற்றிச் சொற்பொழிவாற்றியபோது இவர் விளக்கியது:

சூரசங்காரம் ஆனபிறகு இந்திரனுக்கு முடி சூட்டினான் முருகன். தேவர்களெல்லாம் பழைய வாழ்வைப் பெற்றார்கள். இந்திரன் மிக்க நன்றியறிவுடன் முருகனை வணங்கி விண்ணப்பித்துக் கொண்டான்: "எம்பெருமானே! நாங்கள் அகங்காரத்தால் தலைதருக்கி நின்றோம். சூரனால் அந்த அகங்காரம் போயிற்று; தலைக் குனிவு உண்டாயிற்று. நீ பெருங்கருணையினால் போர் செய்து சூரன் முதலியோரை அழித்தாய். தேவர் படைகளுக்குத் தலைவனாக, தேவ சேனாபதியாக இருந்து போரில்

வெற்றி கண்டாய், நாங்கள் உனக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்? தேவ சேனாபதி என்று நினைக்கும் போதெல்லாம் நீ செய்த பேருதவி நினைவுக்கு வரும். எப்போதும் நீ தேவ சேனாபதியாகவே இருக்க வேண்டும். நான் வளர்த்து வரும் தேவசேனை என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு வேறு வகையில் என்றும் தேவ சேனாபதியாகத் திகழ வேண்டும்" என்று வேண்டினான். முருகன் அவன் விருப்பப்படியே தேவசேனையை மணந்து கொண்டான்.

## ஒன்றுக்கு

கோம்பை என்னும் ஊரில் பாரதி விழா நடைபெற்றது. இவர் தலைமை தாங்கினார். காலையில் 9 மணி முதல் 12-45 வரையில் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் கலைந்தவுடன் யாவரும் அவசர அவசரமாகச் சிறுநீர் கழிக்கப் போனார்கள். ஒருவர், "ஒருவர் ஒன்றுக்குப் போனால் எல்லாருமே போகிறார்கள். கொட்டாவியைப் போல இதுவும் தொற்றுப் போல இருக்கிறது" என்றார். இவர், "ஆம், கடிகாரம்கூட ஒன்றுக்குப் போகப் போகிறது" என்று அதைச் சுட்டிக் காட்டினார். அப்போது மணி 12-55.

## மட சாம்பிராணி

மட சாம்பிராணி என்பதற்கு இவர் கூறும் விளக்கம்:

மடங்களில் மூட்டை மூட்டையாய்ச் சாம்பிராணி வாங்கிப் போடுவார்கள். நாளடைவில் அது மட்கிவிடும். பிறகு அதை எடுத்துப் புகைத்தால் வாசனையே இராது. அதனால் அதை உவமை கூறுகிறார்கள்.

## விழாத் தலைவர்

டில்லியில் அருணகிரிநாதர் ஆறாம் நூற்றாண்டு விழாவில் இவர் பேசியபோது சொன்னது:

இன்றைய விழாவுக்குத் தலைவர் அருணகிரிநாதர். எத்தனையோ பேருக்கு நாம் விழா எடுக்கிறோம். சில விழாவின் தலைவர்கள் சில காலத்துக்கே தலைவர்களாக இருப்பார்கள்; பிறகு விழுந்து விடுவார்கள். அப்பால் அவருக்கு விழா நடத்த மாட்டார்கள். அருணகிரிநாதர் அப்படி அல்ல. அவர் என்றும் விழாத் தலைவர். அறுநூறு ஆண்டாகியும் அவருக்கு விழா எடுக்கிறோம். இன்னும் எடுத்துக் கொண்டே இருப்போம்.

## கசக்கும் இலை

இவருக்குப் பல மூலிகைகள் தெரியும். உணவில் தக்க கீரைகளையும் மூலிகைகளையும் சேர்த்துக் கொண்டால் நோய் வராமல் இருக்கலாம் என்று சொல்வார். பர்மாவுக்குப் போயிருந்தபோது அன்பர்கள் சிவத்தலம் என்ற இடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே ஒரு குன்றின்மேல் முருகன் கோயில் இருக்கிறது. இந்துக்கள், கிறிஸ்துவர்கள், பர்மியர்களாகிய பௌத்தர்கள் ஆகிய யாவரும் அங்கே சென்று வழிபடுகிறார்கள். குன்றின்மேல் ஏறி முருகனைத் தரிசனம் செய்து விட்டுக் கீழே இறங்கி வந்தார்கள்.

அங்கே அடிவாரத்தில் ஒரு மடம் இருக்கிறது. அங்கே சிறிது தங்கி இளநீர், பழம் முதலியன உண்டார்கள். நிறையச் செடி கொடிகள், மூலிகைகள் அங்கே இருந்தன. இவர் அங்கிருந்த குன்றிமணிக் கொடியில் உள்ள இலைகளை உருவி ஓர் அன்பரிடம் கொடுத்து, "இதை உண்ணுங்கள்; இனிக்கும்" என்றார். அந்த அன்பர்

உண்டு, "ஆம், இனிக்கிறது" என்றார். குன்றிமணி இலைக்குள்ள இயல்பான சுவை அது. உடனே இவர் ஒரு வேடிக்கை செய்தார். "நீங்கள் அதிலிருந்து இன்னும் இலையைப் பறித்து வாருங்கள். அவற்றையே கசக்கும் இலை ஆக்குகிறேன்" என்றார். அன்பர் இலைகளைப் பறித்து இவர் கையில் கொடுத்தார். எல்லாரும் ஆவலாகக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். இவர் அந்த இலைகளை இரண்டு கையிலும் வைத்துப் பிசைந்து கசக்கினார். "இப்போது இது நான் கசக்கும் இலை ஆகி விட்டதல்லவா?" என்றார்.

## வயிற்றில் பாலை வார்த்தார்

வெளியூர் ஒன்றில் இவருடைய நெடுங்கால நண்பர் ஒருவர் இருந்தார். அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலோடு அவர் வீட்டுக்குப் போனார். "அவர் ஊருக்குப் போயிருப்பதாகக் கேள்வியுற்றேன்" என்று வழியில் ஒரு நண்பர் சொன்னார். இருந்தாலும் போய்ப் பார்க்கலாம் என்று அவர் வீட்டை அடைந்தார். அந்த நண்பர் வீட்டில் இருந்தார். இவரைக் கண்டவுடன் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். பால் கொடுத்தார். அதை அருந்திவிட்டு இவர் அருகிலிருந்த மற்றொரு நண்பரிடம், "இவரை எங்கே காண முடியாதோ என்று கவலைப்பட்டேன். நல்லவேளை! இருந்தார். என் வயிற்றில் பாலை வார்த்தார்" என்று கூறி மகிழ்ந்தார்.

## கலையாமகள்

தினமணி கதிரில் அன்பர்கள் இவரைக் கேட்ட கேள்விகளுக்குரிய விடைகளை எழுதி வெளியிட்டார். ஓர் அன்பர், "கலைமகள் நேரில் பிரத்தியட்சமானால் அவளுடன் சிலேடையாகச் சொல்ல வேண்டுமானால் என்ன சொல்வீர்கள்?" என்று கேட்டிருந்தார். இவர்,

"தலையா மகளே, என்னிடம் கலையா மகளாய் இரு என்பேன்" என்றார்.

(கலையாமகள் – கலை ஆம் மகள், கலையாத மகள்.)

## இப்பொழுதே இடம்

திருவல்லிக்கேணியில் ஒரு திருமணம் நடைபெற்றது. மணமகனுக்கு வலப்பக்கம் மணமகள் அமர்ந்திருந்தாள். பொரியிடும் போது புரோகிதர் பெண்ணை மணமகனுக்கு இடப்பக்கமாக வந்து அமரச் சொன்னார். அவள் அமர வாகாக மணமகன் சற்றே நகர்ந்தான். இவர், "இப்போதே இடம் கொடுக்க ஆரம்பித்து விட்டார்" என்றார்.

## பூரி




மாலையில் பலகாரம் பண்ணுகிறவர் இவர். வெளியூருக்குச் சென்றிருந்த போது தங்கியிருந்த வீட்டு நண்பர், "உங்களுக்கு மாலையில் என்ன பண்ணச் சொல்லலாம்? பூரி பிடிக்குமா?" என்று கேட்டார். இவர், "என் பேரை நினைத்தால் தெரிந்து கொள்ளலாமே!" என்றார். "என்ன சொல்கிறீர்கள்?" என்று நண்பர் இவரை நிமிர்ந்து பார்த்தார். "ஜகந்நாத்துக்குப் பூரி பிடிக்காமல் இருந்தால் அங்கே இருப்பாரா?" என்று பதில் வந்தது. (பூரி என்ற தலத்தில் இருக்கும் பெருமாள் ஜகந்நாத்.)

## பாவக்காய்

வீட்டில் வீட்டுக்காரரும் அவர் மனைவியும் பேசிக் கொண்டிருந்தனர். "இன்று பாவக்காய் வாங்கி வரட்டுமா? வேறு ஏதாவது வேணுமா?" என்று கணவர் கேட்டார். "பாவக்காய் வாங்கி வந்து புண்ணியம் இல்லை. பிள்ளைங்க விரலால் கூடத் தொடமாட்டேங்கிறாங்க" என்றாள் மனைவி. அருகிலிருந்த இவர், "பாவக்காயில் புண்ணியம் ஏது? பாவந்தானே?" என்றார்.

## காத்துக் கொண்டு

ஓர் அன்பரைப் பார்க்க இவர் சென்றிருந்தார். அவர் வீட்டில் இல்லை. உள்ளே புழுக்கமாக இருந்தது. வெளியிலே காற்றாட இருக்கலாம் என்று வாசலில் வந்து நின்று கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அந்த நண்பர் வந்து விட்டார். "ஏன் இங்கே நிற்கிறீர்கள்? உள்ளே உட்காரக் கூடாதோ?" என்று கேட்டார். இவர், "உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். இங்கே காத்துக் கொண்டு நிற்கிறேன்" என்றார்.

(காத்துக் கொண்டு, காற்றுக் கொண்டு.)

## தண்ணியும் கிண்ணியும்

வெளியூரில் அன்பர் வீட்டில் இவர் தங்கினார். இரவு இவர் படுக்க வசதிகளைச் செய்து கொடுத்த அன்பர், "தண்ணி கிண்ணி வேண்டுமா?" என்று கேட்டார்.

இவர்: இப்போது தண்ணி மட்டும் போதும்; காலையில் தண்ணியும் வேணும்; கிண்ணியும் வேணும்.

அன்பர்: ஏன்?

இவர்: காலையில் க்ஷவரம் செய்து கொள்ள வேண்டும்.

## கலை வளர்கிறது

ஒரு சொற்பொழிவில் இவர் சொன்னது:

இப்பொழுதெல்லாம் கலையின் இலட்சியம் இன்னதென்பதையே பெரும்பாலும் மறந்து விட்டார்கள். கலை வளர்கிறது என்கிறார்கள். கலையில் முதலில் ஒழுக்கம் கொலை செய்யப்படுகிறது. கலைக்குக் கொம்பும் காலும் முளைத்து வளர்கிறது.

(கொம்பும் காலும் முளைத்த கலை, கொலை.)

## நாகராஜன்



சுதேசமித்திரனில் நாகராஜராவ் என்ற போட்டோக் கலைஞர் இருந்தார். நன்றாகப் படம் எடுப்பார். அவர் அருகில் இருந்தபோது மற்றொரு நண்பரிடம் இவர் சொன்னார். "இரண்டு நாகராஜாக்கள் படம் எடுப்பார்கள். மற்றொருவர் படம் எடுத்தால் எல்லாரும் அஞ்சி ஓடுவார்கள். இவர் படம் எடுத்தால் எல்லாரும் வந்து கூடுவார்கள்."

### வடமதுரை

ஒரு நாள் நண்பர்களிடம் பேசிக் கொண்டிருந்த போது இவர்,"நான் வடமதுரை" என்றார். "உங்கள் ஊர் மோகனூர் அல்லவா?" என்று ஓர் அன்பர் கேட்டார்.

இவர்: இருந்தால் என்ன? நான் வடமதுரைதான்.

அன்பர்: அது எப்படி, இரண்டு ஊர்கள் உங்கள் ஊராகும்?

இவர்: நான் அந்தணர்களில் எங்கள் பிரிவையல்லவா சொன்னேன்? நான் வடமன்.

(வடமதுரை - வடமனாகிய துரை.)

### கூசாக் குடியர்

இவர் ரெயில் வண்டியில் மனைவியுடன் பயணம் செய்து கொண்டிருந்தார். கூசா நிறையத் தண்ணீர் வைத்திருந்தார். அருகில் இருந்த நண்பர் ஒருவர் தண்ணீர் கேட்டார். அவருக்குத் தம்ளரில் தண்ணீர் எடுத்துக் கொடுத்தார். இவருக்கும் தாகமாக இருந்தமையால் கூசாவோடு குடித்தார். அதைக் கண்டு அருகில் இருந்த நண்பர் சிரித்தார். "என்ன, கூசாக் குடியர் என்று சிரிக்கிறீர்களா?" என்றார் இவர்.

(கூசாக்குடியர் - கூசாவோடு குடிப்பவர், கூசாத குடிகாரர்.)

### தானாகப் போடுதல்

இவருடைய வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்தார். எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சாம்பார் சாதம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். விருந்தாளி

நன்றாகப் பழகினவர். ஆதலின் கேட்டு வாங்கிச் சாப்பிடுகிறவர். "கொஞ்சம் தான் போடுங்கள்" என்றார். இவர் உடனே, "கேட்டா போடுவார்கள்? தானாகப் போட வேண்டாம்?" என்றார்.

## பிரதி உபகாரம்

ஓர் அன்பர் இவர் எழுதிய நூல் ஒன்றைக் கேட்டார். இவர் அதை அன்பளிப்பாக அவருக்கு வழங்கினார். "நீங்கள் இதற்கு விலை தர வேண்டாம். நீங்கள் உபகாரம் செய்யாமலே இந்தப் பிரதி உபகாரம் செய்கிறேன்" என்று கொடுத்தார்.

## உயர்த்தி



இவருடைய நண்பர் ஒருவருடைய பெண் நல்ல உயரமாக இருந்தாள். நண்பர் அவளுக்குத் திரு மணம் செய்வதைப் பற்றிக் கவலைப்பட்டார். "இவள் உயரத்துக்கு மேலே உயர மான பிள்ளையைப் பார்க்க வேண்டுமே!" என்றார். உடனே இவர், "உங்கள் பெண் ஒசத்தி (உயர்த்தி); அவளுக்கென 'ஒசத்தி'யான மாப்பிள்ளை நிச்சயமாகக் கிடைப்பான்" என்றார். (ஒசத்தி - உயரம், மேலான சிறப்பு).

## இக்கட்டு

ஒரு முறை ஆப்பக்கூடலில் உள்ள சர்க்கரை ஆலைக்குப் போய் எல்லாப் பகுதிகளையும் இவர் பார்த்தார். அங்குள்ள அன்பர்கள் கரும்பை ஆலையில் புகுத்துவது முதல் சர்க்கரையை மூட்டைகளிற் சேமிக்கும் வரையில் நடைபெறும் செயல் முறைகளைக் காட்டி விளக்கினார்கள். பிறகு சிற்றுண்டி வழங்கினர். கரும்புச் சாற்றை வழங்கினர். அதை உண்ட இவர் மறுநாள் வேறு ஊருக்குச் சென்று பேச வேண்டியிருந்தது. அங்கே போனார். கரும்புச் சாறு சாப்பிட்டதால் இவருக்குத் தொண்டை கட்டி விட்டது. பேச முடியவில்லை. இதைப் பற்றி ஓர் அன்பரிடம் இவர் பிறகு சொன்னது வருமாறு: "இப்படிக் கரும்புச் சாறு தொண்டையைக் கட்டுமென்றால் நான் அதைக் குடித்தே இருக்க மாட்டேன். தொண்டை கட்டிவிட்டது. இக் கட்டு வந்து பேச முடியாத இக்கட்டு வருமென்று எண்ணவே இல்லை" என்றார். (இக்கட்டு– இந்தத் தொண்டைக்கட்டு, இடைஞ்சல்.)

## நாணயம்

காளிகாம்பாள் கோயிலில் ராஜகோபுரத்துக்கு அஸ்திவாரம் போட்டார்கள். அப்போது வந்து அஸ்திவாரத்தில் செங்கல்லைப் பதிக்க வேண்டுமென்று கோயிலைச் சேர்ந்த அன்பர்கள் இவரை அழைத்துச் சென்றார்கள். ஸ்ரீராம்தாஸ் கோவிந்ததாஸ் என்ற வணிகரும் வந்திருந்தார். கொட்டு மேளத்துடன் விழா நடைபெற்றது. குறிப்பிட்ட இடத்தில் அஸ்திவாரம் பதித்து அங்கே பூஜை பண்ணினார்கள். நவரத்தினத்தை இட்டார்கள். குறிப்பிட்ட முகூர்த்தத்தில் செங்கல்லை இவரும் பிறரும் எடுத்துக் கொடுக்க, ஸ்தபதி அவற்றை

அஸ்திவாரத்தில் பதித்தார். "ரூபாய் தாருங்கள். இங்கே போடலாம்" என்று சொன்னார். அவரவர்கள் கால் ரூபாய், அரை ரூபாய் போட்டார்கள். ஒருவர் ஒரு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினார். திருப்பணிச் சபையைச் சேர்ந்த திரு. கருப்பையா, "இங்கே நோட்டு உதவாது. நாணயந்தான் வேண்டும்" என்றார். அருகில் இருந்த இவர், "இங்கே என்ன? எங்கேயும் நாணயந்தான் வேண்டும். அதிலும் ஆலயத்தில் அவசியம் வேண்டும்" என்றார். (நாணயம் - நேர்மை, காசு).

### சாயச்சுவர்

ஈரோடு ரெயில்வே ஸ்டேஷனில் வண்டிக்காக இவர் காத்துக் கொண்டிருந்தார். இவருடன் ஒரு புலவரும் இருந்தார். வண்டி வரச் சிறிது நேரம் இருந்தது. பெஞ்சுகளிலெல்லாம் ஆட்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். சுவரோரமாக உட்காரலாம் என்று போய் உட்கார்ந்தார். சுவருக்குப் புதிதாக வண்ணம் பூசியிருந்தார்கள். இவர் அதன்மேல் சாயப் போகிறாரே என்று அஞ்சிய உடனிருந்த புலவர், "சுவரின்மேல் சாயாதீர்கள். வண்ணம் பூசியிருக்கி றார்கள்" என்றார்.

"அப்படியா? இது சாயச் சுவரா? சாயச் சுவரானாலும் எனக்குச் சாயச் சுவர் அல்ல."

(சாயச் சுவர் - சாயம் பூசிய சுவர், சாய்வதற்குரிய சுவர்).

### இருமல்

இவர் இரண்டு நாள் இருமலால் தொல்லைப் பட்டார். அன்பர் ஒருவர் வந்து பேசிக்

கொண்டிருந்தார். அப்போது இவர் இருமினார். "இருமல் போலிருக்கிறது" என்று வந்த அன்பர் கேட்டார். "ஆமாம்; நான் இடையில் ஒரு கதர் வேட்டி, மேலே ஒரு கதர்த் துண்டு, ஆக இரு கதர் அணிகிறவன். மல்லே அணிவதில்லை. எனக்கு இருமல் வந்திருக்கிறது!" என்று இவர் விடை பகர்ந்தார்.

## தலையைக் காட்டிவிட்டு

பெங்களூரில் அருணகிரிநாதர் ஆறாவது நூற்றாண்டு விழாவுக்குப் போயிருந்தார் இவர். அங்கே வையாளிக்காவலில் இவருடைய அன்பர் இஞ்சினியர் திரு. சங்கர் சாஸ்திரியின் வீட்டில் தங்கியிருந்தார். அப்போது இவருக்கு உடல் நலம் சரி இல்லை. போன அன்று இவருக்குப் பேச்சு இல்லை. ஆகையால் படுத்து ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். சங்கர் சாஸ்திரியும் அவர் மனைவியும் இவரிடம் சொந்தப் பிள்ளைகளை விட அன்பாகப் பழகுகிறவர்கள். இவருக்கு வேண்டிய வசதியை எல்லாம் செய்து கொடுத்தார்கள். இவர் சங்கர் சாஸ்திரியைப் பார்த்து, "இன்றைக்கு நீங்கள் ஆபீஸுக்குப் போக வேண்டும் அல்லவா?" என்று கேட்டார். அவர், "இடையில் கொஞ்ச நேரம் போய்த் தலையைக் காட்டிவிட்டு வருவேன்: அது போதும்" என்றார். "உங்கள் ஆபீஸ் என்ன சலூனா?" என்று கேட்டபோது சங்கர் சாஸ்திரி, "இன்றைக்கு முதல் ஜோக் கிடைத்து விட்டது" என்று கிளுகிளுத்தார்.

## கால்கட்டு

அவனுக்குப் பதினாறு வயது இருக்கும். காலில் காயம் பட்டுக் கட்டுப் போட்டுக் கொண்டிருந்தான்.

அந்தப் பையனுடைய வீட்டுக்கு கி.வா.ஜ. போயிருந்தார். அவர் தந்தையைப் பார்த்து, "என்ன, இப்போதே இவனுக்குக் கால்கட்டுப் போட்டு விட்டீர்களே!" என்று கேட்டார். (கால்கட்டு கல்யாணம். காலில் போடும் கட்டு.)

## ஒற்றைக் காது



ஒரு பையனுடன் இவர் பேசிக் கொண்டிருந்தார். வேடிக்கையாகச் சில கேள்விகளைக் கேட்டார். "இரண்டு காதும் இல்லாதவன் யார்? " என்றார். பையன், "செவிடன்" என்றான். "ஒற்றைக் காதிருந்தால்...." என்று மறுபடி கேட்டார். பையன் சற்றே விழித்தான். இவர், "ஊசி" என்றார். பையன் பின்னும் விஷயம் விளங்காமல் விழித்தான். "ஊசிக்கு ஒரு காதுதானே தம்பி?" என்றபோது அவனுக்கு விளங்கியது. (காது – ஊசியில் நூல் கோக்கும் இடம்.)

## மணிக்கட்டு

"தமிழ் மக்களின் தீர்க்க தரிசனத்தை என்னவென்று சொல்வேன்!" என்று நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது இவர் சொன்னார்:

"எதை நினைத்து இப்படிச் சொல்கிறீர்கள்?"

"இதற்கு மணிக்கட்டு என்று பெயர் வைத்திருக்கிறார்களே. இங்கே தானே ரிஸ்ட்வாட்சைக் கட்டுகிறோம்? யாழ்ப்பாணத்தில் கடிகாரத்தை மணிக்கூடு என்று சொல்வார்கள். அதைக் கட்டுவதால் மணிக்கட்டு என்ற பெயர் இதற்குப் பொருத்தமாக இருக்கிறது."

## மாதுறவு

ஒரு துறவியைப் பற்றி அன்பர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர் ஒழுக்கம் கெட்டு வாழ்வதையும் பல பெண்களோடு தொடர்பு வைத்துக் கொண்டிருப்பதையும் எடுத்துச் சொல்லி அங்கலாய்த்தார்கள். "முன்பெல்லாம் இப்படி இல்லை. இப்போதுதான் கெட்டுப் போய் விட்டார்" என்றார்கள்.

அங்கே இருந்த இவர், "முன்பு துறவு இருந்தது: இப்போது மாதுறவு இருக்கிறது; அவ்வளவுதானே?" என்றார். (மாதுறவு - பெரிய துறவு, மாது உறவு).

## பொடி வைக்கவா?

இவருக்கு இட்டிலியைப் பரிமாறிய அன்பர், "இதற்குப் பொடி வைக்கவா? சட்டினி போடவா?" என்றார். "பொடி வைக்க வேண்டாம்; பேச்சிலே வைத்துக்கொள்ளுங்கள். இப்போது சட்டினியே போதும்" என்று இவர் சொன்னார். (பொடி வைத்தல் - மிளகாய்ப் பொடி வைத்தல், நயம் வைத்தல்.)

## வாயில் காவலன்

இவரை ஒரு கூட்டத்துக்குத் தலைமை தாங்கும்படி ஓர் அன்பர் வந்து கேட்டார்.

"நான் சும்மா வந்து பேசிவிட்டுப் போகிறேன்."

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"தலைமை தாங்குவதும் ஒன்றுதான்: கேட்கீப்பர் வேலையும் ஒன்றுதான்."

"என்ன, அப்படிச் சொல்லிவிட்டீர்கள்?"

"வாயில் காவலன் எல்லாருக்கும் முன்னே வந்து வாயிலைத் திறந்து உட்கார்ந்து கொள்ள வேண்டும். எல்லாரும் வந்து செய்ய வேண்டியதை எல்லாம் செய்யும் வரையில் பொறுமையாக காத்துக் கொண்டிருக்க வேண்டும். எல்லாரும் புறப்பட்டுப் போன பிறகு வாயிலை மூட வேண்டும். தலைவன் வேலையும் இதுதான். எல்லாருக்கும் முதலில் வாயைத் திறந்து பேச வேண்டும், பேசுகிறவர்கள் ஒவ்வொருவராக வருவார்கள். பேசுவார்கள். எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்க வேண்டும். எல்லாரும் பேசின பிறகு சபையினரும் எழுந்து விடுவார்கள். அப்போது கடைசியாக வாய் திறந்து பின்னுரை பேச வேண்டும்."

## தேன் குழல்

ஒரு வீட்டில் சிற்றுண்டிக்கு ஜாங்கிரியும் தேங்குழலும் வைத்தார்கள். இவர் ஜாங்கிரியைச் சுட்டிக்காட்டி, "இது தான் தேன் குழல்; மற்றது தேங்குழல்" என்றார். "அது எப்படித் தேன் குழலாகும்? இதற்குத்தானே அந்தப் பேர்?" என்று ஒருவர் கேட்டார்.

இவர் விளக்கினார்: "இது தேன் உள்ளே உடைய குழல் போன்ற வடிவுடையது. உள்ளே இருக்கும் ஜீரா தேன்போலத்தானே இருக்கிறது? மற்றொன்று, தேங் குழல். தேம் என்றால் இனிமை. இனிமையான குழல் என்று கொள்ள வேண்டும்."

## கரியே கரி

இவர் பேசியது:

இறைவன் உயிர்களுக்குக் கருணை பாலிப்பதற்காகத் திருவுள்ளம் இரங்கித் திருவுருவம் இறங்கி வருகிறான். நாம் தாயினிடம் கருணையைப் பார்க்கிறோம். அவளும் தன் குழந்தைக்காக எவ்வளவோ இறங்கி வருகிறாள்; தாழ்ந்து போகிறாள்.

ஓர் ஊரில் ஒரு செல்வர் வீட்டுப் பெண்மணிக்கு ஒரு குழந்தை இருந்தது; நாலு வயசு. அந்த வீட்டில் விருந்தினர்கள் அடிக்கடி வருவார்கள். அடுப்புக்கரி மூட்டைகளை ஓர் அறையில் அடுக்கியிருந்தார்கள். அந்த மங்கை நல்லாள், அந்த ஊர் மகளிர் மன்றத் தலைவி. அதன் ஆண்டு விழாவுக்கு ஒரு பெண் மந்திரியை அழைத்திருந்தார்கள். அவருக்கு வரவேற்பு வாசித்தளிக்க வேண்டும்.

அன்று அந்த விழா. பிற்பகலில் மேல் மாடியில் தன்னை அலங்கரித்துக் கொள்ள அந்தப் பெண் போனாள். தலை வாரிக்கொண்டு நல்ல புடைவை அணிந்து நிலைக் கண்ணாடிக்கு முன் நின்று கொண்டு ஸ்நோ தடவிக் கொண்டிருந்தாள்; வலக் கன்னத்தில் தடவிக் கொண்டிருந்தாள். அப்போது கீழிருந்து குழந்தை வீரிட்டுக் கத்தியது கேட்டது.

குழந்தை பந்து விளையாடிக் கொண்டிருந்தான். அது அடுப்புக் கரியிருந்த அறைக்குள் போய்விட்டது. அதைப் போய் எடுத்திருக்கிறான். கீழே விழுந்து காயம் பட்டு விட்டது. 'ஓ' என்று கத்தினான்.

ஒரே ஒரு குழந்தையாகையால் தாய் மேலிருந்து அவசர அவசரமாக ஓடி வந்தாள். பக்கத்தில் யாரும் இல்லை. நேரே அறைக்குள் போய்ப் பார்த்தாள். பையன் விழுந்து கிடக்கிறான். தலையில் காயம். ரத்தம் வழிகிறது, பையன் கத்துகிறான். அவன் உடம்பெல்லாம் கரி.

அவனை, "என் கண்ணே!" என்று தாவி எடுத்து அணைத்தாள். இடதுக் கன்னத்தோடு கன்னத்தை வைத்து ஆசுவாசப் படுத்தினாள். அப்போது அவள், நம் ஆடை அழுக்கடையுமே என்று பார்த்தாளா? அவள் கோலம் எப்படி இருந்தது? வலதுக் கன்னத்தில் வெள்ளை ஸ்நோ; இடது கன்னத்தில் கரி. அதுதானே அவள் கருணைக்குக் கரி?

அறியாமை மிகுந்த பெண்ணுக்கே இவ்வளவு கருணை இருக்குமானால், எல்லாம் வல்ல ஆண்டவனுக்கு எவ்வளவு கருணை இருக்கும். அவன் இறங்கி வரமாட்டானா?

## வரதராஜன்

திருச்சியில் தாயுமானவர் கோயிலில் நூற்றுக்கால் மண்டபத்தில் திருமுறை விழா நடைபெற்றது. இவர் பேசினார். கூட்டத்துக்குத் தலைமை தாங்கியவர் திருக்குறள்வேள் ஜி. வரதராஜ பிள்ளையவர்கள். இவர் பேசும்போது முன்னுரையில் சொன்னது: "சைவத்

திருமுறை விழா நடைபெறுகிறது. 'இதில் வைணவப் பெயராகிய வரதராஜன் என்ற பெயரை உடையவர் தலைமை தாங்கலாமா? நடராஜன் அல்லவா தாங்க வேண்டும்?" என்று யாராவது நினைக்கலாம். வரதராஜன் என்ற வைணவப் பெயர் என்று யார் சொன்னது? அதுவும் நடராஜன் திருநாமமே. நான் சொல்வது அன்று இது. சைவத் திருமுறைகளின் முடிமணியாகிய பெரிய புராணத்தைப் பாடியருளிய சேக்கிழாரே சொல்கிறார்.

*"ஊன்அடைந்த உடம்பின் பிறவியே*
*தான் அடைந்த உறுதியைச் சாருமால்*
*தேன்அ டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்*
*மாந டஞ்செய் வரதர்பொற் றாள்தொழ"*

என்பது பாட்டு. இதில், 'தில்லையில் மாநடம் செய்வரதர்' என்று நடராஜரைச் சொல்கிறார். ஆகவே நடராஜரே வரதராஜர். இந்த வரதராஜ பிள்ளையவர்களும் நடராஜ பிள்ளையவர்களே."

## இராசேந்திரன்

சென்னைக் கம்பர் கழகம் என்று ஒன்று முன்பு இருந்தது. அதன் முதல் தலைவர் அமரர் ரா.பி.சேதுப்பிள்ளை. சில காலம் கி.வா.ஜ. தலைவராக இருந்தார். அமரர் க. சோமசுந்தரம் எப்போதும் செயலாளர். அவரை இவர் க.க.க. சோமசுந்தரம் என்பார். (கம்பர் கழகம் க. சோமசுந்தரம்) அமரர் கல்கி ஒருமுறை அந்தக் கழகத்தின் தலைவராக இருந்தார். அப்போது கம்பன் விழா இராஜாஜி ஹாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அந்தக் காலத்தில் குடியரசுத் தலைவராக இருந்த திரு. இராசேந்திரப்பிரசாத்

விழாவைத் திறந்து வைத்தார். இவர் வரவேற்றுப் பேசினார்; அப்போது சொன்னது:

கம்பன் சோழ மன்னர் காலத்தில் வாழ்ந்தவன். ஆனால் சோழ மன்னர் அவனைப் பாராட்டி ஆதரித்ததாகத் தெரியவில்லை. சடையப்ப வள்ளல் கம்பனை வளர்த்து ஆளாக்கிப் பாடச் செய்தவர். எத்தனையோ கவிஞர்களுக்குச் சிறப்பளித்து வாழ்வளித்த சோழகுலம், கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பனைப் பாராட்டத் தவறிவிட்டது. பிற்காலச் சோழ மன்னர்களில் மிகப்புகழ் படைத்தவர் கங்கைகொண்ட சோழர் என்ற சிறப்பைப் பெற்ற இராசேந்திர சோழ சக்கரவர்த்தி. கம்பனுக்குத் தம் குலம் செய்ய மறந்த சிறப்பைத் தாமாவது செய்யலாம் என்று கருதி அவர் வந்ததுபோல இருக்கிறது, இந்தியச் சக்கரவர்த்தியைப் போன்ற நம் ராஷ்டிரபதி இங்கே எழுந்தருளியது. அந்தச் சோழ மன்னரும் இராசேந்திரர்; இவரும் இராசேந்திரர் அல்லவா?

## கடைசிப் பந்தி

இவரும் இவர் தம்பி ஸ்ரீ கி. வா. பாலசுப்பிர மணியனும் முன்பு ஒன்றாய் இருந்து வந்தார்கள். அவர் வியாபாரம் செய்கிறார். அவர் கடையில் உள்ள இருவர் இவர் வீட்டிலேயே உண்டு வந்தனர். கடையை மூடிக் கொண்டு வர இரவு 10-30க்கு மேல் ஆகும்.

இவர் வீட்டுக்கு இவருடைய நண்பர் ஒருவர் வெளியூரிலிருந்து வந்தார். இவரது வீட்டில் தங்கிப் பகலுணவு உண்டார். "வெளியில் போய்ப் பல நண்பர்களைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்றார்.

இவர், "இரவு இங்கேயே சாப்பிடலாம்; வந்து விடுங்கள்" என்றார். நண்பர், "நான் வர நெடுநேரமாகும். வெளியிலேயே சாப்பிட்டு விடுகிறேன்" என்றார். "இல்லை; இங்கே எவ்வளவு நேரமானாலும் வரலாம். எங்கள் வீட்டில் கடை சிப்பந்தி வந்து கடைசிப் பந்தி நடக்கும். அவர்கள் வர நேரமாகும். ஆகவே நீங்கள் எப்போது வந்தாலும் சாப்பிடலாம்" என்றார் இவர். (கடைசிப்பந்தி - கடையில் வேலை செய்யும் சிப்பந்தி, கடைசியில் நடக்கும் உணவுப் பந்தி.)

## கொய்யாப் பழம்

இவர் அன்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது ஓர் அன்பர் கொய்யாப்பழம் வாங்கிக் கொண்டு வந்தார். "எந்தப் பழத்திலும் கொய்யாப் பழமே சுவையுடையது" என்றார் இவர். "ஏன்? மாம்பழம், பலாப்பழம், வாழை என்ற முக்கனிகள் இல்லையா?" என்று ஒருவர் கேட்டார்.

"அவையும் சுவையுடையனவே."

"அப்படியானால் கொய்யாப் பழம் மட்டும் சுவையுடையது என்கிறீர்களே?"

"நான் இந்தக் கொய்யாப் பழத்தைச் சொல்லவில்லை. எந்தப் பழமானாலும், கொய்த பழத்தை விடக்கொய்யாத பழமே சுவையுடையதென்றேன்; அதாவது, தானே முதிர்ந்து உதிர்ந்ததனால் சுவை மிகுதியாக இருக்கும்".

## அசட்டை

பனிக்காலம். இவருக்குத் தெரிந்த முதியவர் ஒருவர் உடம்பைத் திறந்து போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார். இவர் அவரிடம் சொன்னார்: "குளிர்காலம். ஏதாவது கம்பளிச் சட்டை போட்டுக் கொள்ளுங்கள். அசட்டையாய் இருக்கக்கூடாது. பிறகு ஜலதோஷம், ஜுரம் எல்லாம் வந்துவிடும்". (அசட்டை-சட்டையின்றி இருத்தல்; அசிரத்தை; கவனக்குறைவு).

## ஜயம்

ஒரு நண்பருடைய வீட்டுக்கு இவர் சென்றபோது அவர் தம் மகளை அறிமுகப்படுத்தி இவரை வணங்கச் சொன்னார். "ஜயம்!" என்று அவளைத் தந்தையார் அழைத்தார்.

"உன் பெயர் ஜயலக்ஷ்மியா" என்று இவர் கேட்டார். "ஆம்; ஜயம் என்று கூப்பிடுவார்கள்" என்றாள் அந்தப்பெண்.

"எங்கே போனாலும் உனக்கு ஜயந்தான். உன்னைக் கல்யாணம் செய்து கொள்கிறவனுக்கும் ஜயமே கிடைக்கும்" என்றார்.

"நல்ல ஆசீர்வாதம்" என்று பெண்ணின் தந்தையார் மனமகிழ்ந்தார்.

# செய்யுளில் சிலேடை

## கேசரி

மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்களுடன் கி.வா.ஜ. வெளியூர் போய் வருவதுண்டு. ஒரு சமயம் ஐயரவர்கள் எங்கேயோ போய்விட்டுப் பிற்பகலில் நல்ல வெயில் நேரத்தில் திருவாவடுதுறைக்கு வந்தார்கள். அப்போது ஆதீனத் தலைவராக விளங்கியவர் ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர் அவர்கள். ஐயரவர்கள் வந்திருப்பதை அறிந்து அவர்களுக்கு நல்ல முறையில் சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்தார் தேசிகர். ரவா கேசரி, இட்டிலி முதலியவற்றைச் செய்து வழங்கச் செய்தார். கேசரி நறு நெய்யில் செய்ததாதலின் மிகவும் சுவையாக இருந்தது.

சிற்றுண்டி உண்ட பிறகு ஐயரவர்கள் சிறிது இளைப்பாறினார்கள். அப்போது, "நாம் மகா சந்நிதானத்தைப் பார்க்கப் போக வேண்டும். சுவையான சிற்றுண்டி உண்டதைப் பற்றிச் சொல்ல வேண்டும். கேசரியைப்பற்றி ஒரு பாட்டுப் பாடு; அதையும் சொல்லலாம்" என்றார்கள்.

அவர்கள் பணித்தபடியே இவர் ஒரு பாட்டுப் பாடினார். பிறகு சந்நிதானத்தைப் பார்த்தபொழுது இவர் அந்தச் சொன்னார். அது வருமாறு:

*ஈசன் திருவா வடுதுறை*
*யின்கண் எழுந்தருளும்*
*தேசர், வயித்திய லிங்கத்*
*திருப்பெயர்த் தேசிகனார்*
*ஆசிரி யப்பெரு மானுடன் உண்ண*
*அளித்தருளும்*
*கேசரி உண்டிட நால்வாய்*
*எமக்குக் கிடைத்திலவே.*

சிவபெருமான் கோயில் கொண்டருளிய திருவாவடுதுறை என்னும் தலத்தின்கண் எழுந்தருளி யுள்ள தேசு மிக்கவர், வயித்திய லிங்கம் என்னும் தெய்விகத் திருநாமத்தையுடைய தேசிகர், என்னுடைய ஆசிரியப் பிரானுடன் உண்ணுவதற்கு வழங்கிய கேசரி என்னும் சிற்றுண்டியை உண்ண நான்கு வாய்கள் எமக்குக் கிடைக்கவில்லையே!.

இறுதி அடியில், 'சிங்கம் உண்பதற்கு யானை கிடைக்கவில்லையே' என்ற பொருள் தொனியில் அமைந்தது.

கேசரி - சிங்கம், நால்வாய் - யானை.

## கனியும் காயும்

பல ஆண்டுகளுக்கு முன் கி.வா.ஜ. முதல் முறையாகக் கோபிசெட்டிபாளையத்துக்குச் சென்று ஒரு வாரம் தங்கிச் சொற்பொழிவுகள் ஆற்றினார். அந்த ஊருக்கு

அருகில் பாரியூர் என்ற இடத்தில் ஒரு காளி கோயில் இருக்கிறது. அங்கே ஆண்டுதோறும் தீமிதி நடைபெறும். அதற்காகப் பெரிய குண்டம் அமைத்துத் தீ வளர்ப்பார்கள். தீக்குண்டம் இருப்பதனால் அந்தக் கோயிலுக்குக் குண்டத்துக் காளியம்மன் கோயில் என்ற பெயர் வழங்குகிறது. அந்தக் கோயிலை விரிவுபடுத்தி மிகச் சிறப்பான சிற்பங்களை அமைத்து விழாக்களை அமரர் முத்து வேலப்பக் கவுண்டர் நடத்தி வந்தார்.

கி.வா.ஜ. போயிருந்தபோது முத்து வேலப்பக் கவுண்டர் இவருக்கு ஒரு விருந்து வழங்கினார். பல அன்பர்கள் அந்த விருந்தில் கலந்துகொண்டார்கள். அது மாம்பழக் காலமாகையால் மிகவும் சுவையான மாம்பழங்களை விருந்தில் பரிமாறினார்கள். பிறகு மாவடு, மாங்காய் ஊறுகாய்களைக் கடைசியில் பரிமாறினார்கள்.

அப்போது இவர், "பிரமன் படைப்பில் காய் வந்து கனி பிறகு வரும்; இங்கே முத்து வேலப்பக் கவுண்டர் படைப்பில் மாறாகக் கனி வந்து காய் வருகிறது" என்று சொல்லி ஒரு வெண்பாவைப் பாடினார்.

**சாலப்பன் னாட்பழகித் தாய்போற் பரியுமுத்து**
**வேலப்பன் செய்த விருந்தினிலே ஏல**
**இனிக்கப் படைக்கும் எழிற்படைப் புக்குள்**
**கனிக்கப் புறம்வருமாங் காய்.**

படைப்பு - பரிமாறுதல், சிருஷ்டி. கனிக்கு அப்புறம் வருமாம் காய் என்று பொதுவாகவும், கனிக்கு அப்புறம் வரும் மாங்காய் என்று சிறப்பாகவும் கொள்ளும்படி ஈற்றடி அமைந்திருக்கிறது.

## ஏட்டுத் தயிர்

அந்த விருந்தில் நல்ல தயிரைப் பரிமாறினார்கள். ஆடையுடன் இருந்தது தயிர். இவருக்கு அருகில் அமர்ந்திருந்த நண்பர், "இதை இங்கே ஏட்டுத் தயிர் என்பார்கள்" என்றார். இவர், "எனக்கும் தெரியும், ஆனால் இது ஏட்டுச் சுரைக்காய்போல ஏட்டுத் தயிர் ஆகுமா? உண்மையான தயிர் அல்லவா?" என்று சொல்லி அக்கருத்தை அமைத்து ஒரு வெண்பாவைச் சொன்னார்.

**வேட்டுப் பயில்முத்து**
**வேலப்பன் செய்விருந்தில்**
**ஏட்டுத் தயிர்என்**
**றெவர் சொன்னார்? - நாட்டமுடன்**
**கண்டோம் விழியால்**
**கரத்தாற் பிசைந்தனத்தோடு**
**உண்டோம் இலையோ உவந்து?**

நாட்டமுடன் – விருப்பத்துடன், அனத்தோடு சோற்றோடு.

### ஈ, இலை

அப்போது இலையில் ஈ மொய்த்தது. முத்து வேலப்பக் கவுண்டர், "ஒரு மாதத்துக்குமுன் இங்கே ஒரு மகாநாடு நடந்தது. ஜனக்கூட்டம் அதிகமாக இருந்தது. அது முதல் ஈ அதிகம். இலையில் ஈ மொய்க்கிறது" என்றார்.

உடனே இவர் ஒரு கற்பனையைப் பாவில் உதிர்த்தார்: "இலன் என்னும் எவ்வம் உரையாமை, - ஈதல்

குலனுடை யான் கண்ணே உள" என்று திருவள்ளுவர் கூறுகிறார். நல்லொழுக்கமும் குடிப்பிறப்பும் உடையவனிடம், பிறர் ஒருவர்பால் சென்று நான் ஒன்றும் இல்லாதவன் என்று சொல்லி இரவாமல் இருப்பதும், எல்லாருக்கும் கொடுப்பதும் ஆகிய செயல்கள் உள்ளனவாகும் என்பது பொருள். முத்து வேலப்பக் கவுண்டர் எந்தச் சமயத்திலும் யாரிடத்திலும் ஈ என்று கேட்கமாட்டார். எவர் வந்து எதைக் கேட்டாலும் இலை என்று சொல்லமாட்டார். இப்படி ஈ என்றும் இலை என்றும் சொல்லாதவராகிய கவுண்டர், இப்போது ஈ இலையில் மொய்த்தவுடன் ஈ, இலை என்று சொல்லிவிட்டார். இவ்வாறு சொல்லி அந்தக் கருத்தை ஒரு பாடலில் இணைத்துச் சொன்னார்.

*பாவம் துடைக்கின்ற பாரியூர்க் காளி*
*பதமலர்க்கே*
*ஆவ லுடன்அன்பு செய்முத்து வேலப்பன்*
*அன்றொடின்றும்*
*சீவன் துறக்கினும் ஈ. என் றிலைஎன்று*
*செப்பறியான்*
*ஈவந் திலையில் இருத்தலும், ஈஇலை*
*என்றனனே.*

## ஆலமும் பனையும்

பாரியூர்க் காளி கோயிலுக்கு எதிரில் வாய்க்கால் ஓடுகிறது. நீர்வளம், நீலவளம் நிறைந்த பகுதி அது. கோயிலுக்கு முன்னே ஓர் அழகான ஆலமரம். அதன் நடுவில் நட்டு வைத்தாற்போல் ஒரு பனைமரம் முளைத்திருந்தது. சுற்றிலும் ஆலமரக் கிளைகள் ஒழுங்காக விரிந்து , நிற்க, நட்ட நடுவில் அந்தப் பனைமரம் காட்சி அளித்தது.

காளி கோயிலுக்கு அருகில் சிவபெருமான் கோயில் இருக்கிறது. அங்குள்ள பெருமானுக்கு அமர விடங்கர்

என்று பெயர். பழங்காலத்தில் ஒரு புலவர் அப்பெருமானைப் பற்றி ஒரு குறவஞ்சி பாடியிருக்கிறார். அதற்கு அமர விடங்கர் குறவஞ்சி என்று பெயர்.

இவர் காளியைத் தரிசித்தார்; அமர விடங்கரையும் தரிசித்து வணங்கினார். பனைமரம் நட்ட நடுவில் முளைத்திருந்த ஆலமரத்தையும் பார்த்தார். அமர விடங்கருக்கும் அந்த ஆலமரத்துக்கும் ஒரு சிலேடை பாடினார்.

*கோலும் அமர விடங்கர்தம் கோயில்*
*அகத்தும்முகில்*
*போலும் திருமேனி கொள்காளி*
*கோயிற் புறத்தினிலும்*
*ஆல மடக்கிய அப்பனை யாங்கள்கண்*
*டங்கருமை*
*சால உணர்ந்தனம், பாரியூர் என்னும்*
*தலத்தினிலே.*

முகில் போலும் திருமேனி – மேகத்தைப் போன்ற கரிய திருமேனியை. **அமர விடங்கருக்கு:** ஆலம் மடக்கிய அப்பனை யாங்கள் கண்டம் கருமை சால உணர்ந்தனம் – ஆலகால விடத்தைப் பிறரை அழிக்காமல் மடக்கி உண்ட தந்தையாகிய பரமசிவனை அடியேங்கள் அவனுடைய கண்டமானது கரிய நிறம் நிரம்பியிருப்பதனால் இனம் கண்டு கொண்டோம். **ஆலமரத்துக்கு:** ஆலம் அடக்கிய அப் பனை யாங்கள் கண்டு அங்கு அருமை சால உணர்ந்தனம் – ஆலமரம் தனக்குள் அடக்கிய அந்தப் பனை மரத்தை நாங்கள் கண்டு அங்கே அந்த அருமையை நன்றாக உணர்ந்தோம்.

### வீரன் சின்னான்

வேறு ஒரு முறை இவர் கோபிசெட்டிபாளையம் சென்றபோது தேவராஜ மகால் என்ற மாளிகையில்

தங்கியிருந்தார். சத்தியாக்கிரக வீரரும் தேசத் தொண்டருமாகிய திரு. ஜி.எஸ். லக்ஷ்மணன் இவருக்கு வேண்டிய உபகாரம் செய்தார். அன்று இவர் முடி திருத்திக்கொள்ள வேண்டியிருந்தது. சின்னான் என்ற முடி வினைஞன் வந்து ஏற்பன செய்தான். அவனுக்கு இவர் கூலி கொடுக்கப் போனபோது அவன் வாங்கிக்கொள்ள மாட்டேன் என்றான். உடனே, "அப்படியானால் நான் ஒரு பாட்டுத் தருகிறேன். வாங்கிக்கொள்" என்று ஒரு வெண்பா பாடினார். 'சின்னான் என்னும் வீரன் கையில் கத்தி எடுத்தான். நான் அஞ்சி நடுங்கி இன்னது செய்தேன்' என்று தொனிக்கும் வகையில் அந்தப் பாடல் அமைந்திருக்கிறது.

*தலைவணங்கி வாய்மூடித் தாடையினைக் காட்டி*
*அலைகுடுமி கையில் அளித்தேன் — கலைவளங்கள்*
*மெத்தவளர் கோபிநகர் வீறுசின்னான் தன் கையில்*
*கத்தி யினைஎடுக்கக் கண்டு.*

## கத்தி எடுப்பவன்



இவருடைய நண்பர்களுள் ஒருவராகிய திரு.கி.ரங்கராஜன் கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு வந்து இவர் வீட்டில் தங்கினார். (அவர் அமரராகி விட்டார்.) ஒரு நாள் ஒரு சிறிய கல்யாணம் விசாரிக்க இவர் போனபோது ரங்கராஜனுடன் சென்றார்.

அங்கே காலையில் மாப்பிள்ளைக்கு ஒரு முடி வினைஞன் முடி களைந்தான். மாப்பிள்ளை நீராடிப் புத்தாடை புனைந்து மனையில் அமர்ந்தார். அப்போது

அந்த முடி திருத்துவோன் தன் கையில் நாகசுரம் எடுத்து ஊதத் தொடங்கினான். சென்னையில் இந்தக் காட்சி அரிதன்று. ஆனால் நண்பருக்கு இது ஆச்சரியமாக இருந்தது. அவர் சோழநாட்டுக்காரர் அல்லவா? சின்னக் கல்யாணமாகையால் அவனுடைய வாத்தியமே போதும் என்று வைத்திருந்தார்கள்.

ரங்கராஜன் இவரிடம், இது என்ன 'பொருத்தம் இல்லாமல் இருக்கிறதே' என்றார். 'இந்த' பக்கத்தில் இது வழக்கந்தான். இவன் இரண்டு சமயத்திலும் ஒரு காரியந்தானே செய்கிறான்?" என்றார் இவர். "அது எப்படி?" என்று கேட்டார் நண்பர். இவர் ஒரு வெண்பாவில் விடை சொன்னார்.

சென்னை நகரில் சிறந்தகலி யாணத்தில்
முன்னே சவரம் முயன்று செய்தான்; பின் அவனே
உத்தியின்றி நாயனத்தை ஊதினான்;எரிடத்தும்
கத்தி எடுப்பவனே காண்.

கத்தி எடுப்பவன் – சவரம் செய்யக் கத்தியை எடுப்பவன்; இசையைப் பாடாமல் வெறும் கத்தலாகக் கத்துகிறவன்.

சீதாகல்யாண மண்டபம்

கோபிசெட்டிபாளையத்தில் திரு. தங்கமணி முத்து வேலப்பக் கவுண்டர் என்னும் வள்ளல் 'சீதா கல்யாண மண்டபம்' என்ற பெயரில் பெரிய கல்யாண மண்டபம் ஒன்று கட்டியிருக்கிறார். ஒரே சமயத்தில் ஆறு கல்யாணங்கள் நடப்பதற்கு வேண்டிய வசதிகள் அங்கே உள்ளன. கட்டணம் இல்லாமல் வழங்குகிறார். அதைப் பாராட்டிப் பாடல் சொல்ல வேண்டுமென்று

திரு. ஜே. சுப்பிரமணிய ஐயர் இவரைக் கேட்டுக் கொண்டார். "தம் பெயரைச் சொன்னாலே தங்கம் மணி முத்து எல்லாம் வரும் வேலப்பக் கவுண்டர் இதை அமைத்தது வியப்போ?" என்ற கருத்தை வைத்து இவர் உடனே பாடிய பாட்டு:

*கொல்யானை வேந்தர்க்கும்*
*கூடா தெனச்சீதா*
*கல்யாண மண்டபத்தைக்*
*கட்டுவித்தான் — சொல்வியப்போ*
*தங்கமணி முத்துப்பேர்*
*சாற்றவரும் வேலப்பன்*
*இங்கிதனைச் செய்தான் எனல்.*

மற்றொரு பாட்டு:

*தங்கமணி யார்செய்சீ*
*தாகலி யாணமண்ட*
*பங்கண்டார் கோபியினில்*
*பண்டைநாள் — பொங்குநகர்*
*மாமிதிலைச் சீதா*
*மணமண் டபமிதுவே*
*ஆமென்று நின்றுவியப் பார்.*

## பல நோய்கள்

இளமையிலேயே செய்யுள் இயற்றும் திறமை பெற்றார் இவர். இவருடைய் ஊராகிய மோகனூரில் சிவன் கோயிலில் நவராத்திரி விழா நடந்து கொண் டிருந்தது. இவர் அங்கே போயிருந்தார். ஒரு வைணவப் பெரியவரும் அங்கே வந்திருந்தார், இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். காளமேகத்தைப் பற்றிய பேச்சு வந்தது. அப்போது இவர் காளமேகத்தின் பாடல் ஒன்றைச் சொன்னார்.

புள்ளிருக்கு வேளூராகிய வைத்தீசுவரன் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குத் தீராத வினை தீர்த்த தம்பிரான் என்று பெயர். அவரைப் பற்றி நிந்தாஸ்துதியாகக் காளமேகம் பாடியிருக்கிறார். 'தமக்கும் தம் குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் வந்த நோயைத் தீர்க்கத் தெரியாத இவர் எந்த வினை தீர்க்கப் போகிறார்?' என்ற கருத்துடையது அந்தப் பாட்டு.

*வாதக்கா லாம்தமக்கு; மைத்துனர்க்கு நீரிழிவாம்:*
*போதப் பெருவயிறாம் புத்திரருக்கு; ஓதக்கேள்;*
*வந்தவினை தீர்க்க வகையறியா வேளூரார்*
*எந்தவினை தீர்ப்பார் இவர்?*

வாதக்கால் - வாயுப் பிடிப்புள்ள கால், காளியோடு நடனவாதம் செய்த கால். மைத்துனர்க்கு – திருமாலுக்கு. நீரிழிவு – நீரிழிவு என்னும் நோய், கடலில் இறங்கி யிருக்கும் நிலை; இங்கே பாற்கடலைச் சுட்டியபடி. பெருவயிறு – மகோதரம் என்ற நோய், பெரிய வயிறு. புத்திரருக்கு – கணபதிக்கு.

இந்தப் பாட்டை இவர் சொன்னபோது கேட்ட அந்த வைணவர், "எங்கள் பெருமாளுக்கு இப்படி ஒன்றும் இல்லை" என்றார். " இதோ நான் பாடுகிறேன்; இந்தப் பாட்டில் குடும்பத்தையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறது. நான் பெருமாளுக்கே உள்ள நோய்களைச் சொல்கிறேன்" என்று கூறி ஒரு வெண்பாவைச் சொன்னார்.

*நீரிழிவு தான்உள்ளான்; நீடுகழ லைஉடையான்;*
*சீரிலகு மார்பினிடைச் சீக்கொண்டான்; — ஓரின்*
*வலிப்புவிக்கு ளேபொருந்தி மாலானான் தானோ*
*நிலைப்புறுநோய் தீர்ப்பான் நினைந்து?*

நீரிழிவு – ஒரு நோய், கடலில் இறங்கி வாழ்தல். நீடு கழலை உடையான் – நெடு நாட்களாக உள்ள கட்டியை உடையவன், உலகத்தை அளப்பதற்காக நீண்ட திருவடியை உடையவன். சீக் கொண்டான் – சீழைக் கொண்டான், திருமகளைக் கொண்டான்; சீ-திருமகள். வலிப்பு விக்குளே பொருந்தி மால் ஆனான் – வலிப்பும் விக்கலும் சேர்ந்து மயக்கம் உடையவனானான்; வலிப்புவிக்குளே பொருந்தி மால் ஆனான் – வன்மை யையுடைய பூமிதேவியினிடத்தில் மனம் பொருந்திக் காதலுடையவன் ஆனான்.

## வேட்டியிடை வித்தகன்

திருவல்லிக்கேணியில் திருவேட்டீசுவரன் பேட்டை என்ற பகுதி இருக்கிறது. அங்கே திருவேட்டீசுவரன் கோயில் என்ற சிவாலயம் இருக்கிறது. சிவலிங்கத்தில் வெட்டுக் குறி இருக்கிறது. அருச்சுனன் அடித்த வில் தழும்பை நினைப்பூட்டுவது அது. சிவபெருமான் வேடுவனாக எழுந்தருளி அருச்சுனனோடு போராடிய போது அவன் அடித்தான். வேடுவ வடிவத்தில் வந்து அடிபட்டவன் என்பதை எண்ணி வேட்டீசுவரன் என்ற திருநாமம் வழங்குகிறது. வேடு–வேடன். இத்தகைய லிங்கத்தைப் பார்த்தப்பிரகர லிங்கம் என்பார்கள். "தீக்காலி வல்லந்திருவேட்டியும்" என்று அப்பர் சுவாமிகளால் பாடல் பெற்ற வேட்டி என்ற வைப்புத்தலம் இது. திருவேட்டீசுவரன் பேட்டையில் பிள்ளையார் கோயில் தெருவில் தியாகராஜ விலாசத்தில்தான் தமிழ்த் தாத்தா டாக்டர் மகா மகோபாத்தியாய ஐயரவர்கள் வாழ்ந்தார்கள். அவர்களிடம் மாணாக்கராக இருந்து கி.வா.ஜ.பாடம் கேட்ட காலத்தில் ஐயரவர்கள் அடிக்கடி சமஸ்யை கொடுத்து இவரைப் பாடச் சொல்வார்கள். அப்படி

இவர் பாடிய பாடல்கள் பல. திருவேட்டீசுவரனைப் பற்றியும் பல பாடல்கள் பாடியிருக்கிறார்.

"இறைவன் பல ஆடை வகைகள் புனைந்திருந்தாலும் அவனைப் புலவர்கள் திகம்பரன் என்றே சொல்லுகிறார்கள்" என்ற கருத்து அமையச் சிலேடையாக ஒரு பாடல் பாடினார்.

தலையிலொரு சோமனுளான்;
தங்குகையில் கலையுடையான்;
நிலையுடைய வத்திரங்கள்
நீங்கரிய ஐந்துடையான்;
விலையுடைய வேட்டியிடை
வித்தகனே ஆயினும்என் ?
துலையுடைய நாவுடையோர்
நக்கனென்றே சொல்லுவரே.

சோமன் – வேட்டி, சந்திரன். கலை – ஆடை, மான். வத்திரங்கள்–வஸ்திரங்கள் (ஆடைகள்), வக்த்ரங்கள் (முகங்கள்); இறைவனுக்குத் தத்புருஷம், வாமதேவம், அகோரம், சத்தியோஜாதம், ஈசானம் என்ற ஐந்து முகங்கள் உண்டு. விலை உடைய வேட்டியிடை வித்தகன் –விலைமிக்குடைய வேட்டியை இடையிலே உள்ள பெருமான், மதிப்பையுடைய திருவேட்டி என்னும் தலத்தினிடையே உள்ள பெருமான். துலையுடைய நாவுடையோர் – துலாக்கோலைப் போல நடு நிலையில் நின்று பேசும் நாவையுடைய பெரியவர்கள். நக்கன்– திகம்பரன்.

'தலையில் முண்டாசு, கையில் அங்க வஸ்திரம், கையிருப்பில் ஐந்து ஆடைகள், இடுப்பில் விலை உயர்ந்த வேட்டி ஆகிய இவ்வளவு இருந்தும், பெரியவர்கள் திகம்பரனென்றே சொல்லுகிறார்களே' என்று தொனிக்கப் பாடியது இது.

# சிலேடைப் பாடல்கள்

இவர் வெளியூர்களுக்குச் செல்லும்போதெல்லாம் சொற்பொழிவு ஆற்றாத மற்ற நேரங்களில் நண்பர்களுடன் இருந்து அளவளாவி மகிழ்வார். தம்முடைய அநுபவங்களைச் சொல்வார். தம் ஆசிரியப் பெருமானுடைய புகழைப் பேசுவார். அன்பர்கள் புதிய பாடல்களைப் பாடச் சொல்வார்கள். அவர்கள் சொல்லும் பொருளை வைத்தும், ஈற்றடியை வைத்தும் உடனுக்குடன் பாடித் தருவார். அவற்றில் சிலேடைப் பாடல்களும் பல. அவற்றை அங்கங்கே விட்டுவிட்டு வந்து விடுவார். சிலவற்றையே எழுதிக் கொண்டிருப்பார். இப்படி நூற்றுக்கணக்கான பாடல்கள் உண்டு. அவற்றில் கிடைத்த சிலேடைப் பாடல்கள் சிலவற்றை இங்கே காணலாம்.

## காபிக்கும் பழையதுக்கும்

கல்கத்தாவுக்குச் சென்றிருந்த சமயத்தில் நண்பர்களோடு உரையாடிக் கொண்டிருந்தபோது பாடிய சிலேடைகள் பல. அவற்றில் ஒன்று இது.

கல்கத்தா நண்பருள் திரு. சீதாபதி (இப்போது அமரராகி விட்டார்) அவர்கள் காபிக்கும் பழையதுக்கும் சிலேடை சொல்லச் சொன்னார். (இவர் காபி அருந்ாதவர்).

காலை உணவாகிக் கைப்பிசைய நல்லதாய்ப்
பாலருந்தி வேண்டாத பான்மையால் – சீலமிகு
சீதா பதியென்னும் செம்மலே, காபியினை
ஓதாய் பழையதென் று.

**காபிக்கு:** கைப்பு இசைய நல்லதாய் - கசப்புப் பொருந்த நல்லதாகி. பால் அருந்தி வேண்டாத பான்மையால் – பாலை அருந்துபவனாகிய நான் வேண்டாத இயல்பினால். **பழைய துக்கு :** கை பிசைய நல்லதாய் – கையினால் பிசைதலால் நலமுடையதாகி. பாலர் உந்தி வேண்டாத பான்மையால் – இளம் பிள்ளைகள் தள்ளி விட்டு வேண்டாத இயல்பினால்.

## ஆனைக்கும் பானைக்கும்

வேறு ஒரு நண்பர் ஆனைக்கும் பானைக்கும் சிலேடை சொல்லச் சொன்னார்.

*கரியாத லால்அடும் காரியத்தைச் செய்யும்*
*உரிமையா லேஉடைந் தோடா — விரிதலால்*
*அங்குசவன் செய்கைக் கடங்கலால் பானையினைப்*
*பொங்குமத யானையெனப் போற்று.*

**பானைக்கு:** கரி ஆதலால் – அடுப்பில் ஏற்றிக் கரியாவதால். அடும் காரியத்தை – சோறு சமைக்கும் செயலை. உடைந்து ஓடா விரிதலால் – உடைந்து பானையென்னும் பெயர் போய் ஓடாக விரிந்து விடுவதால். அம் குசவன் செய்கைக்கு அடங்கலால்– அழகிய குயவனுடைய தொழிலுக்கு அடங்குவதனால். **யானைக்கு:** கரி ஆதலால்- கரி என்று பெயர் உடையதாதலால். அடும் காரியத்தை – போர்களத்தில் பகைவர்களைக் கொல்லும் செயலை. உடைந்து ஓடா இரிதலால் - சில சமயங்களில் தோற்றுப் போய் ஓடி நீங்குவதால். அங்குசவன் செய்கைக்கு அடங்கலால் – அங்குசத்தின் வன்மையான செய்கைக்கு அடங்கி நிற்பதால்.

## புத்தகத்துக்கும் வேசிக்கும்

*கட்டுதலால் மேல்துணியைக் காட்டிக் கவர்தலால்*
*ஒட்டுப்பொருள் சேர்முன் னுரையினால்—தொட்டபக்கம்*
*மாற்றிப் புரட்டுதலால் வாசித்த லால்வேசி*
*தோற்றிய புத்தகமாச் சொல்.*

**வேசிக்கு:** கட்டுதலால்—அணைப்பதனால். மேல் துணியைக் காட்டிக் கவர்தலால்—தான் அணிந்த ஆடையலங்காரத்தைக் காட்டி உள்ளத்தைக் கவர்வதால். ஒட்டு பொருள் சேர் முன் உரையினால்—தனக்கு ஒட்டுகின்ற செல்வத்தைச் சேர்ப்பதற்குரிய முன் பேசும் இங்கிதமான வார்த்தைகளால். தொட்ட பக்கம் மாற்றிப் புரட்டுதலால் - தான் ஒரு முறை தொடர்பு கொண்டவரை மாற்றி விட்டுப் புரட்டுச் செய்வதால். வாசித்தலால் - வாசனை வீசுவதால்.

**புத்தகத்துக்கு:** கட்டுதலால்—பைண்டு செய்வதால். மேல் துணியைக் காட்டிக் கவர்வதால்—கலிகோ பைண்டென்று காட்டி அதிகப் பணம் வாங்குவதால். ஒட்டு பொருள் சேர் முன் உரையினால்— நூலினுள்ளே உள்ள பொருளை இன்னதென்று சொல்லும் முகவுரையினால். தொட்ட பக்கம் மாற்றிப் புரட்டுதலால்—படிக்கும்போது முதலில் எடுத்த பக்கம் முடிந்தவுடன் அந்தப் பக்கத்தை மாற்றிப் புரட்டி அடுத்த பக்கத்தைப் படிக்கத் தொடங்குவதால், வாசித்தலால் - படிப்பதனால்.

## இரும்புக்கும் கரும்புக்கும்

**வெட்டி எடுத்தலால் மேல்ஆலை யிற்புகலால்**
**ஒட்டு கரும்பொன் றுறுபெயரால் —கட்டுமதன்**
**பல்வடிவம் செய்து பதியவில் லாகுதலால்**
**நல்லிரும்பு தான்கரும்பா நாட்டு.**

**இரும்புக்கு:** வெட்டி எடுத்தலால் – நிலத்திலிருந்து வெட்டி எடுப்பதனால். மேல் ஆலையில் புகலால்– அப்பால் உருக்குகின்ற இரும்பாலையில் புகுவதனால். ஒட்டு கரும்பொன் துறுபெயரால் – சார்த்திச் சொல்கின்ற கரும்பொன் என்று சேர்ந்த பெயரினால். சுட்டும் அதன் பல் வடிவம் பெய்து - சுட்டிக் காட்டும் அந்த இரும்பினாற் செய்த கம்பி, ஆணி முதலிய பல வடிவப் பொருள்களை இணைத்து. பதிய - அவை பதிவதனால். இல் ஆகுதலால்– வீடு ஆவதனால்.

நிலத்திலிருந்து வெட்டி யெடுத்து ஆலையில் உருக்கிப் பதப்பட்டு, கரும்பொன் என்ற பெயரைப் பெற்று, பல வகையான வடிவமுள்ள பொருளாகி வீடு கட்ட உதவுகிறது இரும்பு என்பது கருத்து.

**கரும்புக்கு:** வெட்டி எடுத்தலால் – பாத்தியிலிருந்து வெட்டி எடுப்பதனால். மேல் ஆலையில் புகலால்– அப்பால் கரும்பாலையில் சாறு பிழியப் புகுவதனால். ஒட்டு கரும்பு ஒன்று பெயரால் – சேர்ந்த கரும்பு என்ற பொருந்திய பெயரினால். சுட்டு மதன் - யாவரும் சுட்டிச் சொல்லும் காமன். பல் வடிவு அம்பு எய்து பதிய – பல வடிவுகளையுடைய மலராகிய அம்புகளை எய்து பதியும்படி செய்ய. வில் ஆகுதலால் – அவனுடைய வில் ஆவதால்.

கரும்பு பாத்தியிலிருந்து வெட்டி ஆலைக்குச் செல்கிறது. கரும்பு என்று பெயர் பெறுகிறது; மன்மதன் தன் பாணங்களை வைத்து எய்வதற்கேற்ற வில் ஆகிறது என்பது கருத்து.

## மண்ணுக்கும் பெண்ணுக்கும்

*மக்களைத் தாங்குதலால் மாண்போகம் தந்திடலால்*
*தக்கபடி நாடுபதி தான்பெறலால் — மிக்ககவின்*
*ஏரால் வளம்பெற் றெழுபருவம் சேர்தலால்*
*பாராம்மண் பெண்ணெனவே பார்.*

**மண்ணுக்கு:** மக்களைத் தாங்குதலால் – உலகிலுள்ள மக்களைத் தாங்குதலால் (தரை என்ற பெயர் பூமிக்கு உண்டானது, தாங்குவது என்ற காரணத்தால்). மாண்போகம் தந்திடலால் – சிறந்த பயிர் விளைச்சலைத் தருவதனால் (பயிர் விளைச்சலை இருபோகம், முப்போகம் என்பது வழக்கம்). தக்கபடி நாடு பதி தான் பெறலால் – இடத்துக்கு ஏற்ற வகையில் நாடு என்றும் ஊர் என்றும் பெயர் பெற்ற இடங்களைத் தான் பெற்றிருப்பதால் (வெவ்வேறு நாடுகளும் அந்த நாடுகளில் வெவ்வேறு ஊர்களும் இருக்கின்றன). மிக்க கவின் ஏரால் வளம் பெற்று – மிகுதியாக உள்ள அழகு பெற்ற ஏரினால் உழப் பெற்ற வளத்தை அடைந்து (ஏர் உழும் கருவி). எழு பருவம் சேர்தலால் – பயிர்கள் எழுகின்ற பருவத்தைச் சேர்வதனால் (உழுது பிறகு பருவத்திலே பயிர்கள் எழும்; 'பருவத்தே பயிர் செய்' என்பது ஔவை வாக்கு). பார் ஆம் மண் – நிலவுலகத்தில் அமைந்த மண்.

**பெண்ணுக்கு :** மக்களைத் தாங்குதலால் – கருவுற்ற போது குழந்தைகளை வயிற்றிலும் பிறந்த பிறகு மடியிலும் மார்பிலும் தோளிலும் தாங்குவதால். மாண் போகம் தந்திடலால் – இல்லறத்தில் மாட்சி பெற்ற இன்பத்தைத் தருவதனால் (அறம் பொருள் இன்பம் வீடு என்ற உறுதிப் பொருளில் ஒன்றாகையால் மாண் போகம் ஆயிற்று). தக்கபடி நாடு பதிதான் பெறலால்–

தன்னுடைய அழகு முதலியவற்றுக்கு ஏற்றபடி நாடுகின்ற கணவனைத் தான் அடைதலால். மிக்க கவின் ஏரால் வளம் பெறலால் - மிகுதியான அழகும் எழுச்சியும் பெற்று அவற்றால் பெண்மையென்னும் சிறப்பை அடைதலால் (கவின்- அழகு, ஏர்- எழுச்சி). எழு பருவம் சேர்தலால்- பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்ற ஏழு பருவங்களைச் சேர்வதனால்.

## கடிகாரத்துக்கும் ரெயில் வண்டிக்கும்

*சாவி கொடுத்தலால் காலம் தவறாமல்*
*போவதனால் எண்கள் பொருந்துதலால்— மேவும்*
*மணியடித்தே ஓடுதலால் வாய்ந்தசக்க ரத்தால்*
*அணிகடிகா ரம்ரெயிலே ஆம்.*

**கடிகாரத்துக்கு** : சாவி கொடுத்தலால்... போவதனால்—வெளிப்படை. எண்கள் - மணியைக் குறிக்கும் இலக்கங்கள். சக்கரம் – உள்ளே உள்ள சக்கரங்கள்.

**ரெயில் வண்டிக்கு** : சாவி கொடுத்தலால்— ஒவ்வொரு ஸ்டேஷனிலும் சாவி கொடுப்பதனால். எண்கள் - வகுப்பைக் குறிக்கும் I, II என்னும் எண்கள். சக்கரம்—கீழே உள்ள சக்கரங்கள்.

## வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும்

*அடைமேல் தடவி அயிறலால் வெள்ளை*
*யுடையநிறம் கொண்டுசட்டி உற்றிடலால் —அடைகின்ற*
*மஞ்சளை வண்ணமாற் றுய்த்துச்செவ் வாயுறலால்*
*அஞ்சுண்ணாம் பும்வெண்ணெய் ஆம்.*

**சுண்ணாம்புக்கு** : அடை மேல் தடவி அயிறலால்— வெற்றிலையின்மேல் தடவி உண்ணுவதால். வெள்ளை

உடை நிறம் கொண்டு – வெள்ளையாகிய தன்னுடைய நிறத்தை மேற்கொண்டு. சட்டி உற்றிடலால்– சுண்ணாம்புச் சட்டியில் இருப்பதால். அடைகின்ற-தான் சேருகின்ற. மஞ்சளை – மஞ்சட் பொடியை. வண்ணம் மாற்று உய்த்து – நிறத்தில் மாற்றத்தைச் செலுத்தி. செவ்வாய் உறலால்– செவ்வண்ணமாய் அமைவதால்.

**வெண்ணெய்க்கு :** அடைமேல் தடவி அயிறலால்– அடையென்னும் சிற்றுண்டியின் மேலே தடவி உண்ணுவதால். வெள்ளை உடை நிறம் கொண்டு– வெண்மையாகிய தன் நிறத்தைப் பெற்று. சட்டி உற்றிடலால் – தாழியில் இருப்பதால். அடைகின்ற– அன்பர்கள் புகலடைகின்ற. மஞ்சு அளை வண்ணம் மால்–மேகத்தைப் போன்ற வண்ணத்தையுடைய கண்ணன். துய்த்து உண்டு. செவ்வாய் உறலால் - அவன் சிவந்த வாயில் சேர்தலால்.

மாலைக்கும் சாலைக்கும்

**கானடைகார் வண்டி வருதலால் காணுந்தா**
**ரானதுமேல் என்னலால் ஆலமது –தானுறலால்**
**வாகை யிருபுறமும் வாய்த்தலால் மாலையினை**
**ஏகுகின்ற சாலையாய் எண்.**

**மாலைக்கு :** கான் அடை – மணத்தை அடைகின்ற. கார்வண்டு இவருதலால் – கரிய வண்டுகள் மொய்ப்பதனால். காணும் தார் ஆனது. மேல் என்னலால் – காண்பதற்கு அழகாகிய தாரானது, இது மேலானது என்று சிறப்பித்தலால் ஆல – அசைய. மது தான் உறலால் – தேன் இருத்தலால். வாகை– அணிந்தவர் தோளை (வாகு–தோள்). இருபுறமும் வாய்த்தலால் – இரண்டு பக்கத்திலும் பொருந்துதலால்.

***சாலைக்கு :*** கால் நடை கார் வண்டி வருதலால் – ஆடு மாடுகளாகிய கால்நடைகளும் கார்களும் பிற வண்டிகளும் வருவதனால். காணும் தார் மேல் என்னலால் – இதன் மேல் தார் தோன்றும் என்று சொல்வதனால் (தார் – நிலக்கரி தார், **Tar**). ஆலம் அதுதான் உறலால் – அருகில் ஆலமரம் இருப்பதால். வாகை இருபுறமும் வாய்த்தலால் – வாகை மரங்கள் இரண்டு பக்கங்களிலும் பொருந்தி வளர்தலால் (சாலையோரத்தில் ஆலமரங்களும் வாகை மரங்களும் இருக்கும்).

## தேனுக்கும் மீனுக்கும்

*பூமிசைத்து வண்டு பொருந்துதல் சைவர்கள்*
*தாமிசைந்தே ஆரா தனைத்தகையின் –நீர்மையுறல்*
*ஆமடையிற் சேரல் அவண்துள்ளி ஏய்தல்இவை*
*தாமுறலால் தேன்மீனாச் சாற்று.*

**தேனுக்கு :** பூ மிசைத்து வண்டு பொருந்துதல் – பூவின் மேலே உள்ளதாகிய வண்டு பொருந்துவது. சைவர்கள் தாம் இசைந்தே ஆராதனைத் தகையின் நீர்மையுறல்– –சைவர்கள் தாம் மனம் உவந்து பூசை செய்யும் தகுதியாகிய சிறப்பை. அடைதல். ஆம் அடையிற் சேரல்– மரத்தின்மேல் ஆகும் தேனடையில் சேர்தல். அவண் துள்ளி ஏய்தல் – அங்கே துளியாகப் பொருந்துதல்.

***மீனுக்கு :*** பூமிசை துவண்டு பொருந்துதல் – நிலத்தின் மேல் போட்டால் துவண்டு சேர்தல். சைவர்கள்தாம் மிசைந்தே ஆராது அனைத்தகையின் நீர்மையுறல் – சைவர்கள் உண்டு நிரம்பாது அந்த இயல்பாகிய பண்பை அடைதல். ஆம் மடையில் சேரல்– வயலுக்குப் பாயும் மடையிலே சேர்தல். அவண் துள்ளி ஏய்தல் – அங்கே துள்ளிப் பொருந்துதல்.

## வில்லுக்கும் நெல்லுக்கும்

*அம்புவிட முற்றும் வளைந்து களத்துறும்*
*நம்புபெரு வீரத்தை நண்ணுறும் — பம்புகின்ற*
*வைக்கோலை ஏற்றதனைப் போரில் வயக்கும்அந்தக்*
*தக்கோர்வில் நெல்லெனவே சாற்று.*

**வில்லுக்கு :** அம்பு விட முற்றும் வளைந்து – அம்பு விடும் பொருட்டு முழுவதும் வளைந்து. களத்துறும் – போர்க் களத்தை அடையும். நம்பு பெரு வீரத்தை நண்ணுறும் – விரும்புகின்ற பெரிய வீரத்தைப் பொருந்தும். பம்புகின்ற வை கோலை ஏற்று – பரவுகின்ற கூரிய அம்பைத் தாங்கி. அதனை – போரில் வயக்கும்அதைப் போரிலே எய்து விளங்கச் செய்யும்.

**நெல்லுக்கு :** அம்பு விட முற்றும் – தண்ணீர் பாய்ச்சுவதால் முதிர்ச்சியை அடையும். வளைந்து களத்துறும் – கதிர் முற்றி வளைந்து பிறகு களத்துமேட்டை அடையும். நம்பு பெரு ஈரத்தை நண்ணுறும் – விரும்புகின்ற மிக்க ஈரத்தை அடையும். பம்புகின்ற வைக்கோலை ஏற்று - பரப்புகின்ற வைக்கோலைப் பெற்று. அதனை போரில் வயக்கும் – அதைப் போரிலே சேர்ந்து விளங்கச் செய்யும்.

## வேலுக்கும் நூலுக்கும்

*கூர்மை யுறும்கதிராற்*
*கோல முறும்தைக்கும்*
*ஏர்மிகுந்த வெண்மை*
*இயைந்திருக்கும் — நேர்நிரையாம்*
*பாவூடு சேர்த்துக்*
*கலைத்தொழிலார் பாங்கிசைப்பார்*
*தாவுசுடர் வேல் நூலாச் சாற்று.*

**வேலுக்கு :** கூர்மை உறும் – கூரிய தன்மையைப் பெறும். கதிரால் கோலம் உறும் – கிரணங்களால்

அழகு பெறும் (கதிர்வேல் என்று கூறுவது காண்க). தைக்கும்' - பகைவர் மார்பிலே தைக்கும். ஏர்மிகுந்த வெண்மை இயைந்திருக்கும் - அழகு மிக்க வெள்ளை நிறத்தைப் பொருந்தியிருக்கும். நேர் நிரை ஆம் பாவூடு- நேர் நிரை என்னும் அசைகளாலாகிய கவிதையினூடு. சேர்த்து - இணைத்து. கலைத் தொழிலார் - கவிதையாகிய கலையை இயற்றும் கவிஞர். பாங்கு இசைப்பார் - அதன் பெருமையைச் சொல்வர்.

**நூலுக்கு :** கூர்மை உறும் கதிரால் கோலம் உறும் - கூர்மை பெற்ற கதிரென்னும் கருவியினால் உருவத்தை அடையும் (பருத்தியை நூலாக்கும்போது கதிர் என்னும் கருவி பயன்படும்). தைக்கும் - துணியைத் தைக்கும். ஏர் இயைந்திருக்கும் நேர் நிரை ஆம் பா ஊடு சேர்த்து -நேராகக் கட்டியுள்ள பா, குறுக்கே வரிசையாக அமையும் ஊடு ஆகிய இரண்டிலும் சேர்த்து. கலைத் தொழிலார் - ஆடையை நெய்யும் தொழிலாளர்கள். பாங்கு இசைப்பார் - பக்கத்தில் இணைப்பார்கள்.

## சிவபெருமானுக்கும் இட்டிலிக்கும்

*ஆட்டியபின் ஆவியிலே*
*பக்குவங்கண் டங்கெடுக்கும்*
*ஈட்டால் பொடிவெண்மை*
*ஏய்வுறலால் - போட்ட இலை*
*மேலுறலால் சாம்பாரில்*
*மேவியின்பம் தந்திடலால்*
*கோலுமரன் இட்டிலியாக் கொள்.*

**சிவபெருமானுக்கு :** ஆட்டியபின் - உயிர்களைப் பிறக்கச் செய்து அலைத்த பிறகு. ஆவியிலே பக்குவம் கண்டு - அவ்வுயிர்களின் பக்குவத்தை அறிந்து. அங்கு எடுக்கும் ஈட்டால் - அப்போது மேற்கதிக்கு எடுத்துச்

சொல்லும் பெருமையினால். பொடி வெண்மை ஏய்வுறலால் – திருநீற்றினால் வெண்ணிறத்தைப் பெறுதலால். போட்ட இலை மேல் உறலால் – அன்பர்கள் அருச்சித்த பத்திரங்கள் தன்மேல் இருப்பதனால். சாம் பாரின்மேவி - மக்கள் இறந்துபடும் நிலவுலகத்தில் எழுந்தருளி. இன்பம் தந்திடலால் - அன்பர்களுக்கு இன்பத்தை வழங்குவதால். கோலும் அரன் - அலங்காரம் செய்யும் சிவபெருமான்.

**இட்டிலிக்கு :** ஆட்டியபின் – மாவை ஆட்டிய பிறகு. ஆவியிலே பக்குவம் கண்டு அங்கு எடுக்கும் ஈட்டால்– ஆவியிலே வேக வைத்து வெந்த பக்குவத்தை அறிந்து அப்போது எடுக்கும் ஈட்டால் (இட்டிலியை ஒருமுறை எடுத்தால் ஓர் ஈடு என்று சொல்வது வழக்கம்). பொடி வெண்மை ஏய்வுறலால் – மிளகாய்ப் பொடியையும் வெள்ளை நிறத்தையும் அடைதலால். போட்ட இலைமேல் உறலால் – உண்ணுவதற்காகப் போட்ட இலையின்மேல் இருத்தலால். சாம்பாரில் மேவி இன்பம் தந்திடலால் – சாம்பாரிலே சேர்ந்து இனிய சுவையாகிய இன்பத்தைத் தருவதால்.

இந்தப் பாடலை அன்பர் திரு. ந. ரா. முருகவேளுடன் இலங்கைக்குச் சென்றிருந்தபோது (21.4.62) பாடியது.

## வெறிவிலக்குத்துறைப் பாடல்கள்

அகப்பொருள் துறைகள் பலவற்றில் வெறி விலக்கு என்பது ஒன்று. வெறியாடுவதை விலக்குவது என்பது அதன் பொருள். களவுக் காதலில் ஈடுபட்டுத் தலைவனும் தலைவியும் அளவளாவுகிறார்கள். சில காலம் தலைவன் வந்து சந்திக்க முடிவதில்லை. அதனாலும், களவுக் காதல் வெளியாகிவிடப் போகிறதே என்ற அச்சத்தாலும் தலைவி வருந்துகிறாள். அவள் உடல் மெலிவடைகிறது. அதைக் கண்ட அவளுடைய செவிலித்தாயும் பெற்ற தாயாகிய நற்றாயும் கவலையுற்று, 'இது தெய்வக் குற்றமாக இருக்குமோ?' என்று அஞ்சிப் பூசாரியை அழைத்துப் பூசை போடச் செய்கிறார்கள்; ஆட்டைப் பலி கொடுக்கச் செய்கிறார்கள். அதுதான் வெறியாட்டு.

தலைவியினுடைய உயிர்த்தோழி இதைக் கண்டு வருந்துகிறாள். 'இவர்கள் உண்மையை உணராமல் இவ்வாறு செய்கிறார்களே!' என்று வருந்தி, 'இப்போது நாம் இவர்களுக்கு உண்மையை உணர்த்தலாம். இதுதான் தக்க தருணம்' என்று குறிப்பாகத் தலைவி ஒரு தலைவனிடம் காதல் பூண்டிருப்பதைச் சொல்கிறாள்.

இவ்வாறு சொல்வதை அறத்தொடு நிற்றல் என்பார்கள். வெறிவிலக்கும் முகத்தால் அறத்தொடு நிற்றல் என்பர். அறத்தொடு நிற்றல் – உண்மையைச் சார்ந்து நிற்றல்; உண்மையைக் கூறுதல். இவை யாவும் தோழி கூற்று.

பின்கண்ட செய்யுட்கள் அவ்வப்போது பாடியவை., ஒவ்வொரு பாட்டிலும் ஈற்றடியில் தொனி நயம் இருக்கும்.

## இம்மை — அம்மை

*நம்மைப் பணிகொண்டு வேட்டீச்*
*சுரத்தமர் நாதர்வினை*
*வெம்மைக் கொருமருந் தானவர்*
*தம்சீர் விளம்பலர்போல்*
*சும்மைப் படவெறி யாடின்இக்*
*காமத் துயர்படும்என்*
*றிம்மைக்குக் கேடுசூழ்ந் தாள்அம்மைக்*
*கென்கொல் இயம்புவதே.*

வேட்டீச்சுரம் – திருவேட்டீசுவரர் கோயில். வினை வெம்மைக்கு – வினைகளால் உண்டான தாபங்களுக்கு. விளம்பலர் போல் – சொல்லாத அஞ்ஞானிகளைப் போல. சும்மைப்பட – ஆரவாரம் உண்டாக. வெறி ஆடின் – வெறியாட்டு எடுத்தால். இக் காமத்துயர் படும் என்று – தலைவி கொண்ட இந்தக் காமமாகிய துயரம் போகும் என்று எண்ணி. இமைக்கு – இந்த ஆட்டுக்கு. கேடு சூழ்ந்தாள் – அழிவைத் தேடினாள். அம்மைக்கு– அத்தகைய தாய்க்கு. மை – ஆடு.

ஈற்றடி, ‘இகலோக வாழ்க்கைக்கு அழிவைத் தேடினாள்; பரலோக வாழ்க்கைக்கு என்ன கிடைக்கும் என்று சொல்வது?’ என்று மற்றொரு பொருள் தொனிக்க நின்றது. இம்மை – இகவாழ்வு, மறுமை – மறு உலக வாழ்வு.

## அந்தகர் - அந்தகர்

பந்தம் அறப்பிற விப்பெரு
வாரியிற் பாடுறுவார்
வந்தணு கிப்பணி வார்எனின்
இன்பம் வழங்குபிரான்
நுந்தல் இலாச்சுடர் வேட்டீச்
சுரத்திவள் நோய்அறியா
தந்தக ரைக்கொல எண்ணின
ரேஇவர் அந்தகரே.

பந்தம் அற – பாசம் நீங்க. பிறவிப் பெருவாரியில் பாடு உறுவார் – பிறவியென்னும் பெருங்கடலில் அகப்பட்டுத் துன்பத்தை அடைபவர்கள். நுந்தல் இலாச் சுடர் - தூண்டாத விளக்குப் போன்ற சிவபெருமான். வேட்டீச்சுரத்து – திருவேட்டீசுவரன் எழுந்தருளிய தலத்தில். இவள் நோய் அறியாது – இந்தத் தலைவியின் காதல் நோயை அறியாமல். அம் தகரைக் கொல எண்ணினரே – அழகிய ஆட்டைக் கொல்ல எண்ணினார்களே. இவர் – இந்தச் செவிலித்தாயும் நற்றாயும். அந்தகரே – கண் இல்லாதவர்களே. தகர் – ஆடு.

குருடர்களைக் கொல்ல எண்ணினர் : இவர் யமன் போன்றவர்கள் என்பது தொனி. அந்தகர் (அம் தகர்) அழகிய ஆடு, குருடர்.

## கொம்பற்ற தேகர்

கம்புற் றலறும் கடல்சூழும்
சென்னைக் கடிநகருள்
வெம்பற் றவாஅறுத் தோர்பணி
ஈசன்றன் வேட்டிவெற்பர்
தம்பற் றுறுவாள்ஓர் நோயால்
வருந்து தலைஒழிக்கக்
கொம்பற்ற தேகர் தலைதுணிப்
பான்யாய் குறித்தனளே.

கம்பு உற்று அலறும் – சங்குகள் சேர்ந்து முழங்கும். வெம்பற்று அவா அறுத்தோர் – வெம்மையான பற்றையும் அவாவையும் நீக்கிய முனிவர்கள். வேட்டிவெற்பர் - திருவேட்டியிலுள்ள மலைக்குரிய தலைவர்; குறிஞ்சி நிலத் தலைவர்; இவ்வாறு கூறுதல் மரபு. வெற்பர்தம் பற்று உறுவாள் – தலைவருடைய தொடர்பை அடைந்தவளாகிய தலைவி. ஓர் நோயால் வருந்துதலை ஒழிக்க – காதல் நோயால் வருத்தமுறுவ தைப் போக்க. கொம்பு அற்ற தேகர் – தேகர் என்ற சொல்லிலுள்ள கொம்பு அற்ற தகரினுடைய (ஆடு). தலைதுணிப்பான் - தலையை வெட்டுவதற்கு. யாய் – குறித்தனள் – தாய் எண்ணினாள்.

தேகர் என்ற சொல்லில் முதலில் உள்ள கொம்பை அழித்துவிட்டால் தகர் என்ற சொல் வரும்.

முன்பே கொம்பு போன தேகத்தையுடையவர் தலையை இப்போது வெட்ட முற்பட்டாள் என்று மற்றொரு பொருள் தொனித்தது.

### காந்தமலை முருகன்

பின்வருபவை இவருடைய வழிபடு தெய்வமாகிய காந்தமலை முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடியவை. இவருடைய ஊராகிய மோகனூரில் உள்ள குன்று காந்தமலை. அதன் பெயரை யே இவர் சென்னையில் உள்ள தம் இல்லத்துக்கு வைத்துள்ளார். இந்தப் பாடல்களும் தோழியின் கூற்றாக வெறிவிலக்குத் துறையில் அமைந்தவை.

## ஆடு - அடு

வீடுதந் தாளும் முருகேசன்
  காந்த விலங்கலிலே
காடுதந் தாரும் குழலுடை
  யாளுக்குக் காதல்இயல்
போடுதந் தானை அறிகிலள்
  தாய்; வெறி யுற்றெடுத்தாள்;
ஆடு தலைக்குறைத் தேஅடு
  என்றனள்; ஆவதென்னே ?

காந்த விலங்கலில் – காந்த மலையில். காடு தந்து ஆரும் குழல் உடையாளுக்கு – காட்டின் தோற்றத்தைத் தந்து நிரம்பிய கூந்தலை உடைய தலைவிக்கு. காதல் இயல்போடு தந்தானை– இயற்கையாக காதலை அளித்த தலைவனை. வெறி உற்று எடுத்தாள் – வெறியாட்டை எடுக்கச் செய்தாள். ஆடு தலைகுறைத்தே அடு என்றனள் – ஆட்டின் தலையை வெட்டி பலி கொடு என்றாள்; ஆடு என்ற சொல்லில் முதல் எழுத்தாகிய ஆ என்னும் உயிர் எழுத்தைக் குறைத்து அடு என்றாள் என்பது நயம். ஆவது என்னே – இதனால் ஆகும் பயன் யாது?

## வரைதல் - மை

கையினில் நெல்லிக் கனியென
  அன்பர் கணம்உவக்க
மெய்யருள் ஈபவன், காந்த
  மலைக்குகன் வெற்பில் இவள்
மையலுக்கேற்ற மருந்தறி
  யாள்தாய்; வரைதல்இன்றி
மையினைச் சிந்துவ தால்என்
  பயன்இந்த மாநிலத்தே.

கையினில் நெல்லிக் கனியென அருள் ஈபவன்: பிரத்தியட்ச தெய்வம் என்றபடி. இவள் மையலுக்கு ஏற்ற

மருந்து - இந்தத் தலைவியின் காமநோய்க்கு ஏற்ற பரிகாரத்தை. வரைதல் இன்றி மையினைச் சிந்துவதால் என் பயன் – திருமணம் செய்வதின்றி ஆட்டைப் பலி கொடுப்பதனால் உண்டாகும் பயன் யாது? எழுதுவதில்லாமல் வெறும் மையைச் சிந்துவதனால் என்ன பயன் என்று தொனிப்பது ஒரு நயம். வரைதல்– மணம் புரிதல், எழுதுதல். மை-ஆடு, எழுதும் மை. சிந்துதல் – அழித்தல், வீணே தரையில் சிந்துதல்.

## தீமேல் இவர் மை - தீமை

*நாமேல் நடக்கும் புலவர்தம்*
*பாடல் நயந்தவர்க்குப்*
*பூமேல் வராநிலை ஈபவன்*
*காந்தப் பொருப்பினிலே*
*ஏமேல் இவர்சிலை யான்மால் இவட்கென*
*எண்ணிலள் தாய்;*
*தீமேல் இவர்மையைப் போக்கினள்;*
*தீமையைப் போக்கிலளே.*

நாமேல் நடக்கும் புலவர் – கவிநடையுடன் பாடும் புலவர்; "நாமேல் நடவீர் நடவீர் இனியே" (**கந்தர் அநுபூதி**) நயந்து அவர்க்கு. ஏ மேல் இவர் சிலையான் மால் இவட்கு என – அம்பு மேலே சார்கின்ற வில்லையுடைய தலைவன் பாலுள்ள காதல் இவளுக்கு உள்ளது என்று. தீ மேல் இவர் மையைப் போக்கினள் - அக்கினி மேலே ஊர்ந்து வரும் ஆட்டைப் பலியிட்டனள்; அக்கினியின் வாகனம் ஆடு. தீமையை– தலைவிக்கு உள்ள துயரத்தை. தீயின் மேல் ஏறுகின்ற கறுப்பைப் போக்கினாளேயன்றி அதற்குக் காரணமான தீயின் தன்மையைப் போக்கிலள் என்பது தொனி.

## மறி மரி

செறிகின்ற பன்னிரு தோட்குகன்
  காந்தச் சிகரியிலே
நெறிகின்ற அண்ணல் ஒருவனை
  நேசித்த நீர்மையினை
அறிகின் றிலன் அன்னை; இம்மாதின்
  நோய்பட ஆம்வெறியில்
மறிஎன் பதனை மரிஎன்
  றனை; பிழை வந்ததுவே.

காந்தச் சிகரியில் – காந்த மலையில். நெறிநின்ற அண்ணல் ஒருவனை – நல்ல வழியில் ஒழுகும் தலைவன் ஒருவனை. இம்மாதின் நோய் பட – இந்தத் தலைவியின் மையல் நோய் நீங்க. ஆம் வெறியில் - இங்கே அமைந்த வெறியாட்டில். மறி என்பதனை மரி என்றனள் - மறி என்னும் பெயருடைய ஆட்டைச் செத்துப் போ என்றாள்; கொல்வித்தாள். பிழை – தலைவியின் நோய் தீராமை.

தனக்கு உண்டான வெறியில் மறி என்று வல்லின றகர இகரம் போட்டுச் சொல்வதை இடையின ரகர இகரம் போட்டு மரி என்றாள்; இதில் எழுத்துப் பிழை வந்தது என்பது தொனி.

## பெருமை - சிறுமை

இருமையும் ஈந்தருள் எம்பிரான்
  காந்த எழில்மலையான்,
மருமலர் நீபத் தொடையவன் தாளை
  வணங்கிலர் போல்
ஒருமை மனத்திவள் தோள் அணைந்
  தானையாய் ஓர்ந்தறியாள்;
பெருமையைக் கொல்வதற் கெண்ணும்
  சிறுமை பிடித்தனளே.

இருமை – இம்மை மறுமை இன்பம். மரு மலர் நீபத் தொடையவன் – மணம் பரவுகின்ற கடம்ப மாலையை

அணிந்த முருகன். ஒருமை மனத்து – இவளையன்றி வேறு யாரையும் விரும்பாத ஒருமை உள்ளத்தோடு. அணைந்தானை – தலைவனை. யாய் – தாய். பெருமையைக் கொல்வதற்கு எண்ணும் சிறுமை பிடித்தனளே – பெரிய ஆட்டைக் கொல்வதற்கு நினைக்கின்ற பாவ எண்ணத்தை மேற்கொண்டாள்; பெருந்தன்மையைப் போக்க எண்ணுகின்ற சிறுமைக் குணத்தை ஏற்றாள் என்பது தொனி.

### தகரம் - பொன்

*நிகரங் கொருவரில் லாக்கும ரேசன்*
*நிறைஎழிலான்*
*குகன் கொங்கி னிற்காந்தக் குன்றத்*
*தலைவன் இக் கோமகள்பால்*
*மிகஅன்பு கொண்ட திறம்அறி*
*யாள்தாய்; வெறியெடுத்தாள்;*
*தகரங் கழிக்கின் இவள்மேனிப்*
*பொன்னைத் தகர்ப்பதன்றே.*

காந்தக் குன்றத் தலைவன் – காந்த மலையிலுள்ள இத் தலைவியின் காதலன். வெறி எடுத்தாள் – வெறியாட்டை எடுக்கச் செய்தாள். தகர் அங்கு அழிக்கின் இவள் மேனிப் பொன்னைத் தகர்ப்பது அன்றே – ஆட்டை அங்கே பலியிட்டால் இந்தத் தலைவியின் மேனியில் பிரிவுத் துன்பத்தால் உண்டான பசலையை அது போக்குவது அல்லவே! பொன் – பசலை; இது பிரிவினால் உண்டாகும் நிறம். தகரம் கழிக்கின் இவள் மேனிப் பொன்னைத் தகர்ப்பது அன்றே – தகரம் என்னும் உலோகத்தைக் கழித்து விட்டால் இவள் மேனியிலுள்ள தங்கத்தை அது போக்குவது ஆகாதே என்று மற்றொரு பொருள் தொனித்தது.

## பாயசம் - மணமங்கலம்

*காயசம் பந்தத்தைப் போக்கி யருள்குகன்*
*காந்த மலை*
*மேயசெம் மற்கு மனங்கொடுத் தாள்தன்*
*விழைவறியாள்;*
*தாயென உள்ளவள், வேலனைக்கூவித்*
*தயையிலளாய்ப்*
*பாயசம் போக்கின் மணமங் கலம்செய்யும்*
*பாங்குறுமே.*

காய சம்பந்தத்தை – உடம்பின் தொடர்பை; பிறவியை. செம்மற்கு - தலைவனிடத்தில். மனம் கொடுத்தளாள் – மனத்தைப் பறிகொடுத்த தலைவி. வேலன் – பூசாரி. பாய் அசம்போக்கின் மணமங்கலம் செய்யும் பாங்குறுமே – பாய்கின்ற ஆட்டைப் பலிகொடுத்தால் தலைவிக்கு மணமாகிய மங்கல காரியத்தைச் செய்யும் தன்மை உண்டாகுமோ? இவளுக்குரிய தலைவனோடு இவளை மணம் செய்து கொடுப்பதுதான் பரிகாரமேயன்றி இந்த ஆட்டைக் கொல்வதால் பயன் இல்லை என்றபடி.

பாயசத்தை இல்லாமல் செய்து விட்டால் மங்கலமான மணம் செய்யும் பாங்கு வருமா என்பது தொனிப் பொருள். பாயசம் இல்லாமல் திருமணம் செய்ய முடியாது அல்லவா?

## ஆட்டும் - பாட்டும்

*வீட்டுக்கு வம்மெனத் தொண்டரை*
*ஏற்றும் விமலன்கொங்கு*
*நாட்டுக்குள் மோகையிற் காந்தச்*
*சிகரியின் நாயகன்சீர்*
*வேட்டுக் குலவாத பாதகர் போல்தாய்*
*வெறியெடுத்தாள்;*
*ஆட்டுக்கும் ஈங்கிவள் பாட்டுக்கும்*
*என்னை அமைதொடர்பே.*

வீட்டுக்கு வம் என - முத்தியை அடைய வாரும் என்று மோகையில் மோகனூரில். சிகரி - மலை. ஆட்டுக்கும் ஈங்கு இவள் பாட்டுக்கும் என்னை அமை தொடர்பே - பல் கொடுக்கும் ஆட்டுக்கும் இங்கே இந்தத் தலைவி படும் துன்பத்திற்கும் அமைந்த தொடர்பு யாது? பாடு - துன்பம்.

இந்த ஆட்டத்துக்கும் இவள் படும் பாட்டுக்கும் என்ன சம்பந்தம் என்று வேறு ஒரு பொருள் தொனித்தது.

### வாய்மை - பொய்ம்மை

காய்மலம் நீக்கிக் கருணையி லாழ்ந்திடக்
காந்தமலை
மேய பிரானை வழிபடும் தோன்றலை
வேட்டுநின்றாள்
தூய்மையை அன்பை நினைந்தில
ளேஅன்னை! சூழ்வெறியில்
வாய்மையைக் கொல்ல விரும்பினள்
பொய்ம்மை மனத்தினளே.

காய் மலம் - துன்புறுத்தும் மும்மலங்களை. தோன்றலை - தலைவனை. வேட்டு நின்றாள் - விரும்பி அந்த நிலையில் தளராது நின்ற தலைவியினுடைய. சூழ் வெறியில் - செய்கின்ற வெறியாட்டில். வாய்மையைக் கொல்ல விரும்பினள் பலி கொடுப்பதற்காக வாய்த்த ஆட்டைக் கொல்ல விருப்பம் கொண்டனள். பொய்ம்மை மனத்தினளே- பொய்யை எண்ணிய மனத்தையுடையவள்.

மிக்க வெறியினால் சத்தியத்தைக் கொல்ல விரும்பினாள் என ஒரு பொருள் தொனித்தது. வாய்மை-வாய்த்த ஆடு, சத்தியம்.

## கன்னி—சிங்கம்—மேடம்

வெள்ளைத் தனைய கருணையன் காந்த
 விலங்கலிலே
அள்ளிக் கொளுங்கவி னாள்இவள்
 நோயை அறிந்திலள்யாய்;
தெள்ளம் புனத்தில்இக் கன்னிக்கு
 முன்வரு சிங்கமதைக்
கொள்ளத் துணிந்திலள்; மேடத்தைக்
 கொல்லக் குறித்தனளே.

விலங்கலில் – மலையில். அள்ளிக் கொளும் கவினாள் இவள் – அள்ளிக் கொள்வது போன்ற திரண்ட அழகையுடைய இத்தலைவியினுடைய. தெள்ளும் புனத்தில் இக் கன்னிக்கு முன்வரு சிங்கமதை– தினைமாவைத் தெள்ளி உண்ணும் தினைக் கொல்லையில் இந்தத் தலைவிக்கு முன்னே வந்து உறவு பூண்ட சிங்கம் போன்ற தலைவனை. கொள்ளத் துணிந்திலள் – திருமணத்தினால் மாப்பிள்ளையாக ஏற்றுக் கொள்ளத் துணியவில்லை. மேடத்தை – ஆட்டை.

கன்னி, அதற்குமுன் உள்ள சிங்கம், மேடம் என்ற இராசிகளின் பெயர்கள் தொனித்தன. சிங்கத்தைக் கொள்ளாமல் மேடத்தைக் கொல்ல எண்ணினாள் என்றது ஒரு நயம்.

## மை - கண்

பொய்யை அழித்தவர் போற்றிய காந்தப்
 பொருப்புடையான்
செய்யதிருவடி போற்றல் இலாதார்
 செயலெனவே
ஐயன் ஒருவன் தருமால் எனஅன்னை
 ஆய்ந்தறியாள்,
மையை அழித்தால் மடவர லின்கண்
 வனப்புறுமே.

பொருப்பு – மலை. ஐயன் ஒருவன் தரும் மால் என –தல்லவியின் வேறுபாட்டுக்குக் காரணன் தலைவன் ஒருவன் தந்த காதல் என்று. மையை அழித்தால் – ஆட்டைப் பலி கொடுத்தால். மடவரலின்கண் வனப்பு உறுமே – இந்தத் தலைவியிடம் போன அழகு உண்டாகுமா? விரக நோயால் அழகு குலைந்து வருந்தும் இவள் நோயின் காரணம் அறிந்து மணம் செய்து கொடுத்தாலன்றி, இந்த ஆட்டைப் பலி கொடுப்பதால் பழையபடி அழகு பெறுவாளா என்றபடி.

கண்ணிலுள்ள மையை அழித்து விட்டால் இந்தப் பெண்ணினுடைய கண் அழகு பெறுமா என்று வேறொரு பொருள் தொனித்தது. மடவரலின்கண் பெண்ணினிடத்தில், பெண்ணின் கண்கள்.

கோட்டை - துருக்கம்

மருக்கொண்ட நீபத் தொடையினன்
காந்த மலையினில்வேள்
கருக்கென்று தைக்கும் பகழியாற்
செய்யமர்ச் சூழலிலே
குருக்கொண்ட மேனி இவள்இன்னல்
கண்டிலள்; கோட்டையுறு
துருக்கம் கெடுத்தனள் தாய்; அவள்
பேதைமை சொல்வதென்னே.

மருக் கொண்ட நீபத் தொடையினன் – மணத்தைப் பெற்ற கடம்ப மாலையை அணிந்த முருகன். வேள்– காமன். பகழியால் – மலரம்பினால். செய் அமர்ச் சூழலிலே – செய்கின்ற போர் சூழ்ந்த நிலையில். குரு– நிறம். இவள் – இந்தத் தலைவியினது. கோட்டை உறு துரு கம் கெடுத்தனள் – கொம்பைப் பெற்ற ஆட்டின் தலையை வெட்டச் செய்தாள். அவள் பேதைமை

சொல்வது என்னே – அவளுடைய அறியாமையை என்னவென்று சொல்வது!

மன்மதன் செய்யும் போரில் கோட்டையிலுள்ள அரண்களைக் கெடுத்து விட்டாள்; அவள் அறியாமை என்னே என்று வேறு ஒரு பொருள் தொனித்தது. கோட்டை உறு துரு கம் – கொம்பைப் பெற்ற ஆட்டின் தலையை; துரு – ஆடு; கம் – தலை. கோட்டை உறு துருக்கம் – கோட்டையில் உள்ள அரண்களை; துருக்கம் அரண்கள்.

*சுந்தரன் - சம்பந்தன் - அப்பர்*

*ஒப்பரி தாய ஒருவன் திருக்காந்த*
*ஓங்க்லிலே*
*துப்புள னாகிய சுந்தரன் றன்னைத்*
*துருவி அறிந்து*
*இப்பெண் ணுடன்மணச் சம்பந்த னாக்கிஇங்*
*கீதலின்றி*
*அப்பரைக் கொல்லத் துணிந்தனள் அன்னை;*
*அவலம்இதே.*

ஓங்கலில் – மலையில். துப்பு உளனாகிய சுந்தரன் தன்னை – வலிமை உடையவனும் அழகனுமாகிய தலைவனை. துருவி அறிந்து - ஆராய்ந்து தெளிந்து. இப்பெண்ணுடன் – இந்தத் தலைவியுடன். மணச் சம்பந்தன் ஆக்கி இங்கு ஈதல் இன்றி – திருமணத் தொடர்புடைய கணவனாக்கி இவ்விடத்தில் இவளைக் கொடுத்தல் இல்லாமல். அப்பரை – ஆட்டை. அவலம்– துன்பம்.

சுந்தரன், சம்பந்தன், அப்பர் என்ற மூன்று நாயன்மார்களுடைய பெயர்கள் தொனித்தன.

## அஞ்சு-ஆறு-மூன்று-ஒன்று

வெஞ்சமந் தன்னிற் கொடுஞ்சூ ரனைக்கொன்ற
வேல்முருகன்
தஞ்சம் அருள்காந்தக் குன்றினி லேராசி
சக்கரத்தில்
அஞ்சையும் ஆறையும் மூன்றாக் குதலின்றி
ஆதிஒன்றை
எஞ்சிடச் செய்ய நினைத்தனள் அன்னை;
எவன்செய்வதே.

வெம் சமந்தன்னில் – கொடிய போரில். தஞ்சம் அருள் – அடைக்கலம் வழங்குகின்ற. ராசி சக்கரத்தில் - பன்னிரண்டு ராசிகள் உள்ள சக்கரத்தில். அஞ்சையும் ஆறையும் மூன்று ஆக்குதல் இன்றி – ஐந்தாவது ராசியாகிய சிங்கத்தையும் ஆறாவது ராசியாகிய கன்னியையும் மூன்றாவது ராசியாகிய மிதுனம் ஆக்குவதில்லாமல்; சிங்கம் போன்ற தலைவனையும் கன்னியாகிய தலைவியையும் ஒன்றாக இணையச் செய்யாமல் என்பது கருத்து; மிதுனம் – இணை. ஆதி ஒன்றை – ஆதியாக உள்ள ஒன்றாகிய மேடத்தை; ஆட்டை. எஞ்சிடச் செய்ய - இறந்து படச் செய்ய.

சிங்கம், கன்னி, மிதுனம், மேடம் என்னும் ராசிகளை அவற்றின் நிலையைக் குறிக்கும் எண்களால் சுட்டியது ஒரு நயம்.

## ஆனை - சிங்கம் - ஆடு

ஊனை உருக்கும் திருப்புகழ்ப் பாடல்
உவந்தபிரான்
தேனையும் பாகையும் போன்மொழி வள்ளி
திருக்கணவன்
தானுறு காந்த மலையில்யாய் ஆனையைத்
தாக்கியஅன்

பானசிங் கத்தை அறிந்திலள்; ஆட்டை
அரிந்தனளே.

ஊனை - உடம்பை. யாய் - தாய். ஆனையைத் தாக்கிய அன்பான சிங்கத்தை - ஆனையைப் பொருது ஓட்டிய அன்பையுடைய சிங்கம் போன்ற தலைவனை. தோழியும் தலைவியும் தினைப்புனம் காத்துக் கொண்டிருந்த பொழுது ஒரு மதயானை அவர்களைத் துரத்த, அவர்கள் அஞ்சி ஓடியபொழுது தலைவன் எதிர்ப்பட்டு அந்த யானையைப் பொருது ஓட்டி அவர்களைக் காப்பாற்றினான். அது முதல் தலைவி அவன் மேல் காதல் கொண்டாள். இந்த நிகழ்ச்சியை எண்ணி இவ்வாறு சொன்னாள் தோழி. இதைக் களிறு தருபுணர்ச்சி என்று அகப்பொருள் நூல் கூறும்.

ஆனையைத் தாக்கிய சிங்கத்தை அறிந்திலள்; ஆட்டை அரிந்தனள் என்றதில் சிங்கம், ஆடு என்ற வேறுபாடும் அறிதல், அரிதல் என்னும் வல்லின இடையின வேறுபாடும் வந்தது ஒரு நயம்.

## ஆடி - ஆனி

நாடிய யோகியர் உள்ளத் திருமலர்
நண்ணுகுகன்
வீடெனக் கோயில்கொள் காந்த மலையினில்,
வேதனையில்
நீடிய மங்கை மணஞ்செய் செயலை
நினைந்திலள்யாய்;
ஆடியை ஆனி செயல்பிழை என்றே
அறிந்திலளே.

உள்ளத் திருமலர் - இதய புண்டரிகம். வீடு என- தனக்குரிய படை வீடு என்று. வேதனையில் நீடிய மங்கை - துயரத்தில் நெடுங்காலம் ஆழ்ந்துள்ள தலைவி

மணம் செய் செயலை – தன் தலைவனை மணம் புரிந்து கொள்ளும் மங்கல காரியத்தை. யாய் – தாய். ஆடு இயை ஆனி செயல் பிழை – ஆட்டினிடம் பொருந்துகின்ற கொலையாகிய ஹானியைச் செய்வது பிழை; ஆட்டைப் பலி கொடுத்தல் பிழை என்றபடி.

ஆடி மாதத்தை ஆனி மாதமாகச் செய்தல் பிழை என்ற பொருள் தொனித்தது.

## அசத்து - சத்து

நிசத்தை அறிந்தவர்க் குள்ளுணர் வாகும்
 நிமலகுகன்,
தசத்தின்மேல் ஓரிரண் டாங்கரன், வாழ்காந்தத்
 தாழ்வரையில்
புசத்தை மலையெனக் கொள்வெற்பன் காதற்
 புணர்ப்பறியாள்
அசத்தை அரிந்தனள்: சத்தை அறிந்திலள்
 அன்னை என்னே!

நிசத்தை – மெய்ப் பொருளை. தசத்தின் மேல் ஓரிண்டு ஆம் கரன் – பன்னிரண்டு திருக்கரங்களை உடையவன். புசத்தை மலை எனக் கொள் வெற்பன் – தோள்களை மலை என்னும்படி திண்ணியனவாகப் பெற்ற குறிஞ்சி நிலத் தலைவனுடைய. காதற் புணர்ப்பு அறியாள் – காதலின் தொடர்பைத் தெரிந்து கொள்ளாமல். அசத்தை அரிந்தனள் – ஆட்டை வெட்டினாள். சத்தை அறிந்திலள் – உண்மையை உணரவில்லை.

அசத்தாகிய நிலையாததைப் போக்கினாள்; ஆனால் சாத்தாகிய நிலைபெற்ற பொருளை அறிந்திலள் என ஒரு பொருள் தொனித்தது.

## தகராலயம் —காதல்

*சிகரா லயம்பெறு காந்த மலைக்குகன்*
*சேவடியை*
*நிகர்ஆர் மலர்கொண்டு பூசித் திலாரென*
*நீர்மையின்றி*
*மகரா லயமுர சான்றுயர் போக*
*மறியறுத்தால்*
*தகரா லயம்பெற்றுக் காதலின் பந்தரும்*
*சால்புறுமே.*

சிகர ஆலயம் பெறு – கோபுரத்தோடு கூடிய திருக்கோயிலைப் பெற்ற. நிகர் ஆர் – ஒளி நிறைந்த. நீர்மையின்றி – நல்ல இயல்பு இல்லாமல். மகராலய முரசான் துயர்போக – கடலாகிய முரசை உடைய காமன் செய்யும் மையலாகிய துயர் போவதற்கு; மகராலயம் – மகரத்துக்கு இருப்பிடமான கடல். மறி அறுத்தால் – ஆட்டை வெட்டினால். தகராலயம் பெற்றுக் காதல் இன்பம் தரும் சால்பு உறுமே – இந்த ஆடா மரணத்தை அடைந்து தலைவிக்குக் காதலின் பத்தைத் தரும் தகுதியை அடையும்; ஆட்டை வெட்டினால் இவளுக்குக் காதலின்பம் உண்டாகுமா என்பது கருத்து. தகரா – ஆடா; லயம் – மரணம்.

தகராலயம் என்றது தகராகாசம் உள்ள இடமாகிய இதயக்குகை. அது ஞானம் கைவந்தவர்களால் அறிந்து இன்புறத்தக்கது. தகராலயம் பெற்றால் காதலின்பம் வருமா என்ற பொருள் ஈற்றடியில் தொனித்தது.

## அங்கி-அங்கியின் ஊர்தி

பிமரம் கெடுக்கின்ற காந்த மலையிற்
  பிறங்குகுகன்
சமரம் பொரும்அசு ரர்குல காலனைத்
  தாழ்ந்திலர்போல்
குமரி இவர்பிரி வாம்அங்கி போக்கக்
  குறித்திலள்யாய்;
அமரும்அவ் வங்கியின் ஊர்தியைக் கொன்றாள்
  அறிவிலளே.

பிமரம் – பிரமம்; மயக்கம்; "பிமரம் கெடமெய்ப் பொருள்பே சியவா" (**கந்தர் அநுபூதி**). பிறங்கு– விளங்குகின்ற. சமரம் பொரு – போர் புரிகின்ற. தாழ்ந்திலர்போல் – வணங்காதவர்களைப் போல். குமரி இவள் – இந்தத் தலைவியினுடைய. பிரிவாம் அங்கி –தலைவனைப் பிரிந்த பிரிவுத் துன்பமாகிய தீயை; அங்கி – அக்கினி. அங்கியின் ஊர்தியை – அக்கினி பகவானின் வாகனமாகிய ஆட்டை.

அக்கினியைப் போக்காமல் அவன் வாகனத்தைப் போக்கினள் என்றது ஒரு நயம்.

## ஏழகம்-ஓரகம்

ஏழுல கும்புகழ் செப்பும் குமாரன்,
  இளமுருகன்
ஏழுல கும்செலும் ஆணையன், காந்த
  இறும்பினிலே
ஏழுகை யான்என மாமயல் ஏற
  இரங்கும்இவட்கு
ஏழகம் போக்கிடின் ஓரக வாழவுறல்
  எவ்வண்ணமே.

இரும்பு – மலை. ஏழுகையான் என மாமயல் ஏற – ஏழு கையையுடைய அக்கினியைப் போலப் பெரிய காம மயக்கம் மிகுதியாக. இரங்கும் இவட்கு – அதனால் வருந்தும் இந்தத் தலைவிக்கு. ஏழகம் போக்கிடின் - ஆட்டைப் பலி கொடுத்தால். ஓர் அக வாழ்வுறல் – ஓர் இல்லற வாழ்வு உண்டாதல்; அகம் – இல்லம். இவள் திருமணம் செய்து கொண்டு இல்வாழ்க்கையை நடத்துவதுதான் பரிகாரம், அதற்கும் இந்த ஆட்டைப் பலி கொடுப்பதற்கும் என்ன சம்பந்தம் என்றாள்.

ஏழு வீட்டைக் குலைத்தால் ஒரு வீட்டு வாழ்வு எவ்வாறு வரும் என்று வேறு ஒரு பொருள் தொனித்தது.

## 'பன்'னர் கி.வா.ஜ.

*'நெடுநெல்வாடை'* கல்லூரியில் பாடமாக வைக்கப்பட்டிருந்தது. புத்தக லிஸ்டில் ஆங்கிலத்தில் 'NEDU NAL VADAI' என்று அச்சிடப்பட்டிருந்தது. மாணவன் படித்தான்: நெடு நாள் வடை.

'ம' வுக்கு முன்னே 'ப' வருகிறது. அதனால் தான் (திரு)மணத்திற்கு முன்னே பணம் மிகவும் தேவையாகிறது.

வெகு வேகமாக ஓடி வந்த பையன், தந்தையிடம் கூறினான்: 'அப்பா! கவர்னர் என்னோடு பேசினார்!' தந்தை: 'கவர்னர் உன்னோடு பேசினாரா? என்ன?... எப்படி?' பையன்: 'ஆமாம் அப்பா' அவருடைய கார் வரும் பொழுது குறுக்கே ஓடினேன். 'போடா! முட்டாள்!' னு கவர்னர் என்னிடம் பேசினார்!

## அம்மானைப் பாடல்கள்

அம்மானைக் காய்களை வைத்துக் கொண்டு ஆடும் மூன்று பெண்கள் பாடுவதாக அமைந்தது அம்மானைப் பாட்டு. ஒருத்தி ஒரு செய்தியைச் சொல்ல, மற்றொருத்தி ஒரு வினாவை எழுப்ப, மூன்றாமவள் அதற்கு விடை கூறுவாள். அந்த விடையில் இரண்டு பொருள் தோன்றும். கலம்பகம் என்ற பிரபந்தத்தில் அம்மானை என்ற உறுப்பு உண்டு. தனியே அம்மானைப் பாடல்கள் அடங்கிய **'மூவர் அம்மானை'** என்ற நூல் ஒன்றும் இருக்கிறது. கீழ்வரும் பாடல்களில் ஈற்றடிகளில் சிலேடை நயம் அமைந்திருப்பதைக் காணலாம்.

### ஐயம் எடுத்தான்

கற்பக வல்லி
  கலந்த சிவபெருமான்
பொற்புறவே ஓடுகையில்
  பூண்டனன்காண் அம்மானை;
பொற்புறவே ஓடுகையில்
  பூண்டனனே ஆமாயின்
இற்புறமே ஐயம்
  எடுத்தானோ அம்மானை!
எண்ணினர்பால் ஐயம்
  எடுத்தான்காண் அம்மானை!

கற்பகவல்லி - மயிலாப்பூர்த் திருக்கோயிலில் எழுந்தருளிய அம்பிகை. சிவபெருமான்-கபாலீசுவரன். ஓடு-பிரமகபாலம். இற்புறமே ஐயம் எடுத்தானோ - வீட்டிற்கு வெளியே வந்து பிச்சை எடுத்தானா. எண்ணினர்பால் ஐயம் எடுத்தான்-தன்னைத் தியானித்தவர்களிடம் பிச்சை எடுத்தான் என்பது தொனிப் பொருள். சந்தேகங்களை நீக்கினான் என்பது இயல்பான பொருள். ஐயம்-பிச்சை, சந்தேகம்.

## இரண்டு வடு

கச்சிப் பதியாளன்
 காமக் கண்ணிநாதன்
நச்சிஒரு மாவின்கீழ்
 நண்ணினன்காண் அம்மானை;
நச்சிஒரு மாவின்கீழ்
 நண்ணினனே யாமாயின்
இச்சையுறு காய்கனிகள்
 எய்தினனோ அம்மானை?
இரண்டுவடு எய்தி
 இருந்தானங் கம்மானை.

கச்சிப்பதியாளன்-காஞ்சிபுரத்தில் உள்ள இறைவன். காமக்கண்ணி நாதன்-காமாட்சியின் கணவன். நச்சி - விரும்பி. ஒரு மா-ஏகாம்பரம். இரண்டு வடு எய்தி - இரண்டு மாவடுக்களைப் பெற்று என்பது தொனிப் பொருள். இறைவியின் நகில் தழும்பும் வளைத் தழும்புமாகிய இரண்டு வடுக்களை அடைந்தான் என்பது இயல்பான பொருள்.

வடு - மாவடு, தழும்பு.

## மானிடன்

மையற் பிணிதவிர்க்கும் மாமயிலைக் காபாலி
ஐயம் எடுத்தே அலைந்தனன்காண் அம்மானை;
ஐயம் எடுத்தே அலைந்தனனே ஆமாயின்
வையத்தார் தேவாய் மதிப்பாரோ அம்மானை?
மானிடனாய் எண்ணி வழிபட்டார் அம்மானை.

மையல் பிணி–மயக்கமாகிய நோயை. ஐயம் எடுத்தே_பிச்சையெடுத்தே. வையத்தார் – பூமியில் உள்ளவர்கள். தேவாய் – தெய்வமாய். மானிடனாய் எண்ணி – மனிதனாக எண்ணி என்பது தொனிப் பொருள்; மானை இடப்பக்கத்தில் ஏந்தியவனாகத் தியானித்து என்பது இயல்பான பொருள்.

மானிடன், மான் இடன்.

## குறைமதியன்

வாய்த்த புகழ்மயிலை
மாதேவன் தன்காற்கீழ்த்
தேய்த்ததொரு திங்களைத்தன்
சென்னிவைத்தான் அம்மானை;
தேய்த்ததொரு திங்களைத்தன்
சென்னிவைத்தான் ஆமாயின்,
கோத்த அறிவிற்
குறையுண்டோ அம்மானை?
குறைமதியன் என்றெவரும்
கூறுவர்காண் அம்மானை.

இறைவன் தக்கயாக சங்காரத்தின்போது சந்திரனைக் காலால் தேய்த்தான் என்பது புராண வரலாறு. திங்கள்_சந்திரன். காலால் தேய்த்ததைத் தலையில்

வைத்துக் கொண்டானாதலின், அறிவிலே குறை உண்டோ என்று கேட்டாள்.

குறை மதியன் – குறைவான புத்தியுடையவன் என்பது தொனிப் பொருள்; குறைவாக உள்ள பிறைச்சந்திரனை அணிந்தவன் என்பது பொருந்தும் பொருள்.

### அஞ்சக்கரன்

மாதேவ னுந்துளவ மாலும் ஒருவரென
வேதாந்தம் பேசி விளக்குமே அம்மானை;
வேதாந்தம் பேசி விளக்குமே ஆமாயின்
ஆதாரம் ஏதும் அறைவதுண்டோ அம்மானை?
அஞ்சக் கரனென்ப தாதாரம் அம்மானை!

துளவமால் – துழாய் மாலையை அணிந்த திருமால். வேதாந்தம் - உபநிடதம். அஞ்சக்கரன் என்று இருவரையும் சொல்வதே ஆதாரம் என்றபடி. அஞ்சக்கரன் – அஞ்சுஅக்கரன் (பஞ்சாட்சரத்தின் பொருளாக உள்ள சிவ பெருமான், அம் சக்கரன் (அழகிய சக்கராயுதத்தை உடைய திருமால்) என்று இருவருக்கும் பொருந்துவது காண்க.

### அன்னம் காணார்

திருத்தமுறு மாமயிலைச்
சீரார் கபாலியார்
உருத்துவரு நஞ்சமுதாய்
உண்டனர்காண் அம்மானை;
உருத்துவரு நஞ்சமுதாய்
உண்டனரே ஆமாயின்,
அருத்தும் உணவேதும்
ஆர்ந்திலரோ அம்மானை?
அன்னங்கா ணார்என்
றறைகுவரே அம்மானை.

திருத்தம் – செப்பம்; தீர்த்தமும் ஆம். உருத்துவரு – கோபித்து வந்த. நஞ்சு அமுதாய் உண்டனர் – ஆலகால விஷத்தை உணவாக உண்டார். அருத்தும் – உண்ணச் செய்யும். ஆர்ந்திலரோ – உண்ணவில்லையோ. அன்னம் காணார் – சோற்றைக் காணாத பட்டினி உடையார் என்பது தொனி; அன்னமாக உருவெடுத்த பிரமனால் காணப்படாதவர் என்பது இயல்பான பொருள்.

## ‘பன்’னர் கி.வா.ஜ.

‘குழந்தைகளே! நீங்கள் குறைந்தது 500 குறட்பாக்களையாவது மனப்பாடம் செய்து கொள்ள வேண்டும்!’ ஓர் அரசியல்வாதி ஆரம்பப் பள்ளியில் வழங்கிய அறிவுரை. உயர்நிலைப் பள்ளியில் அதே அரசியல்வாதி கூறினார்: ‘மாணவச் செல்வங்களே! நீங்கள் 1000 குறட்பாக்களையாவது கற்று செம்மை பெற வேண்டும்!’ என்றார். கல்லூரியில் அதே அரசியல்வாதி முழங்கினார்: ‘இளங்காளைகளே! இந்நாட்டின் கண்களே! உங்கள் வாழ்வு வளம் பெறக் குறைந்தது 2000 குறட்பாக்களை–யாவது கற்று மேன்மை பெறல் வேண்டும்!’ என்றார். அவையில் எழுந்த சிரிப்பொலி அடங்கப் பல நிமிடங்கள் ஆனது. 2000 குறட்பாக்கள் எங்கே? சில அரசியல்வாதிகளின் அறிவுரைகள் இப்படி ‘தமிழே’ புரியாமல் நாட்டில் உலவுகின்றன.

## பின் சேர்க்கை

### தட்டை இலை

ஒரு சமயம் நண்பர் வீட்டில் சென்று விருந்துண்ணு கையில் வழக்கமாகப் போடும் இலைக்குப் பதிலாக இந்த முறை. தட்டில் உணவைப் பரிமாறினார்கள். இவர் சிரித்துக் கொண்டே "உங்களுக்கு எப்பொழுதுமே தட்டை இலை" என்று சொன்னபோது உபசரித்த வீட்டினர் அளவில்லா மகிழ்ச்சி அடைந்தனர்.

(தட்டை இலை - தட்டுப்பாடே இல்லை; பணத் தட்டுப்பாடே இல்லை; உண்ணுவதற்கு இலைக்குப் பதிலாக தட்டை உபயோகித்தல்)

### "படி, படி"




ஒரு சமயம் பாரதியார் விழாவில் "ஒரு படி மேலே" என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றி விட்டுத் திரும்பி நடந்து வருகையில் சில படிகளில் இறங்க வேண்டியிருந்தது. இவர் படிகளைக் கவனிக்கவில்லையோ என்று ஐயுற்ற ஒரு சிறுவன், "படி படி" என்று இவரிடம் குறிப்பிட்டான். இவர் சிரித்துக் கொண்டே, "எவ்வளவு நல்ல அறிவுரை! நான் எப்பொழுதுமே மாணவனாக இருக்க ஆசைப்

படுகிறேன். அதைத்தான் நீயும் வலியுறுத்துகிறாயோ?" என்று சிரித்துக் கொண்டே நன்றி கலந்த பார்வையோடு படிகளில் இறங்கினார்.

## அப்படியே எடுத்துக் கொண்டு செல்கிறாயா?

அல்லயன்ஸ் மணி தன்னுடைய புதல்வருடன் ஒரு சமயம் இவரைக் காண இவர் வீட்டிற்குச் சென்றிருந்தார். பேசிக் கொண்டு இருக்கையில் காபி கொடுத்தனர். திரு. மணி அதைச் சாப்பிட்டு விட்டு அருகில் டம்ளரை வைத்து விட்டு மீண்டும் அவருடைய குடும்பத்தினரிடம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது இவர் தன்னுடைய அறையிலிருந்து வெளியில் வந்து குனிந்து அந்த டம்ளரை எடுத்தார். அதற்குத் திரு.மணி, "மாமா, நாங்கள் எடுத்துச் செல்கிறோம். நீங்கள் அதை எடுக்க வேண்டாம்" என்று கூறினார். அதற்கு இவர் "அப்படியே எடுத்துச் செல்லலாம் என்று பார்க்கிறாயா?" என்று நகைச்சுவையுடன் கேட்ட போது அங்கு இருந்த அனைவரும் சிரித்து விட்டனர்.

## செல்லப்பா

ஒரு சமயம் டாக்டர் சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் இவர் வீட்டிற்குச் சென்றார். அப்போது திரு.செல்லப்பனைக் கண்டதும் இவர், "செல்லப்பா என்றால் வந்து கொண்டே இருக்கிறீர்களே- சொன்னதைக் கேட்க மாட்டீர்களோ?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார். உடனே சிலம்பொலி செல்லப்பன் அவர்களும் சிரித்து விட்டார்.

## வைதிகரா?

ஒரு சமயம் இவரது நெடுநாளைய குடும்ப நண்பர் ஒருவர் இவரிடம் பேசிக் கொண்டிருக்கும்போது இவர், "உன் மகனுக்கு எப்போது திருமணம்?" என்று

கேட்டார். அதற்கு அவர், "நல்ல இடமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள்தான் திருமணத்தை முன்நின்று நடத்தித் தர வேண்டும்" என்றார். அதற்கு இவர், "நான் என்ன வைதிகரா?" (சாஸ்திரிகள்) என்றவுடன் அருகிலுள்ள அனைவரும் சிரித்து விட்டனர்.

* * *

## சாகரத்துக்கு.....

ஒரு சமயம் இவர் பவானிக்கு அருகிலுள்ள சாகரம் என்ற ஊருக்கு பஸ்ஸில் செல்லுகையில், கண்டக்டர் இவரைப் பார்த்து "எங்கு செல்ல வேண்டும்?" என்றார். அதற்கு "சாகரம்" என பதிலளித்தார். உடனே கண்டக்டர் ஒரு சீட்டைக் கிழித்து இவரது கையில் கொடுத்து, "இந்தாங்க சாகரத்துக்கு" என்றார். அதற்கு உடனே இவர், "சார்! நான் சாகரத்துத்துப் போகல, ஒரு சொற்பொழிவுக்காகச் செல்லுகிறேன்" என்றாராம்.

## இளைஞர்கள் பின் வாங்கக் கூடாது!

ஒரு சமயம் இவர் ஒரு கூட்டத்திற்கு சென்றிருந்த போது, அருகில் இருந்த திரு.குமரி அனந்தன் அவர்கள், சில பேப்பர்களை ஒன்று சேர்ப்பதற்காக, "பின் (pin) இருக்குமா?" என்று கேட்க, உடனே இவர், "இளைஞர்களெல்லாம் பின் வாங்கக் கூடாது" என்றார். திரு. குமரிஅனந்தன் விடாப்பிடியாக உடனே இவரைப் பார்த்து, "முதியோர்களெல்லாம் ஊக்கு வித்தால், இளைஞர்கள் பின்வாங்க மாட்டார்கள்" என்றாராம்.

## துப்பு ! துப்பு!

அல்லயன்ஸ் அதிபர் வி.குப்புஸ்வாமி ஐயர், எங்கு சென்றாலும் ஒரு காப்பியிங் பென்சில் ஒன்றை வைத்திருப்பார். ஏதாவது ஒரு முக்கியமான விஷயம், (துப்பு) கிடைத்தால் அதைக் கையில் குறித்துக் கொண்டு, கி.வா.ஜ. அவர்களிடம் அது குறித்து ஆலோசனை செய்வது வழக்கம். இப்படி ஒருசமயம் அல்லயன்ஸ் ஐயர் இடது கையில் குறித்துக் கொண்ட விஷயத்தை கி.வா.ஜ.

அவர்களிடம் காட்டி, "துப்பு கிடைத்து விட்டது! துப்பு, துப்பு" என்று கூறினார். உடனே கி.வா.ஜ. "நீங்கள் பெரியவர். உங்கள் கையில் நான் எப்படி துப்புவது? நீங்கள் துப்புங்கள், நான் ஏந்திக் கொள்கிறேன்" என்று சிரித்துக்கொண்டே தன் இரண்டு கைகளையும் நீட்டினார்.

## தண்டனை

ஒரு சமயம் சொற்பொழிவில் கி.வா.ஜ. அவர்கள் கூறியது:

பிறர் மனம் தெரியச் செய்வது குற்றம். குற்றத்திற்கு அரசன் தண்டனை வழங்குவான்.

தன் மனம் தெரியச் செய்வது பாபம் - பாபத்திற்கு தெய்வம் தண்டனை அளிக்கும்.

நமது மனமும் தெரியாமல் செய்வது அறியாமை. அறியாமைக்கு நம்மை நாமே தண்டித்துக் கொள்ள வேண்டும்.

## 'மாலை' போனபின் பழம் கொடுத்தார்

தமிழ்நாட்டிலுள்ள பல சைவ மடத்துத் தலைவர்கள் கூடி குன்றக்குடி மடாதிபதிக்கு ஒரு பாராட்டு விழா நடத்தினார்கள். விழா, மாலை தொடங்கி இரவு வரை நடந்தது. எல்லோரும் ரோஜாப்பூ மாலைதான் அணிவித்தார்கள். ஒரே ஒரு அன்பர் மட்டும் இரவு ஏழு மணி சுமாருக்கு ஆப்பிள் பழம் ஒன்று கொண்டு வந்து கொடுத்து மரியாதை செலுத்தினார்.

அன்று பாராட்டுரை வழங்கிய இவர் இது குறித்துக் கூறியது:

"எல்லோரும் மாலைக் காலத்தில் மாலை போட்டார்கள். ஒரே ஒருவர் மட்டும் மாலைக் காலம் போய் விட்டதைப் புரிந்து கொண்டு 'பழம்' கொடுத்தார். அது தான் சரி. அவர் மாலை வாங்கத் தாமதமாகச் சென்றிருப்பார். அதற்குள் மலர் காய்த்துப் பழுத்திருக்கும்!"

## நானும் பாட்டாளியே

கலைவாணர் அரங்கத்தில் தொழிலாளர் சங்க விழாவில் ஒரு கவியரங்கம். அதற்குத் தலைமை: கி.வா.ஜ. தலைப்பு: 'பாட்டாளி.' தொழிலாளர்கள் திரண்டு வந்திருந்தனர். "நானும் உங்களைப் போல ஒரு பாட்டாளிதான். காரணம், பாட்டால் (கவிதையால்) உங்கள் மனத்தை ஆளவந்திருக்கிறேன்" என்று தன் உரையைத் துவக்கினார் கி.வா.ஜ.

## சர்வீஸ் செய்ய வாய்ஸ்

ஒரு சமயம் திரு.பித்துக்குளி முருகதாஸ் அவர்களை பாராட்டி விழாவில் இவர் பேசியது:

"மக்களுக்கு இசை மூலம் இன்று உணர்ச்சி ஊட்டும் பணியில் தனது தொண்டை (Service) தொடர்ந்து செய்வதற்காகத் தான் இந்த அறுபதாவது வயதிலும் இறைவன் பித்துக்குளி முருகதாஸ் அவர்களுக்குத் தொண்டை (Voice) அளித்து இருக்கிறான்"

## உரிய இடத்துக்கு வந்த மகுடம், சிலம்பு-செங்கோல்.

மயிலை பாரதீய வித்யா பவன் அரங்கில் சிலப்பதிகாரச் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்திய ம.பொ.சிக்கு ஒரு பாராட்டு விழா நடந்தது. அப்போது ம.பொ.சிக்குச் சிறிய வெள்ளிக் கிரீடம், வெள்ளிச் சிலம்பு, வெள்ளிச் செங்கோல் இவை மூன்றும் பரிசளிக்கப்பட்டன.

பாராட்டுரை வழங்கிய இவர் கூறினார்: "சிலப்பதிகாரத்தில் ஓர் அரசன் முடி இழந்தான். ஓர் அரசன் செங்கோல் இழந்தான். ஒரு குடிமகள் சிலம்பு இழந்தாள். செங்கோல் இழந்த அரசன் நெடுஞ்செழியன், முடி இழந்த அரசன் இளங்கோ. சிலம்பு இழந்த குடிமகள் கண்ணகி. ஆனால் பல ஆண்டுகள் கழித்து இவை எங்கும் போய் விடாமல் ஒருவரிடம் வந்து சேர்ந்து இருக்கின்றன. சேர்ந்த இடம் அவற்றிற்கு உரிய இடம் தான். இவற்றை அவர் இனி இழக்காமல் இருக்க வேண்டும்."

கி.வா.ஜ.வின் சமயோசித அறிவு அவையோரின் கரகோஷத்தைப் பெற்றது.

## முடி சூடிய கி.வா.ஜ.

மயிலையில் நடந்த ஒரு கம்பராமாயணப் பட்டி மண்டபத்திற்கு கி.வா.ஜ. நடுவராக இருந்தார்.

இறை வணக்கமாகப் பாடிய பாடல் ராமனுக்கு முடிசூட்டும் விழாப் பாடல். இவர் சிலேடையாக,

"இப்பாடலுக்கு ராமன் மட்டுமல்ல; நானும் பொருத்தமானவன்" எனக் கூறினார்.

காரணம் அப்பாடல் பாடும் போது கி.வா.ஜ. தற்செயலாக அவிழ்ந்த தனது குடுமியை முடிந்து கொண்டார். புரிந்து கொண்ட கூட்டத்தினர் கைதட்டி ரசித்தனர்.

**'சுருங்கச் சொன்னார்; உரக்கச் சிரித்தோம்'**

ஒரு விழாவில் இவர் கூறியது:

"பாரதீய சாகித்ய பரிக்ஷத்" என்ற அமைப்பில் விழா ஒன்று சென்னை தி.நகர் இந்தி பிரசார சபாவில் காந்திஜி தலைமையில் நடந்தது. அதற்கு வரவேற்புரை நிகழ்த்த வேண்டியவர் டாக்டர் உ.வே. சாமிநாதய்யர். அவரை அழைத்துக் கொண்டு ராஜாஜி மேடைக்குப் போகிறார். விழா சீக்கிரம் முடிந்து ராஜாஜியும் காந்திஜியும் வேறு நிகழ்ச்சிக்குச் செல்ல வேண்டிய அவசரம். அந்த நிலையில் காந்திஜியின் அருகில் நின்று கொண்டிருந்த திரு.மகாதேவ தேசாயைச் சுட்டிக்காட்டி "இவர் யார்?" என்று ராஜாஜியைத் திரு உ.வே.சா. கேட்டார். அவரைப்பற்றி விவரமாக அறிமுகம் செய்ய ராஜாஜிக்கு நேரம் இல்லை. எனவே, "உங்கள் பின்னால் வருகிற கி.வா.ஜ. உங்களுக்கு எப்படியோ அப்படித்தான் காந்திஜிக்கு அவரும்" என்று சுருக்கமாக ராஜாஜி அறிமுகம் செய்ததும் தமிழ்த் தாத்தா உரக்கச் சிரித்துவிட்டு என்னையும் திரும்பிப் பார்த்தார். அவர் அருகில் இருந்த நானும் சிரித்து விட்டேன்".

## சிலேடைப் போட்டி

வீனஸ் காலனியில் நடந்த வாரியாரின் புராணச் சொற்பொழிவின் இடையே ஒருநாள் வாரியார் எழுதிய நூல் ஒன்றை வானதிப் பதிப்பகத்தினர் வெளியிட்டனர். பாராட்டுரை புகல வந்த கி.வா.ஜ., பதிப்பாளர் வாரியார் சுவாமிகளுக்குப் பொன்னாடையைப் போர்த்தியதும் சிலேடையாக, "நூல் தந்த வாரியாருக்கு பதிப்பாளர் ஆடை தருகிறார்" என்றதும் அரங்கத்தில் கைதட்டல் எழுந்தது.

அடுத்து இறைவணக்கம் பாடிய சிறுமிக்கு கி.வா.ஜ. ஒரு பேனா பரிசளித்தார். இதைக் கண்ட வாரியார் உடனே தன் பங்குக்கு, "நாவால் பாடிய சிறுமிக்கு கி.வா.ஜ. பேனாவால் கௌரவிக்கிறார்" என்றதும் மறுபடியும் கைதட்டல் வானைப் பிளந்தது.

## உண்டியா ? வண்டியா ?

மகாவீரர் ஜெயந்தி சென்னை ராஜாஜி ஹாலில் கொண்டாடப்பட்டது. ஒரு நாள் முழுவதும் விழா. காலையில் சிலரும் மாலையில் சிலரும் பேசினார்கள்.

காலை விழாவுக்கு வந்திருந்த கி.வா.ஜ. மாலை விழாவில் பேச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இடைவேளையில் வீட்டுக்குச் சென்று வர எண்ணினார். ஒருக்கால் உணவுக்கு அங்கே ஏற்பாடு செய்திருக்கிறார்களோ என்ற ஐயமும் எழுந்தது. நிர்வாகியைக் கூப்பிட்டார்.

சிலேடையில் அவரிடம், "உண்டியா ? வண்டியா ?' என்றதும் அவர் ஒன்றும் புரியாமல் விழித்தார்.

சிரித்துக் கொண்டே கி.வா.ஜ. விளக்கினார். "உணவுக்கு ஏற்பாடு உண்டா? அல்லது வண்டி (கார்) மூலம் என்னை வீட்டுக்கு அனுப்புகிறீர்களா?"

அவர் உணவு உண்டு என்றதும், "உண்டால் திண்டு வேணும் எனக்கு (அதாவது தூக்கம் வரும்); ஆகவே வீட்டுக்கே போகிறேன்" என்றார்.

## இரண்டும் சிவப்பு

"வாரியார் விரிவுரை" என்ற தமிழ் நூல் வெளியீட்டு விழா ஆஸ்திக சமாஜத்தில் நடந்தபோது பாராட்டுவிழா புகல வந்த திரு. கி.வா.ஜ. பேச ஆரம்பித்தார்.

அவருக்கு மாலை அணிவிப்பதற்குப் பதிலாக வானதி பதிப்பக அதிபர் திரு. திருநாவுக்கரசு ஒரு பேனாவை அவர் கையில் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்ட திரு.கி.வா.ஜ., "செவ்வேள் முருகன் வாரியாருக்குப் பேச நாவு கொடுத்தான். நாவுக்கரசு எனக்குப் பேனா கொடுத்தார். முருகன் கொடுத்த நாவும் சிவப்பு. இவர் கொடுத்த பேனாவும் சிவப்பு" என்றதும் கூட்டத்தில் சிரிப்பு அலை மோதியது.

## நாங்கள் படும் பாட்டை...

நாங்களும் கட்டளைக் கலித்துறை, அந்தாதி, அனுபூதி, அலங்காரம் எல்லாம் பாடுகிறோம். அருணகிரிநாதரும் பாடினார். இரண்டுக்கும் என்ன வேறுபாடு?

நாங்கள், "படும் பாட்டை" பாட்டாகப் பாடுவோம். அருணகிரிநாதர் பாட்டை நம் மனசில் படும்படி

பாடினார். அதுதான் வேறுபாடு. "வீனஸ் காலனியில் அருணகிரிநாதர் விழாவில் கி.வா.ஜகந்நாதன் பேசியது.

## மனைவியைப் பாராட்டுவதில்லை!

ஒரு சமயம் இவர் ஒரு கூட்டத்தில் பேசியது:

"பெண்களை 'சுருதி' போன்றவர்கள் என்று என் ஆசிரியர் (உ.வே.சா) ஒப்பிட்டு இருக்கிறார்., சங்கீதக் கச்சேரியில் முதலில் தொடங்கிக் கடைசியில் முடிவது 'சுருதி' தான். சுருதி இல்லாமல் கச்சேரி இல்லை. அது போலத்தான் நமது இல்லத்தரசிகள் பின் தூங்கி முன் எழுந்து வாழ்க்கைக்கு ரசம் ஊட்டுகிறார்கள். கச்சேரியில் சுருதி போடுபவருக்குப் பாராட்டு இல்லை. அதுபோல தனக்கு உறுதுணையாக இருக்கும் மனைவியை யாரும் பாராட்டுவதில்லை.

## இறைவனுக்கு உதவி செய்த இரண்யன்!

ஒரு சமயம் கம்பன் கழக வகுப்பில் இவர் பேசியது:

"இரண்யனுக்கும் பிரகலாதனுக்கும் வாக்குவாதம் நடக்கிறது. 'கடவுள் எங்கிருக்கிறார்' என்று கேட்டான் இரண்யன். 'தூணிலும் இருப்பார்; துரும்பிலும் இருப்பார்' என்று பதில் கூறினான் பிரகலாதன். அப்போது தான் இறைவன் பயந்தார். எதற்கு? தூணிலும் துரும்பிலும் அவர் புக முடியாது என்பதாலா? இல்லை. இல்லை. 'நான், நான்' என்று எப்போதும் மார்தட்டும் இரண்யன் தனது நெஞ்சைத் தொட்டுக்காட்டி, 'என் நெஞ்சில் இருக்கிறானா?' என்று கேட்டுவிடப் போகிறானே என்று தான். காரணம், அவனது நெஞ்சில் அவர் புகுந்து விட்டால் அவன்

பக்தன் ஆகிவிடுவான். இறைவனை நெஞ்சில் வைத்தவனைக் கொல்ல முடியாதே! அதனால் தான் அவர் பயந்தார். நல்ல வேளை! இரண்யன் ஒரு தூணைக் காட்டி அவரைத் தப்புவித்தான். அதனால் தான் இறைவனுக்கே உதவி செய்தவன் இரண்யன் என்று கொள்ளலாம்".

## Corruption & Correction

கி.வா.ஜ. அவர்கள் ஒரு சமயம் கூறியது:

"அரசாட்சியில் இருப்பவர்களைப் பணமும் பதவியும் கெடுத்துவிடும். Power and Money Corrupt என்பது தற்கால அரசியல் பாடம். ஆனால் முற்காலம் அப்படி அல்ல. தசரதன் முதலிய அரசர்களை Corruption ஏன் ஆட்கொள்ளவில்லை? அவர்களை Correction செய்ய குருமார்கள், அதாவது வசிஷ்டர் போன்ற கற்றறிந்த நேர்மையான ஆசான்கள் இருந்ததால் தான்".

## நெருக்கமா? நெருக்கடியா?

மயிலையில் நடந்த ஒரு பாராட்டு விழாவில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. அதில் கலந்து கொண்டு பேசவந்த கி.வா.ஜ. வுக்கு மேடையில் தாராளமாக அமர்ந்து பேச இயலவில்லை. காரணம் அன்று பேச இருந்த பேச்சாளர்களும் அதிகம். எப்படியோ ஒண்டிக் கொண்டு அவர் அமர்ந்திருந்தார். அவர் பேசும்போது கூறியது:

"இன்று மேடையிலும் விழா அரங்கிலும் அதிகமாக மக்கள் குழுமியிருக்கிறார்கள். எனது நண்பர் என்ன

"நெருக்கடி" அதிகமாக உள்ளதே என்று என்னிடம் குறைப்பட்டுக் கொண்டார். அப்படிக் கூறுவது தவறு. மனம் ஒன்றுபட்டுக் கூடும் கூட்டத்தில் நெருக்கம் அதிகம் என்று கூறவேண்டும். மனம் வேறுபட்டவர்கள் கூடினால் அங்குதான் நெருக்கடி இருக்கும்".

## எலும்பும் மயிலையும்...

"அண்மையில் மயிலையில் ஒரு பெண்கள் கல்லூரியில் பேசும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அப்போது கண்ட காட்சி என் எலும்பை உருக்கியது. அக்கல்லூரி மாணவிகளில் பலர் உடலில் ஆடைமட்டுமல்ல, சதையே இல்லாமல் 'எலும்புக் கூடு' களாகக் காட்சி அளித்தார்கள்"

"திருஞானசம்பந்தர் மயிலையில் எலும்பைப் பெண்ணாக்கிய வரலாறு படித்திருக்கிறேன். ஆனால், அதே மயிலையில் பெண்களை எலும்பாக்கும் ரசவாதமும் தற்போது நடப்பது கண்டு மனம் வருந்தினேன்."

## ஏற்றுமதித்தால் ஏற்றுமதி

ஹா.கி.மாலம் என்ற கவிஞரின் நினைவு நாள் தி.நகரில் கொண்டாடப்பட்டது. அவரது கையெழுத்துப் பிரதிகள் அச்சில் ஏறாமல் இருப்பது பற்றி வருத்தம் தெரிவித்து கி.வா.ஜ. பேசியது:

"நாம் நல்ல அரும்பெரும் தமிழ் இலக்கியங்களை ஏற்று மதித்தால் தான் அவை பிற நாடுகளுக்கு

ஏற்றுமதியாகும். நாம் கவிதை - இலக்கிய வியாபாரியாக மாற வேண்டும்".

வெல்லம் இனிப்பானதானாலும் அவற்றை அச்சுப் போட்டு விற்றால் தான் பாகு வெல்லமாக மாறி விற்பனையாகும். அதுபோல தான் ஏட்டுச் சுவடிகளையும், கையெழுத்துப் பிரதிகளையும் அச்சுப் போட்டால் தான் பரவும் விற்பனையாகும். தமிழ் மக்கள் அதிகப் பிரதிகள் வாங்கிப் பிரதி உபகாரம் செய்ய வேண்டும்.

### உடல் குளிரும் - உள்ளம் குளிரும்

தமிழிலக்கியத்திற்கு சேவை செய்த சிலரைப் பாராட்ட மயிலை ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் ஒரு விழா நடந்தது. பரிசு பெற்றவர்களைப் பாராட்டிப் பேசிய கி.வா.ஜ. கூறிய சிலேடை அரங்கத்தில் கலகலப்பை ஏற்படுத்தியது.

"இங்கு பரிசு பெற்றவர்களுக்கு குளிர் பானம் அளித்தவர் தொழிலதிபர் பன்னீர்தாஸ். பரிசு வழங்கியவர் திரு.சந்தோஷம். சகோதரர்கள் ஒரு உண்மையைச் சொல்லாமல் சொல்லி இருக்கிறார்கள். இங்கே குளிர் பானத்தால் உடல் குளிர்ந்தது. பரிசால் உள்ளம் குளிர்ந்தது. இயற்கையும் அப்படித்தான், பன்னீரால் உடல் குளிரும். சந்தோஷத்தால் உள்ளம் குளிரும். இருவரும் உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே குளிர வைத்தனர்".

## கரன்சி நோட்டுகளும் கோயில் சிலைகளும்!

'விஷ்வஹிந்து பரிஷத்' கருத்தரங்கில் கி.வா.ஜகந்நாதன் பேசியது.

"கோயில்களில் உள்ள சிலைகளை நாம் 'தெய்வமாக' எண்ணி வணங்கினால் நிச்சயம் அவை நமக்கு அருளை அள்ளிக் கொடுக்கும். நமது மனது மட்டும் நிச்சயம் அவற்றை தெய்வம் என்றே நம்பவேண்டும். சிலை என்று எண்ணக்கூடாது.

கரன்சி நோட்டுக்களை நாம் பார்க்கும்போது, வாங்கும் போது, கொடுக்கும் போது அவற்றை 'காகிதம்தானே' என்றா எண்ணுகிறோம்? இல்லையே! பணம் என்றுதானே நம்புகிறோம். நினைக்கிறோம். உண்மையில் அவை பணம் இல்லையே! அவை பிராமிசரி நோட்டுக்கள் தானே! அவற்றில் எழுதியுள்ளதைப் படியுங்கள். என்ன எழுதியிருக்கிறது?

'I Promise to pay the Bearer the sum of...Rupees' என்று போட்டு ரிசர்வ் பேங்க் கவர்னரின் கையெழுத்து இருக்கிறது.

அதுபோல கோவில் சிலைகளை மதித்தால் அவை இறைவனிடம் நமக்கு அருளை வாங்கிக் கொடுக்கும்".

## கி.வா.ஜ. வின் ஆராய்ச்சி

கம்பன் விழாவில் கி.வா.ஜ.

கோசல நாடு நான்குவித புகை நிரம்பிய நாடு என்று சொல்லி அது, 'அறம் பொருள் இன்பம் வீடு' என்ற

நான்கு நெறிகளைக் கொண்ட நாடு என்பதை விளக்குகிறார் கம்பர்.

அதில் - சந்தனம் இடும் புகை, அட்டில் - சமையல் இடும் புகை, ஆலை தரும் புகை - கரும்பாலைப் புகை, நான்மறை புகலும் வேள்விப் புகை.

சந்தனப் புகைதான் இன்பச்சுவை-மணம் நிரம்பியது.

சமையல் புகைதான் அறச்சுவை - விருந்தோம்பல் அறநெறியைச் சாரும்.

கரும்பாலை புகைதான் - பொருள் சேர்க்கும் தன்மையது.

வேள்விப் புகைதான் வீடு (மோட்சம்) பெற உதவும்.

## பன்'னர் கி.வா.ஜ.

சேரமன்னன் ஔவைக்குத் தங்கத்தால் செய்யப்பட்ட 'ஆடு' ஒன்றைப் பரிசளித்தான். பரிசைப் பெற்ற ஔவை, 'சேரா உன்னாடு – பொன்னாடு! சேரா உன் ஆடு – பொன் ஆடு!' என்றாள். மன்னன் மகிழ்ந்தான்.

சிறைச்சாலை பல நல்ல நூல்கள் பிறந்த மூல இடமாக இருந்து வருகிறது. சிறைச்சாலை பல நூல்களைத் தந்திருக்கிறது. ஆனால் சிறையில் எழுதப்பட்ட 'முதல் புத்தகம்' எது? யாரால் எழுதப்பட்டது?
***விடை:*** *சிறையில் எழுதப்பட்ட முதல் நூல்: திருமுருகாற்றுப்படை.*
*எழுதியவர்: நக்கீரர்.*

சொல்லின் செல்வன்

## பி.என். பரசுராமன்

எழுதியது

1. வாரியார் சொற்பொழிவில் கேட்டவை I & II
2. விதுர நீதி
3. நீதி சதகம்
4. வைராக்கிய சதகம்
5. சனத்குமாரரின் உபதேசங்கள் (சனத்சுஜாதீயம்)
6. அஷ்டாவக்ரர் உபதேசங்கள்
7. பீஷ்மர் சொன்ன தத்துவக் கதைகள்
8. விபூதி, ருத்ராட்சம் மகிமை
9. ஞானிகள் வரலாறு
10. சித்தர்கள் சரித்திரம்
11. யட்சப் பிரச்னம், பிரச்னோத்ர ரத்னமாலிகா
12. "துணுக்" துணுக்குகள்
13. சித்ரகுப்தன் கதைகள்

## ஜாவர் சீதாராமன்

எழுதிய நூல்கள்

1. பணம் பெண் பாசம்
2. உடல் பொருள் ஆனந்தி
3. மின்னல் மழை மோகினி
4. நானே நான்
5. சொர்க்கத்தில் புயல்
6. காசே கடவுள்

அல்லயன்ஸ்